# தமிழ்

## ழகரம்

### முதல் பருவம்



**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
சென்னை – 600025.
www.tamilvu.org

# தமிழ்

## ழகரம்
## முதல் பருவம்

தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600025.

**தமிழ்நாடு அரசு**

**முதல்பதிப்பு** - 2025

**விலை:** ரூ. 290.00

## பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

## நூல் அச்சாக்கம்

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**

www.textbooksonline.tn.nic.in

**ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும்**
**(18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)**

**குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?**
**மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?**
**பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?**
**அழையுங்கள் குழந்தை உதவி எண்** 1098
**உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்**

**மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?**
**பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?**
**தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?**
**அழையுங்கள்** 14417
**உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்**

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்

சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்

தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்

தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!

அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற

எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

தமிழணங்கே!

உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

-'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.

# தமிழ்த்தாய் வாழ்த்து - பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும் பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப்பெண்ணே! தமிழ்ப்பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன்வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

| பாடம் | பாடப்பொருள் | பக்க எண் |
| --- | --- | --- |


1 **ஷெல்லியும் பாரதியும்** 1

**தெரிந்துகொள்வோம்:** பெயரெச்சம்
**கேட்டல் கருத்தறிதல்:** நேரம் தவறாமை
**செந்தமிழ்ச்செல்வம்:** கவிதை

2 **விசாரிப்பு (சிறுகதை)** 14

**தெரிந்துகொள்வோம்:** மரபுத்தொடர்கள்
**கேட்டல் கருத்தறிதல்:** செல்வத்துப் பயனே ஈதல்
**செந்தமிழ்ச்செல்வம்:** திருக்குறள்

3 **தமிழரின் உயரிய சிந்தனை** 23

**தெரிந்துகொள்வோம்:** வினையெச்சம்
**கேட்டல் கருத்தறிதல்:** இரக்கமுள்ள மனம்
**செந்தமிழ்ச்செல்வம்:** திருக்குறள்

4 **வேற்றுமையில் ஒற்றுமை** 35

**தெரிந்துகொள்வோம்:** இணைமொழிகள்
**கேட்டல் கருத்தறிதல்:** மூடுல் (MOODLE)
**செந்தமிழ்ச்செல்வம்:** நன்னெறி

5 **உறவின் மேன்மை** 47

**தெரிந்துகொள்வோம்:** வினை வகைகள்
**கேட்டல் கருத்தறிதல்:** அன்பு பரிசு
**செந்தமிழ்ச்செல்வம்:** திருக்குறள்

| பாடம் | பாடப்பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 6 | **சமூகப் பொறுப்பு**<br>தெரிந்துகொள்வோம்: நிறுத்தக்குறிகள்<br>கேட்டல் கருத்தறிதல்: குலுக்கல் பரிசு<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 57 |
| 7 | **மாசிலா உலகம் படைப்போம்**<br>தெரிந்துகொள்வோம்: ஒரு சொல் பல பொருள்<br>கேட்டல் கருத்தறிதல்: கிரேட்டா துன்பர்க்<br>செந்தமிழ்ச்செல்வம்: தனிப்பாடல் | 69 |
| 8 | **சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்**<br>தெரிந்துகொள்வோம்: மரபுத்தொடர்கள்<br>கேட்டல் கருத்தறிதல்: பறவைகளின் கலைக்களஞ்சியம்<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 80 |
| | **மீள்பார்வை – பயிற்சிகள்** | 90 |
| 9 | **நன்னூல் கூறும் ஆசிரியர் இயல்புகள்**<br>தெரிந்துகொள்வோம்: மூவகை மொழி<br>கேட்டல் கருத்தறிதல்: ஞானி<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 94 |
| 10 | **உலகக் கல்வியாளர்கள்**<br>தெரிந்துகொள்வோம்: பல சொல் ஒரு பொருள்<br>கேட்டல் கருத்தறிதல்: படி<br>செந்தமிழ்ச்செல்வம்: மூதுரை | 107 |

| பாடம் | பாடப்பொருள் | பக்க எண் |
| --- | --- | --- |
| 11 | **உலகளாவிய தொழிற்புரட்சி**<br>தெரிந்துகொள்வோம்: உவமைத்தொடர்கள்<br>கேட்டல் கருத்தறிதல்: விதை<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 119 |
| 12 | **சிறந்த தொழில் முனைவோர்கள்**<br>தெரிந்துகொள்வோம்: தன்வினை – பிறவினை<br>கேட்டல் கருத்தறிதல்: தொழில்<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 130 |
| 13 | **தமிழர் கட்டடக் கலை**<br>தெரிந்துகொள்வோம்: கருத்து மாறாத் தொடர்கள்<br>கேட்டல் கருத்தறிதல்: வள்ளுவர் கோட்டம்<br>செந்தமிழ்ச்செல்வம்: மூதுரை | 142 |
| 14 | **லுட்விக் வான் பீத்தோவன்**<br>தெரிந்துகொள்வோம்: நான்கு சொல் கொண்ட தொடர்கள்<br>கேட்டல் கருத்தறிதல்: இசை<br>செந்தமிழ்ச்செல்வம்: திருக்குறள் | 152 |
| | **மீள்பார்வை – பயிற்சிகள்** | 165 |

## பாடம் 1

## 1.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

உங்களுக்குப் பிடித்த கவிஞர்கள் குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடுக.


## 1.2 படிப்போம்





**ஷெல்லி**

(04.08.1792 – 08.07.1822)



**பாரதியார்**

(11.12.1882 - 11.09.1921)



# ஷெல்லியும் பாரதியும்

உலகில் நாம் காணும் மனிதர்கள், பொருள்கள், இடங்கள் ஆகியவற்றுடன் மற்றொன்றை ஒப்பிட்டுப் பார்ப்பது மனித இயல்பு. இவ்வாறு ஒப்பிடும் தன்மை கலை, இலக்கியங்களிலும் உண்டு.

## இலக்கியப் படைப்புகள் ஒப்பீடு

ஒரு படைப்பாளியின் படைப்புகளை மற்றொரு படைப்பாளியின் படைப்புகளோடு ஒப்பிட்டுக் காண்பது ஒப்பாய்வு ஆகும். படைப்புகளை ஒப்பிட்டு நிறைகுறைகளை எடுத்துக் கூறுதல் என்பது இதன் நோக்கம் அன்று. ஒவ்வொரு படைப்பின் சிறப்புக் கூறுகளையும் தனித்தன்மைகளையும் வெளிப்படுத்துவதே ஒப்பாய்வின் நோக்கமாகும். அதன் அடிப்படையில், நாம் உலகப் புகழ்பெற்ற கவிஞர்களான ஷெல்லி, பாரதி ஆகியோரின் படைப்புகளை ஒப்பிடலாம். இருவரின் படைப்புகள் காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்டவை. புனைவியல் (Romanticism) சார்ந்த கூறுகளில் இவ்விருவரும் கவனம் செலுத்தினர் என்பதை இவர்களின் படைப்புகள் வாயிலாக அறியலாம். ஷெல்லி மற்றும் பாரதியின் இலக்கியப் படைப்புகளில் காணப்படும் ஒற்றுமைகளை இப்பாடப்பகுதியில் காணலாம்.

## ஷெல்லியின் மீது பாரதி கொண்டிருந்த பற்று

பாரதியார், ஆங்கிலக் கவிஞரான ஷெல்லியின் கவிதைகளில் மிகுந்த ஈடுபாடும் ஆர்வமும் கொண்டிருந்தார். இதனால், ஷெல்லிதாசன் என்று ஒரு புனைபெயரைச் சூடிக்கொண்டார். ஷெல்லியின் பெயரில் சங்கம் ஒன்றை நிறுவினார். அச்சங்கத்தில் இருந்தவர்களுக்கு ஷெல்லியின் கவிதைகளைப் படித்துக் காட்டி, அவர்களை இன்புறச் செய்தார்.

### ஷெல்லியின் பிறப்பு

இங்கிலாந்து நாட்டில் வார்ன்ஹாம் என்னும் ஊரில் 1792 ஆம் ஆண்டு ஆகஸ்டு 4ஆம் நாள் ஷெல்லி பிறந்தார். மக்கள் இவரைத் தனித்துவமும் முரண்பாடும் உடைய கவிஞன் எனப் புகழ்ந்தனர்.

### ஷெல்லியின் படைப்புகள்

இவர் இளம் வயதிலேயே கவிதை எழுதும் திறன் பெற்று இருந்தார். சுதந்திரத்தின் பாட்டு (Ode to liberty), அராஜகத்தின் முகமூடி (The mask of Anarchy/ The Masque of Anarchy), மேல் காற்று (Ode to a west wind), இங்கிலாந்து மக்களுக்கான பாட்டு (Songs to the men of England) போன்ற பல கவிதை நூல்களை இவர் இயற்றி உள்ளார்.

### பாரதியின் பிறப்பு

இந்தியாவில் உள்ள தமிழகத்தில் எட்டயபுரம் என்னும் ஊரில் 1882ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் நாள் பாரதியார் பிறந்தார். இவரது இயற்பெயர் சுப்பிரமணியம் என்பதாகும். இவரது கவிதை புனையும் திறனைப் பாராட்டி, எட்டயபுர மன்னர் இவருக்குப் பாரதி என்னும் பட்டத்தைக் கொடுத்தார்.

### பாரதியின் படைப்புகள்

இளம் வயதிலேயே இவரும் கவிதைகள் எழுதும் திறன் பெற்றிருந்தார். பாப்பா பாட்டு, குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்றவை இவர் இயற்றிய கவிதை நூல்களாகும்.

## மொழி ஆளுமைத்திறன்

உலகமக்களின் நலனுக்காக இருவரும் உழைத்தனர். இதற்குத் தங்கள் தாய்மொழியைச் சிறந்த கருவியாகக் கையாண்டனர். சமூகச் சீர்கேடுகளையும் அவற்றைக் களையும் வழிமுறைகளையும் கவிதைகளாக எழுதி வெளியிட்டனர்.

## கருத்து ஒற்றுமை

இக்கவிஞர்கள் நாடு, மொழி, பண்பாடு முதலியவற்றால் வேறுபட்டவர்கள். ஆயினும், சமுதாய முன்னேற்றச் சிந்தனைகளில் கருத்து ஒற்றுமை உடையவர்களாக இருந்துள்ளனர். அவற்றுள் சிலவற்றை இங்குப் படித்து அறிவோம்.

## மனிதநேயம்

இக்கவிஞர்கள், மக்களிடத்தில் மனிதநேயக் கருத்துகளைப் பரப்பினர். மனிதர்களை வெறுக்கக் கூடாது; மனிதர்களிடம் உள்ள தீய குணங்களை மட்டுமே வெறுக்க வேண்டும் என்றனர். பின்வரும் கவிதை அடிகளால் இக்கருத்தை அறியலாம்.

| | |
|---|---|
| I hate thy want of truth and love,<br>How should I then hate thee? (Shelley) | பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே!<br>பகைவனுக்கு அருள்வாய்! (பாரதியார்) |

## பெண் விடுதலை

பெண்களுக்குச் செய்த கொடுமைகளையும், அடிமைத்தனத்தையும் இக்கவிஞர்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர். அவர்களை அக்கொடுமைகளில் இருந்து மீட்கவும் எண்ணியுள்ளனர். இதனைப் பின்வரும் அடிகள் உணர்த்துகின்றன.

| | |
|---|---|
| Can man be free if woman a slave? | பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லை என்றால்<br>பின் இந்த உலகினிலே வாழ்க்கை இல்லை. (பாரதியார்) |

## சமத்துவப் பண்பு

இக்கவிஞர்கள், ஏழை எளிய மக்களின் முன்னேற்றம் குறித்தும் சிந்தித்துள்ளனர். தங்களை மக்களிடத்தில் ஏழைகளின் நண்பர்களாகவே அறிமுகம் செய்துகொண்டனர். அனைத்து மக்களையும் சமமாக மதிக்கவேண்டும். அனைவரும் சமமாக வாழ வேண்டும். அனைவருக்கும் அனைத்து வளங்களும் உரிமைகளும் கிடைக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். இவற்றைப் பின்வரும் அடிகள் புலப்படுத்துகின்றன.

| | |
|---|---|
| I am the friend of the unfriended poor<br>Let me not madly stain their righteous cause ingore (Shelley) | ஏழை யென்றும் அடிமையென்றும்<br>எவனும் இல்லை ஜாதியில்,<br>இழிவு கொண்ட மனித ரென்பது<br>இந்தி யாவில் இல்லையே (பாரதியார்) |

## விடுதலை உணர்வு

அடிமைகளாக இருந்த மக்களிடத்தில் இவர்கள் விடுதலை உணர்வை ஊட்டினர். அவர்களை அடிமை வாழ்விலிருந்து மீண்டு எழச் செய்தனர். கீழ்க்காணும் அடிகளால் இவர்களின் விடுதலை வேட்கையை உணரலாம்.

| | |
|---|---|
| What is freedom? - ye can tell<br>That which slavery is, too well-<br>For its very name has grown (Shelley) | என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்<br>என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம் (பாரதியார்) |

இக்கவிஞர்கள், மேற்கண்டவாறு சமூகத்தை நல்வழிப்படுத்தி உள்ளனர். அவர்கள் இயற்றிய கவிதைகளைப் படிப்பதன் மூலம் நாம் அவர்களது உயர்ந்த சிந்தனைகளை அறிய இயலும்.

## பொருள் அறிவோம்

1. சங்கம் – அமைப்பு
2. பரப்பினர் – அறிவித்தனர்
3. எதிர்த்தனர் – மறுத்தனர்
4. வேட்கை – விருப்பம்
5. ஒப்பாய்வு – ஒத்துப் பார்த்தல்

## பயிற்சிகள்

### (அ) விடை காண்போம்

1. ஷெல்லியும் பாரதியும் சமத்துவப்பண்பு குறித்துத் தம் கருத்துகளை எவ்வாறு வெளிப்படுத்தினர்?
2. ஷெல்லியின் படைப்புகள் சிலவற்றை எழுதுக.
3. பாரதியின் படைப்புகள் சிலவற்றை எழுதுக.
4. பாரதி, ஷெல்லியின் மீது வைத்திருந்த ஈடுபாட்டை எவ்வாறு வெளிப்படுத்தினார்?
5. ஷெல்லிக்கும் பாரதிக்கும் இடையே இருந்த கருத்து ஒற்றுமைகளுள் இரண்டு எழுதுக.

### (ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக.

1. ஷெல்லி, பாரதியின் கவிதைமீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். (   )
2. இருவரும் மொழி ஆளுமைத் திறன் மிக்கவர்களாக இருந்தனர். (   )
3. ஷெல்லி பாஞ்சாலி சபதம் என்னும் நூலை இயற்றினார். (   )
4. பாரதி, ஷெல்லியின் பெயரில் சங்கம் ஒன்றை நிறுவினார். (   )

### (இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(ஷெல்லி, எட்டயபுர மன்னர், ஷெல்லிதாசன், பாரதியார்)**


1. பாரதி என்ற பட்டத்தை ________ வழங்கினார்.
2. பாரதி, ஷெல்லியின் மீது கொண்ட ஈடுபாட்டால் தமது பெயரை ________ என மாற்றிக்கொண்டார்.
3. ஷெல்லியின் பெயரில் சங்கத்தை நிறுவியவர் ________ ஆவார்.
4. மேல் காற்று என்ற நூலை எழுதியவர் ________ ஆவார்.

### (ஈ) எதிர்ச்சொல்லைச் சரியாகப் பொருத்துக.

1. நன்மை x விரும்பினர்
2. ஒற்றுமை x உடன்பட்டனர்
3. உயர்வு x தீமை
4. வெறுத்தனர் x வேற்றுமை
5. எதிர்த்தனர் x தாழ்வு


## 1.3 தெரிந்துகொள்வோம்

### பெயரெச்சம்




உரையாடலில் வந்துள்ள எழுதிய கவிதைகள், சிறந்த பாடல்கள், மாறாத அன்பு, தீராக்காதல் ஆகிய சொற்கள் பெயரெச்சங்கள் ஆகும்.

**பெயரைக்கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம்.**





வீட்டிற்கு **வந்த எழிலனைப்** பெற்றோர் வரவேற்றனர்.

இதில் **வந்த எழிலன்** என்பது இறந்தக்கால தெரிநிலைப் பெயரெச்சம்.

போட்டியில் **பாடுகின்ற சிறுமி** என் தோழி.

இதில் **பாடுகின்ற சிறுமி** என்பது நிகழ்கால தெரிநிலைப் பெயரெச்சம்.





வானில் **பறக்கும் பறவை** கிளி.

இதில் **பறக்கும் பறவை** என்பது எதிர்கால தெரிநிலைப் பெயரெச்சம்.

பிறந்தநாளுக்கு **அழகிய பரிசு** கிடைத்தது.

இதில் **அழகிய பரிசு** என்பது குறிப்புப் பெயரெச்சம்.





பூங்காவில் இருப்பது **ஓடாத குதிரை**.

இதில் ஓடாத குதிரை என்பது எதிர்மறைப் பெயரெச்சம்.

கல்வியே **அழியாச் செல்வம்** என்றார் ஆசிரியர்.

இதில் **அழியாச் செல்வம்** என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.





## பயிற்சிகள்

**(அ) கீழ்க்காணும் படங்களைப் பார்த்துப் பெயரெச்சத் தொடர் உருவாக்குக.**





பறக்கும் பறவை





**(ஆ) பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. பூக்கும் | - | அ) ஆசிரியர் |
| 2. வரைந்த | - | ஆ) மலர்கள் |
| 3. பறக்கின்ற | - | இ) ஓவியம் |
| 4. அழைத்த | - | ஈ) பறவை |

## 1.4 மொழியோடு விளையாடுவோம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | ⊘ | | ⊘ | ⊘ | |
| ⊘ | ⊘ | | ⊘ | 2 | | | |
| ⊘ | 3 | | | ⊘ | ⊘ | ⊘ | 4 |
| | ⊘ | | ⊘ | | | 5 | ⊘ |
| | ⊘ | ⊘ | 6 | ⊘ | ⊘ | | ⊘ |
| 7 | | ⊘ | | ⊘ | | | 8 |
| | ⊘ | ⊘ | | ⊘ | ⊘ | | ⊘ |
| 9 | ⊘ | 10 | | | | | ⊘ |

| **மேலிருந்து கீழ்:** | **இடமிருந்து வலம்:** |
|---|---|
| 1. மழலைக்கு வேறு சொல். (4)<br>5. வாகனங்கள் தரையில் செல்லப் பயன்படுவது. (5)<br>6. காட்டின் அரசன். (4) | 2. நகைகள் செய்யப் பயன்படும் உலோகம். (4)<br>3. விளையாட்டுப் பொருள்களுள் ஒன்று. (3)<br>7. ஏர் உழுவதற்குப் பயன்படுவது. (2)<br>10. முக்கனியுள் ஒன்று. (5) |
| **கீழிருந்து மேல்:** | **வலமிருந்து இடம்:** |
| 2. உடலின் முதன்மையான உறுப்பு (2)<br>4. வில்லோடு இருப்பது. (3)<br>9. நேரத்தைக் காட்டுவது. (5) | 1. கூவும் பறவை. (3)<br>5. கடலில் இருப்பது. (3)<br>8. கா.. கா... எனக் கரைவது. (3) |

### சுவைச்செய்தி

புலவர் பலர் தமிழுக்குத் தொண்டாற்றி உள்ளனர். அவர்களுள் இரட்டையர் குறிப்பிடத்தக்கவர்கள். இரட்டையரில் ஒருவர் பார்வைத் திறன் அற்றவர். மற்றொருவர் நடக்கும் திறன் அற்றவர். இவர்கள் எப்பொழுதும் இணைந்தே செல்வர். பார்வைத் திறன் அற்றவர் நடக்கும் திறன் அற்றவரைத் தோளில் சுமந்து செல்வார். நடக்கும் திறன் அற்றவர் வழி காட்டுவார். இவர்கள் கலம்பகம், சிலேடை முதலிய இலக்கியங்களைப் பாடியுள்ளனர். ஒரு பாடலின் முதல் இரண்டு அடியை ஒருவர் பாட, அடுத்த இரண்டு அடியை மற்றொருவர் பாடி முடிப்பார்.



இரட்டைப் புலவர்கள்

## கருத்து விளக்கப்படம்



பாரதியார் பிறந்தநாள் விழா

**மாபெரும் கவிதைப்போட்டி**



விதிமுறைகள்:

- 150 சொற்களுக்கு மிகைபடாமல் அமைய வேண்டும்.
- ஒருவர் ஒரு படைப்பை மட்டுமே அனுப்பலாம்.
- கவிதைகளை அனுப்பும்போது படைப்பாளியின் பெயர், முகவரி, மின்னஞ்சல், தொலைபேசி எண் முதலியவற்றைக் கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
- கவிதைகளைத் தெளிவாக எழுதியோ, கணினியில் தட்டச்சு செய்தோ, தபால் மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

முதல் பரிசு ₹ 15,000

இரண்டாம் பரிசு ₹ 10,000

மூன்றாம் பரிசு ₹ 5,000

**கவிதைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்**
**01.12.2023**

படைப்புகள் அனுப்ப வேண்டிய முகவரி
தமிழ் இணையக் கல்விக்கழகம்,
அண்ணா பல்கலைக்கழக வளாகம், கோட்டூர், சென்னை - 25

## வினாக்கள்

1. யாருக்குப் பிறந்தநாள் விழா கொண்டாடப்படுகிறது?
2. பிறந்தநாள் விழாவில் நடத்தப்படும் போட்டியின் பெயர் என்ன?
3. கவிதைகள் எந்த வடிவத்தில் அமைய வேண்டும்?
4. கவிதைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள் எது?
5. கவிதைப்போட்டியில் முதலிடம் பெறும் கவிதைக்கு அளிக்கப்படும் பரிசுத் தொகை எவ்வளவு?

## 1.5 கேட்டல் கருத்தறிதல்

### நேரம் தவறாமை

காந்தி அடிகள் வாழ்ந்த சபர்மதி ஆசிரமத்தில் உணவு உண்பதற்கு இரண்டுமுறை அழைப்பு மணி ஒலிப்பது வழக்கம். அதற்குள், உணவுக்கூடத்துக்கு வந்துவிட வேண்டும். நேரம் கடந்து வருபவர்கள், உணவுக்கூடத்தின் மூடப்பட்ட கதவுகளுக்குப் பின்னால் காத்திருக்க வேண்டும். காந்தியடிகள், ஒருநாள் இரண்டாவது முறை மணியடித்துச் சிறிதுநேரம் கழித்தே வந்தார். எனவே, கதவுகளுக்குப்பின் காத்திருந்தார். இதைக் கவனித்த வேலையாள் ஓடிவந்து, "பாபுஜி, தயவுசெய்து உள்ளே வாருங்கள்!" என்றார். ஆனால், காந்தியடிகள் இதை ஏற்க மறுத்தார். "ஆசிரமத்தின் விதிமுறைகள் எல்லாருக்கும் பொருந்தும். எல்லாரையும் போல நானும் அவற்றைப் பின்பற்ற வேண்டும். இன்று எனக்காக விதிமுறைகளைத் தளர்த்தினால், நாளை மற்றவர்களுக்காகவும் தளர்த்த வேண்டியிருக்கும்!" என்று கூறி, பொறுமையுடன் காத்திருந்தார்.

## வினாக்கள்

1. நிகழ்வில் குறிப்பிடப்படும் ஆசிரமத்தின் பெயர் என்ன?
2. நேரம் கடந்து வந்த காந்திஜி என்ன செய்தார்?
3. வேலையாள் கூறியதற்குக் காந்திஜி கூறிய மறுமொழி என்ன?
4. "பாபுஜி" என்று யாரை அழைத்தனர்?
5. நேர மேலாண்மை குறித்து உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கூறுக.

## 1.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 1.7 செந்தமிழ்ச்செல்வம்

### கவிதை

உள்ளத் துள்ளது கவிதை – இன்பம்
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்- உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை

- கவிமணி தேசிக விநாயகனார்

**பொருள்:**

கவிதை என்பது உள்ளத்திலிருந்து வெளிப்படும். அதனைப் படிப்பவர்க்கு மகிழ்ச்சியைத் தரும். தெளிவான அழகிய தமிழில் உண்மையை எடுத்துரைப்பதாக அமையும்.

**பழமொழி**
விளையும் பயிர் முளையிலே தெரியும்.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. பாரதியார் பாடிய நூல்களுள் ஒன்று குயில்பாட்டு.

2. பாரதியும், ஷெல்லியும் கவிதைமீது ஈடுபாடு கொண்டிருந்தனர்.

3. அன்பினால் மட்டுமே தீமையை வெல்ல முடியும்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. தோழர்

2. நூல்கள்

3. நற்பண்பாளர்

4. விதிமுறைகள்

## 1.8 மொழிபெயர்ப்போம்

Poetry is a form of creative writing that exists in cultures around the world. It focuses on the aesthetics of language.

---

---

## 1.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. கவிதை | - | Poem |
| 2. திறன் | - | Ability |
| 3. ஈடுபாடு | - | Involvement |
| 4. ஆர்வம் | - | Interest |
| 5. சங்கம் | - | Association |
| 6. தாய்மொழி | - | Mother tongue |
| 7. பகைவன் | - | Enemy |
| 8. கொடுமை | - | Cruelty |
| 9. அடிமைத்தனம் | - | Slavery |
| 10. முன்னேற்றம் | - | Progress |
| 11. வேட்கை | - | Desire |

## 1.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

குறிப்புச் சொற்களைப் பயன்படுத்தி, இயற்கைக்காட்சிகளை வருணித்து ஆறு தொடர் எழுதுக.

(மரம் - மான் - பறவை - குதிரை - பசுக்கள் - மலை)



## 1.11 உயர்நிலைத்திறன்

### குறிப்புகளைக்கொண்டு, கதை எழுதுக.

சிறுவர்கள் – பந்து விளையாட்டு – பந்து குழியில் விழுதல் – எடுக்க முயற்சி – ஒருவர் சிந்தித்தல் – வாளியில் தண்ணீர் – குழியில் ஊற்றுதல் – பந்து மேலே மிதத்தல் – எளிதாக எடுத்தல் – சிறுவர்கள் மகிழ்ச்சி – பாராட்டுதல்- கூர்சிந்தனைத்திறன்.

## 1.12 செயல்திட்டம்

உங்களுக்குப் பிடித்த கவிஞர்களுள் ஒருவரைப் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கணினி நழுவம் (PPT) தயாரித்து வருக.

## 2.1 பேசுவோம்

பாடம் 2




### கலந்துரையாடுவோம்

நீங்கள் அறிந்த தமிழ் இலக்கியப் படைப்புகள் குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 2.2 படிப்போம்

# விசாரிப்பு

**(சிறுகதை)**

அன்று பெரியசாமி தாத்தாவைப் பார்க்க முடியவில்லை. காலையில் தன் கேள்விகளுடன் தயார் நிலையில் இருக்கும் அடுத்த வீட்டுத் தாத்தாவின் நாற்காலி காலியாக இருந்தது. ஆச்சர்யமாகவும் நிரம்ப மகிழ்ச்சியாகவும் இருந்தது. அமைதியான ஒரு காலையை அன்று தரிசிக்கிறேன். குறிப்பாக விசாரிப்புகள் இல்லாத காலை.

எங்கள் வீட்டு மரத்திலிருந்து ஓர் இலை விழுந்தாலும், பெரியசாமி தாத்தாவிடம் சொல்லியாக வேண்டும். அதற்கும் நான்கு கேள்வி வைத்திருப்பார். அவருடைய வீட்டுக்கு வெளியே மரத்தாலான பெரிய நாற்காலியும் ஒரு மேசையும் போடப்பட்டிருக்கும். இரண்டு வீட்டுக்கும் ஒரு பொத்தல் கம்பி வேலி மட்டுமே. நாற்காலியை வேலிக்கு அருகில் போட்டுக்கொண்டு நாள்தோறும் எங்கள் வீட்டையே பார்த்துக்கொண்டிருப்பார்.

வீட்டிலிருந்து வெளியேறும் எல்லாரிடமும் எதையாவது விசாரிப்பார். அவருக்குத் தெரியாமல் எங்கள் வீட்டில் ஓர் அணுவும் அசையக்கூடாது என்பதில் கவனமாக இருப்பார். அதில் அப்பாதான் பாவம். அவரிடம் சிக்கிச் சிதறிவிடுவார். வேலைக்குத் தாமதமாகிவிடும் என்கிற பதற்றமும் பதில் சொல்ல முடியாமல் நகர முடியாத சங்கடமும் சேர்த்து அவரை அழுத்தும். அதை அப்படியே முகத்தில் காட்டிக்கொண்டு நிற்பார்.

"முனுசாமி! நேத்து என்னடா வீட்டுக்குள்ள ஏதோ சத்தம்?"

"முனுசாமி! உன் பெரிய மயன் என்னிக்கு வருவான்?"

"முனுசாமி! மோட்டர்லேந்து எண்ணெ ஒழுகிட்டே இருக்குபோல?"

எங்கள் வீட்டைவிட்டு வெளியேறும் யாவரும் முதலில் தலையைமட்டும் வெளியேவிட்டு பெரியசாமி தாத்தா இருக்கும் இடத்தைக் கவனிப்பதுண்டு. பிறகொரு நாட்களில் எல்லாருக்கும் இப்பழக்கம் தொற்றிக் கொண்டது. ஆனால், பெரியசாமி தாத்தா காலையில் எங்களுக்கெல்லாம் முன்பே எழுந்து நாற்காலிக்கு வந்துவிடுவார்.

"அந்த மனுசன் என்னா நம்ம வீட்டு ஜகாவா? இதெல்லாம் ஓவரா இல்ல? அவரு மகன்கிட்ட சொல்லி வச்சுடு. எனக்கு மண்டைக்கு மணி அடிச்சிச்சினா அவ்வளதான்"

அப்பாவுக்கும் அம்மாவிற்கும் வீட்டுச்சண்டை உள்மோதும். பெரியசாமி தாத்தா சலனமே இல்லாமல் எங்கள் வீட்டு வாசலையே பார்த்துக்கொண்டிருப்பார். பெரும்பான்மையான நேரத்தில் அவர் கேள்விகள் எனக்கு எரிச்சலாக இருந்தாலும் அவருடைய இருப்பு அதைவிட எரிச்சலூட்டும். ஒருமுறை தாங்கமுடியாமல் கேட்டுவிட்டேன். ஆனால், அவர் கேட்டதாகத் தெரியவில்லை. அடுத்த கேள்விக்கு வந்துவிட்டார்.

பெரியசாமி தாத்தாவிற்கு ஒரே மகன். வீட்டில் அவருடைய மகனும் அவருடைய மருமகளும் மட்டும்தான். அவர்களுக்குக் குழந்தை இல்லை. வீட்டில் பகல் முழுவதும் அவருக்கு வேலை இல்லை. பெரியசாமியின் மனைவி ஆச்சியம்மா இறந்த நாலாண்டில் அவர் கற்றுக்கொண்ட ஒரே வித்தை வேடிக்கை பார்ப்பது. ஒரு தியானத்தைப் போன்று நிதானமானது அது.

தாத்தாவின் வேட்டி எப்பொழுதும் வேலியில் அத்துமீறித் தொங்கும். பாதிக்குமேல் எங்கள் வீட்டுச் சுவரில் இறக்கியபடிதான் அவர் காயப்போடுவார். பல சமயங்களில் அது வேலி தாண்டி எங்கள் வீட்டின் தரையில் விழுந்துவிடும். அதை எடுத்துக் கொடுக்க சதா எங்களை அழைத்துக்கொண்டிருப்பார். அப்படி எடுக்க வெளியில் வந்தால் மாட்டிக்கொள்வோம். ஐந்து நிமிடமாவது பேசிவிட்டுத்தான் அனுப்புவார். அப்பா வீட்டில் கொஞ்சம் சத்தம் போட்டுப் பேசிவிட்டால், அதன் பிறகு வெளியில் வரும் எல்லாரிடமும் பெரியசாமி தாத்தா அப்பா சத்தம் போட்டதைப் பற்றி விசாரிப்பார்.

"டேய்! ஏண்டா உன் அப்பன் அப்படிக் கத்துறான்?"

"ஏம்மா உன் மனுசன் அப்படி இருக்கான்? அவனுக்கு என்ன பெரச்சன?"

இப்படிக் கேள்விகள் நாக்காக நீண்டு எங்களை வழித்துத் தீர்த்துவிடும். பெரும் எரிச்சல் மண்டைக்குள் நுழைந்து குடையும். கடவுள் என்னைக் காது கேளாமல் படைத்திருந்தால் என்னவென்று தோன்றும். இப்படிச் சில நாளுக்குப் பிறகுதான் அப்பாவிற்கு ஒரு யோசனை தோன்றியது. வீட்டின் பின்பக்க வேலியில் பெரிய பொத்தலைப் போட்டு அதனைப் பிரித்துக் கதவாக்கினார். அப்பா மட்டும் பின்வழியில் வீட்டுக்குள் வரத் துவங்கியது ஆச்சர்யமாக இருந்தது. வீடு நெருங்கியதும் மோட்டாரை அடைத்துவிட்டுச் சத்தமே இல்லாமல் பின்வாசல் வழியாக உள்ளே வந்துவிடுவார். "என்னப்பா முனுசாமியெ ஆளே காணம்? எங்க போய்ட்டான்?"

உங்களுக்கென்ன எனக் கேட்கத் தோன்றும். அப்பாவை வெளியாள் யாராவது அவன் இவன் எனச் சொல்லிக் கூப்பிட்டால் எனக்குக் கோபம் வந்துவிடும். வார்த்தைகளை மென்று அதன் உக்கிரத்தைக் கண்களில் காட்டுவேன். சிலர் புரிந்து கொள்வார்கள். பெரியசாமி தாத்தா அதற்குச் சளைத்தவர் அல்லர். அடுத்த கேள்வியை அவர் தனது தொண்டைக்குள் உற்பத்தி செய்து கொண்டிருப்பார். விட்டால்போதும் என ஓடி வந்துவிடுவேன்.

அப்படிப்பட்ட தாத்தா அன்று வெளியில் வரவே இல்லை. மனம் ஒரு பக்கம் அவர் காலம் முடிந்து போயிருக்கலாம் என நினைக்கத் தூண்டியது. படுக்கையிலேயே அவர் நேற்றைய இரவில் தன் உயிரை விட்டிருக்கலாம். அதை யாரும் இன்னும் கவனிக்கவில்லை. சாயுங்காலம் வரும்போது இங்கொரு பந்தல் போடப்பட்டிருக்கக்கூடும். கூப்பாடும் அழுகையுமான ஒரு பொழுது இன்னும் சிறிதுநேரத்தில் இவ்விடத்தைச் சூழ்ந்து கொள்ளும். அப்பாவிடம் சொல்லிப் பின்வேலியை மீண்டும் அடைக்கச் சொல்லிவிடலாம்.

நேற்றைய இரவு நெஞ்சுவலி வந்து அப்பா பெரிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். ஒருவேளை அந்த நெஞ்சுவலி இந்தத் தாத்தாவினால்கூட வந்திருக்கலாம் எனத் தோன்றியது. அம்மாவை மீண்டும் ஏற்றிக்கொண்டு வந்து வீட்டில்விட மருத்துவமனைக்குக் கிளம்பினேன். போகும்போது பெரியசாமி தாத்தாவின் ஒரு வேட்டி எங்கள் வீட்டில் விழுந்து கிடந்ததைப் பார்த்தேன்.

அப்பாவிடம் ஆறுதல் சொல்லிவிட்டு அம்மாவை அழைத்து வீட்டுக்குவிட வரும் வழியில் பெரியசாமி தாத்தா வியர்த்துக் கொட்ட வெயிலில் நின்றிருப்பதைக் கண்டேன். மோட்டார் என்னையறியாமல் அவர் பக்கமாகப் போய் நின்றது.

"என்னடா மகேன்? அப்பா ஆஸ்பித்திரில இருக்கானாம்? காலையிலெ கிளம்பி வந்தென் பாக்கலாம்னு. எடம் தெரிலடா. யாரும் ஒழுங்கா சொல்ல மாட்டறாங்க. நடந்தெ வந்து கொஞ்சம் அப்படியெ தலை கிர்ர்ர்னு ஆச்சு. அப்பா எப்படி இருக்கான்?" கேள்விகளுடன் நின்றிருந்தார் பெரியசாமி தாத்தா.

## ஆசிரியர் குறிப்பு



கே. பாலமுருகன் (1982): மலேசியத் தமிழ் எழுத்தாளர். தற்காலச் சமூக வாழ்க்கைச் சூழல்களைப் புதிய உத்திகளில் சொல்லி வருபவர். மலேசியத் தமிழிலக்கியச் சூழலில் சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் மூலம் நன்கு அறியப்பட்டவர்.

## பொருள் அறிவோம்

1. விசாரிப்பு - ஒருவரைப் பற்றிக் கேட்டறிதல்
2. மயன் - மகன்
3. சதா - நொடிப்பொழுதும்
4. உக்கிரம் - கட்டுக்கடங்காத சினம்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. பெரியசாமி தாத்தாவின் இயல்பு யாது?
2. சிறுகதையின் ஆசிரியர் பெயர் என்ன?
3. விசாரிப்பு என்பதன் பொருள் யாது?
4. பெரியசாமி தாத்தா கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்வது யாது?
5. 'விசாரிப்பு' சிறுகதையைச் சுருக்கமாகக் கூறுக.

### ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(வேலி, அப்பா, அக்கறை, விசாரிப்பு, பின்வாசல்)**

1. பெரியசாமி தாத்தாவுக்கு மிகவும் பிடித்த செயல் ________________.
2. பெரியசாமி தாத்தாவால் மிகுந்த துன்பத்திற்கு ஆளானவர் ________________.
3. பெரியசாமி தாத்தாவிற்குப் பயந்து அப்பா __________ வழியாக வீட்டிற்குள் வருவார்.
4. தாத்தா தனது வேட்டியை ________________ மீது காயப்போடுவார்.
5. பெரியசாமி தாத்தா பிறர்மீது உண்மையான ________________ கொண்டவர்.

### இ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக.

1. பெரியசாமி தாத்தா எப்போதும் பிறரை விசாரித்துக்கொண்டே இருப்பார். ( )
2. பெரியசாமி தாத்தாவின் செயல், அப்பாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. ( )
3. அப்பா, தனது வேட்டியைத் தாத்தா வீட்டுவேலியின் மீது காயப்போடுவார். ( )
4. தாத்தாவுக்கு நெஞ்சுவலி வந்ததால், மருத்துவமனையில் சேர்த்தனர். ( )
5. பெரியசாமி தாத்தா தன் மகன் வீட்டில் வாழ்ந்துவந்தார். ( )

## 2.3 தெரிந்துகொள்வோம்

### மரபுத்தொடர்கள்



**கந்தன்** : என்னப்பா? ஏன் வருத்தமா இருக்கே?

**முருகன்** : என்ன செய்றது? வேலை இன்னும் கிடைக்கல. இப்படியே இருந்தா **தாளம் போடவேண்டியதுதான்**.

**கந்தன்** : என்னப்பா? ஏன் கன்னத்தில கைவைச்சிருக்க?

**முருகன்** : வெளிநாட்டில வேலை கிடைச்சுரும்னு நிறைய கடன் வாங்கிட்டேன். இப்ப அதைக் கட்டமுடியல.

**கந்தன்** : அதுக்குத்தான் **அகலக் கால் வைக்காதன்னு** அப்பவே சொன்னேன். கேட்டியா?





**கந்தன்** : என்னப்பா? ரொம்ப சந்தோஷமா இருக்கே?

**முருகன்** : ஆமாப்பா. வேல கிடைச்சுருச்சுல்ல. மனசு அப்படியே **இறக்கை கட்டிப் பறக்குது**.

| | | |
|---|---|---|
| தாளம் போடுதல் | - | துன்பப்படுதல் |
| அகலக் கால் வைத்தல் | - | சிந்திக்காமல் செயல்படுதல் |
| இறக்கை கட்டிப் பறத்தல் | - | மகிழ்ச்சியாக இருத்தல் |

## பயிற்சிகள்

### (அ) பொருத்துக.

1. தாளம் போடுதல் – சிந்திக்காமல் செயல்படுதல்
2. அகலக் கால் வைத்தல் – மகிழ்ச்சியாக இருத்தல்
3. இறக்கை கட்டிப் பறத்தல் – துன்பப்படுதல்

### (ஆ) கீழ்க்காணும் தொடர்களில் மரபுத்தொடரைக் கோடிட்டுக்காட்டுக.

1. வாணி, தன்னுடைய சேமிப்பைக் கருத்திற்கொள்ளாமல், வீடு கட்டிவிட்டு அகலக்கால் வைத்ததை எண்ணி இப்போது வருந்துகிறாள்.
2. பெற்றோர் பேச்சைக் கேட்காமல், வீண்செலவு செய்த குமரன், இப்போது உணவுக்கே தாளம் போடுகிறான்.
3. வார விடுமுறையில் நாம் திரைப்படம் செல்லலாம் என அப்பா கூறியவுடன் என் தங்கை இறக்கை கட்டிப் பறந்தாள்.

### இ) கோடிட்ட இடத்தில் பொருத்தமான மரபுத்தொடரை இட்டு நிரப்புக.

**(தாளம் போடுகிறான், இறக்கை கட்டிப் பறந்தனர், அகலக் கால் வைத்து)**

1. குமரன் சிந்திக்காமல் தொழிலில் ________________ நட்டம் அடைந்தான்.
2. சுற்றுலா செல்வதால் மாணவர்கள் ________________
3. அதிக வருமானத்திற்கு ஆசைப்பட்டு, இருக்கிற வேலையையும் விட்டுவிட்ட வளவன், இப்போது உணவுக்குக்கூட வழியின்றித் ________________.

## 2.4 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைப் படித்துச் சொல்லைக் கண்டறிக. எல்லாச் சொல்லின் இறுதி எழுத்தும் 'கம்' என முடியவேண்டும்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

1. ஒருவரையொருவர் முதன்முதலில் பார்க்கும்போது சொல்வது ________________.
2. காலையில் எழுந்தவுடன் உடற்பயிற்சி செய்வது சிலரது ________________.
3. முதன்முதலில் மேடையேறிப் பேசும்போது சிலருக்கு ஏற்படுவது ________________.
4. நாடகம் உள்ளிட்ட பொழுதுபோக்கு நடைபெறும் இடம் ________________.
5. நம்மிடம் இருக்கவேண்டிய இன்றியமையாத பண்புகளுள் ஒன்று________________.

**தகவல்துளி**

இந்தியாவில், ஒவ்வோர் ஆண்டும் சிறந்த எழுத்தாளர்களுக்கு ஞானபீட விருது வழங்கப்படுகிறது. இது, இலக்கியத்திற்காக வழங்கப்படும் ஓர் உயரிய விருதாகும். இந்த விருதானது காசோலை, பட்டயம், பாராட்டுச்சான்றிதழ், சரசுவதி சிலை ஆகியவற்றை உள்ளடக்கியது. பாரதிய ஞானபீடம் பண்பாட்டு இலக்கியக்கழகம் என்னும் அமைப்பு இந்த விருதினை வழங்குகிறது. இந்தியாவின் அதிகாரப்பூர்வ மொழிகளில் எழுதும் எந்த ஓர் எழுத்தாளரும் இவ்விருதினைப் பெற தகுதியுடையவர் ஆவார். தமிழில் முதன்முதலில் ஞானபீட விருது பெற்ற எழுத்தாளர் அகிலன். இவர், தமது 'சித்திரப்பாவை' என்னும் நூலுக்காக இவ்விருதினைப் பெற்றார்.



ஞானபீட விருது

## 2.5 கேட்டல் கருத்தறிதல்

### செல்வத்துப் பயனே ஈதல்

ஓர் ஊரில் முனியப்பன் என்பவன் இருந்தான். அவன் மிகவும் வசதி படைத்தவன். அதே ஊரில் பொன்னன் என்பவனும் இருந்தான். அவன் அவ்வளவு வசதியில்லாதவன். இருந்தபோதும் ஊரில் இருந்தவர்கள் பொன்னனுக்கு அளித்த மதிப்பும் மரியாதையும் முனியப்பனுக்குத் தரவில்லை. ஒருநாள் ஒரு துறவி அந்த ஊருக்கு வந்தார். அவரிடம் பலரும் தத்தமது குறைகளைச் சொல்லி ஆறுதல் பெற்றனர். முனியப்பனும் துறவியைக் கண்டான். தன்னை யாரும் மதிப்பதில்லை என்று குறைபட்டுக் கொண்டான். அப்போது அங்குப் பொன்னனும் வந்தான். அங்கிருந்த ஊர்மக்கள், பொன்னனை வாழ்த்தினர். பொன்னன், அனைவரையும் வணங்கிவிட்டுத் துறவியைக் காணச் சென்றான். துறவி அனைத்தையும் உற்றுநோக்கினார். முனியப்பனை வணங்காத ஊர்மக்கள், பொன்னனை வாழ்த்துவது ஏன் எனச் சிந்தித்தார். அவருக்கு விடை கிடைத்தது. பொன்னன் சென்றபிறகு, முனியப்பனை அழைத்தார். உன்னைவிட வசதியில் குறைந்து இருந்தும் பொன்னன் ஊர்மக்களுக்கு நன்மை செய்கிறான்; அவர்களிடம் நலம் விசாரிக்கிறான்; அவர்களோடு இணக்கமாகப் பழகுகிறான்; அவனது உழைப்பில் ஈட்டும் தொகையில் சிறிதளவு பிறருக்கும் கொடுத்து உதவுகிறான். அதனால்தான் அவனை எல்லாரும் மதிக்கிறார்கள். ஆனால், உன்னிடம் செல்வம் மிகுந்திருந்தாலும், பிறருக்குக் கொடுக்க மனமில்லை. இரக்கமும் அன்பும் இருந்தாலே போதும். பொருள் கொடுத்து உதவினாலும் உதவாவிட்டாலும் ஊர்மக்கள் உன்னையும் மதிப்பார்கள் என்றார் துறவி. அவர் கூறிய கருத்துக்கு உடன்பட்ட முனியப்பனும் உண்மையை உணர்ந்து, துறவிக்கு நன்றி சொல்லிவிட்டுச் சென்றான்.

## வினாக்கள்

1. முனியப்பனின் பண்புநலனைக் கூறுக.
2. ஊர்மக்கள் பொன்னனுக்கு ஏன் மதிப்பு அளித்தார்கள்?
3. துறவியிடம் முனியப்பன் கூறியது என்ன?
4. பொன்னன் சிறந்த பண்பாளன் என்பதைத் துறவி எவ்வாறு கண்டறிந்தார்?
5. கதையின் வாயிலாக நாம் வளர்த்துக்கொள்ள வேண்டிய பண்புகள் யாவை?

## 2.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 2.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

- (குறள்: 399)

- திருவள்ளுவர்

(இன்புறுவது - மகிழ்வது; காமுறுவர் – விரும்புவர்)

**பொருள்:**

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக்கல்வியையே) விரும்புவர்.

**பழமொழி**

நாக்கிலே இருக்கிறது நன்மையும் தீமையும்.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. ஒரு நூலகம் திறக்கப்படும்போது, ஊரில் ஒரு சிறைச்சாலை மூடப்படும்.

2. மனிதனின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு புத்தகம்

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. பதற்றம்

2. வேடிக்கை

3. மருத்துவமனை

## 2.8 மொழிபெயர்ப்போம்

சிறுகதை என்பது உரைநடை இலக்கிய வடிவங்களுள் ஒன்று. அரைமணி நேரத்திற்குள் படித்து முடிக்கும் வகையில் சிறுகதை அமையவேண்டும். ஒரு மையக்கருத்தை அடிப்படையாகக்கொண்டு சிறுகதை அமையும். சிறுகதையின் முதல்வரி படிப்பவர்க்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைவது சிறப்பானது.

## 2.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. அமைதி | - | Peace |
| 2. வேலி | - | Fence |
| 3. யோசனை | - | Idea |
| 4. உக்கிரம் | - | Fierceness |
| 5. நெஞ்சுவலி | - | Chest pain |
| 6. சாயுங்காலம் | - | Evening |

## 2.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**ஒரே ஓசையில் முடியும்படி பின்வரும் சொற்களைக்கொண்டு தொடர்களை உருவாக்குக.**

**(பெருமை, எளிமை, நேர்மை, கடமை, உரிமை, உண்மை, நன்மை, மேன்மை, சிறுமை, தீமை)**

எப்போதும் பேசிடுவோம் உண்மை

எல்லாருக்கும் தந்திடுமே அது பெருமை

நாட்டைக் காப்பது நம் கடமை

நாளும் பேணிக்காப்பது நம் உரிமை

## 2.11 உயர்நிலைத் திறன்

**குறிப்புச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுகதை எழுதுக.**

ஆடுகள் இரண்டு – குறுகிய பாலம் – செல்ல வழியில்லை – சண்டையிட்டன – முட்டி மோதின – நரி – நல்ல வேட்டை – ஆடுகளுக்கு இடையில் – நுழைதல் – ஆடுகள் மீண்டும் முட்டுதல் – நரி மாட்டிக்கொள்ளுதல்.

## 2.12 செயல்திட்டம்

உங்கள் வாழ்வில் நடந்த ஏதேனும் ஒரு நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு ஒரு பக்க அளவில் சிறுகதை ஒன்றை எழுதி வருக.

பாடம் 3

## 3.1 பேசுவோம்

கீழ்க்காணும் தொடர்களுக்கு ஆம்/ இல்லை என்று விடை கூறுக.

| | தொடர்கள் | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1 | நற்செயல் செய்தால் நன்மை விளையும் என்பதை நான் நம்புகிறேன். | | |
| 2 | ஒற்றுமையுடன் வாழ விரும்புகிறேன். | | |
| 3 | என் வகுப்பிலுள்ள மாணவர்களிடம் அன்பாகப் பழகுகிறேன். | | |
| 4 | யாரையும் எவ்வகையிலும் வேறுபடுத்திப் பார்க்கமாட்டேன். | | |
| 5 | மக்களுக்கு என்னால் இயன்ற நன்மைகளைச் செய்வேன். | | |
| 6 | உலக நாடுகள் போரிடுவதை நான் விரும்பவில்லை. | | |
| 7 | இயற்கைச் சூழலோடு வாழ விரும்புகிறேன். | | |
| 8 | எவ்வுயிரையும் என் உயிர்போல மதிப்பேன். | | |
| 9 | சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்வேன். | | |
| 10 | எல்லாரையும் உறவினராக எண்ணுகிறேன். | | |

## கலந்துரையாடுவோம்

நம்மை நாமே அறிந்துகொள்ள உதவும் இந்தக் கேள்விகள் குறித்து, ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 3.2 படிப்போம்

# தமிழரின் உயரிய சிந்தனை



உலக மக்களை வேறுபடுத்திப் பார்க்காத உயரிய சிந்தனை தமிழர்களுக்கு உண்டு. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் வாயிலாக இதனை அறிந்துகொள்ளலாம். உலக ஒற்றுமையை வலியுறுத்திப் பாடப்பட்ட பாடல்கள் தமிழில் மிகுதியாக உள்ளன. அவற்றுள்ளும் சகோதரத்துவச் சிந்தனையை உலகம் முழுவதும் கொண்டு சென்றது ஒரு பாடல். ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ எனத் தொடங்கும் அப்பாடல், எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றில் (பாடல் 192) அமைந்துள்ளது. இப்பாடற்கருத்தை மேற்கோளாகக் காட்டிப் பேசாத பேச்சாளரே தமிழ்நாட்டில் இல்லை எனலாம்.

மனிதநேயச் சிந்தனைகளை வலியுறுத்தும் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்னும் பாடலைக் கணியன் பூங்குன்றனார் பாடினார். அந்தப் பாடல் உலகம் முழுவதையும் ஒரு குடும்பமாகப் பார்க்கிறது. எல்லா ஊரும் என்னுடைய ஊர்தான். எல்லா மக்களும் என்னுடைய உறவினர்தாம். நன்மையும் தீமையும் என்னால்தான் ஏற்படுமே தவிர வேறு யாராலும் ஏற்படாது. துன்பம் ஏற்படுவதும் பின்னர் அது தீர்வதும் அத்தகையதே. இறப்பு என்பது புதிய செய்தி அன்று. இயல்பாக நடப்பதுதான். வாழ்தல் இனிது என்று மகிழ்ச்சி அடைவதும், வெறுப்பு தோன்றும்போது இன்னாதது எனக் கூறுவதும் அறிவுடையவருக்குப் பொருந்தாது. ஆற்றிலே மிதந்து செல்லும் சிறு ஓடம்போல, இவ்வுலக உயிர்கள் விதியின்படி செல்லும் இயல்புடையன. ஆதலால், நற்செயல்கள் செய்தால், வாழ்க்கை நல்வழியில் செல்லும். எனவே, அறியாமையால் பெருமை கருதிப் பெரியோரை உயர்த்திப் பேசுதலும் சிறுமை கருதிச் சிறியோரை இகழ்ந்து பேசுதலும் கூடாது என்பன பாடலில் கூறப்பட்ட சிறந்த கருத்துகளாகும். பாடலைப் படித்து மகிழ்வோம். உலக ஒற்றுமையைக் காப்போம்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

- கணியன் பூங்குன்றனார்

## பொருள் அறிவோம்

1. கேளிர் - உறவினர்
2. நோதல் - துன்புறுதல்
3. தணிதல் - ஆறுதல்
4. புணை - சிறிய ஓடம்
5. மாட்சி - பெருமை

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. தமிழரின் பொதுவுடைமைச் சிந்தனைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பாடல் எது?
2. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" – இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. 'கேளிர்' என்பதன் பொருள் யாது?
4. இன்பத்தையும் துன்பத்தையும் எவ்வாறு கருதவேண்டும் எனக் கணியன் பூங்குன்றனார் கூறுகிறார்?
5. "நீர்வழிப் படூஉம் புணைபோல..." இப்பாடலடிப் புலப்படுத்தும் உண்மை யாது?

### ஆ) பின்வரும் தொடர்களில் கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.

**(குடும்பம், புறநானூறு, தமிழர்களுக்கு, சகோதரத்துவச்)**

1. உலக மக்களை வேறுபடுத்திப் பார்க்காத உயரிய சிந்தனை __________ உண்டு.
2. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனத் தொடங்கும் பாடல் __________ சிந்தனையை உலகம் முழுவதும் கொண்டு சென்றது.
3. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று __________
4. கணியன் பூங்குன்றனாரின் பாடல் உலக மக்கள் அனைவரையும் ஒரு __________ போன்று பார்க்கிறது.

## 3.3 தெரிந்துகொள்வோம்

# வினையெச்சம்

வினையைக்கொண்டு முடியும் எச்சம், வினையெச்சம்.



**அப்பா** : சுற்றுலா எப்படி இருந்தது?

**முல்லை** : பயனுடையதாக இருந்தது அப்பா.

**அப்பா** : என்னவெல்லாம் பார்த்தாய்?

**முல்லை** : மாமல்லபுரத்தின் சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தேன். அங்கு ஒரே கல்லில் செதுக்கப்பெற்ற சிற்பங்களைப் பார்த்து வியந்தேன்.


**அப்பா** : பிறகு?

**முல்லை** : கடற்கரைக் கோவிலைப் பார்க்கச் சென்றேன்.

**அப்பா** : அப்படியா?

**முல்லை** : ஆம், அப்பா. பின்னர் கடற்கரை மணலில் நாங்கள் மெல்ல நடந்தோம். அங்குக் கடல்நீரில் கால் நனைத்து விளையாடினோம்.

உரையாடலில் வந்துள்ள கண்டு மகிழ்ந்தேன், பார்த்து வியந்தேன், பார்க்கச் சென்றேன், மெல்ல நடந்தோம், நனைத்து விளையாடினோம் ஆகிய சொற்கள் வினையெச்சங்கள் ஆகும்.



<table>
<tr><td>தெரிநிலை வினையெச்சம்</td><td>

எழிலன் நூலகத்திற்குப் படிக்கச் சென்றான்.</td></tr>
<tr><td>குறிப்பு வினையெச்சம்</td><td>
பூங்காவில் தாத்தா மெல்ல நடந்தார்.</td></tr>
<tr><td>எதிர்மறை வினையெச்சம்</td><td>
அலுவலகத்திற்கு நேரமானதால், இராமு உண்ணாமல் சென்றான்.</td></tr>
</table>

## பயிற்சிகள்

**அ) வினையெச்சத் தொடரை அதற்குரிய படத்துடன் பொருத்துக.**

பால் பொங்கி வழிகிறது.



குழந்தை படுத்து உறங்கியது.



மாணவர்கள் எழுந்து நின்றார்கள்.



பனிக்கூழ் உருகி வழிந்தது.



சிறுமிகள் படியிலிருந்து இறங்கி வருகிறார்கள்.



**ஆ) படங்களைப் பார்த்து வினையெச்சச் சொற்களை எழுதுக.**



1. வள்ளி பழக்கூடையைச் சுமந்து வந்தாள்.

2. கபிலன் ____________________ வந்தான்.





3. மகிழ்நன் ____________________ எழுதினான்.

4. குழலி பழத்தைக் _______________ தின்றாள்.





5. அம்மா குழந்தையைத் ______________ வைத்தாள்.

6. வேலன் வீட்டிற்கு ______________ போனான்.






7. இனியா மாடிப்படிக்கட்டில் __________ சென்றாள்.

8. தேன்மலர் மேடையில் ________ தொடங்கினாள்.



## 3.4 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைப் படித்து, சொற்களைக் கண்டுபிடிக்க.**











1. உறவுகளுள் ஒரு தை – குழந்தை

2. ஊர்வனவற்றுள் ஒரு தை ____________________

3. பழங்களுள் ஒரு தை ____________________

4. விலங்குகளுள் ஒரு தை ____________________

5. பறவைகளுள் ஒரு தை ____________________

**தகவல்துளி**

ஐக்கிய நாடுகள் அவையின் ஒரு பிரிவு, உலக உணவுத் திட்டம் (World Food Programme). இது, உலக அளவில் மிகப்பெரிய மனிதநேய அமைப்பு. இதன் தலைமைச்செயலகம் ரோம் நகரில் உள்ளது. இந்த அமைப்பானது பட்டினியை எதிர்த்துப் போராடுதல், போர்க்காலங்களில் பசியால் வாடும் மக்களுக்கு உணவு வழங்குதல் போன்ற செயல்களை மேற்கொள்கிறது. இது ஒவ்வோர் ஆண்டும் 91.4 மில்லியன் மக்களுக்கு உணவு வழங்குகிறது. இச்செயல்களுக்காக இந்த அமைப்பிற்கு 2020ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

## 3.5 கேட்டல் கருத்தறிதல்

### இரக்கமுள்ள மனம்

தொடர்வண்டி ஐந்து மணிநேரம் தாமதம். இரவு ஏழு மணிக்கு ஊர் வந்து சேரவேண்டிய வண்டி, நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குத்தான் வந்தது. களைப்பு ஒருபக்கம், எரிச்சல் மறுபக்கம். வீடு நாலு கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. எப்படி வீட்டிற்குப் போவது என்று தவித்தான் சரவணன். அப்போது அதே ஊரைச் சேர்ந்த மாட்டுவண்டிக்காரர் ஒருவர் இருப்பதைப் பார்த்தான். அவரருகே சென்றான். தன் வீட்டு முகவரியைக் கூறி அழைத்துச் செல்ல முடியுமா என்று கேட்டான். சாலை கொஞ்சம் மேடுபள்ளமா இருக்கும், இருட்டு வேறே, பரவாயில்லையா தம்பி என்றார் வண்டிக்காரர். பரவாயில்ல, பரவாயில்ல. நான் விடிவதற்குள் வீட்டுக்குப் போகவேண்டும் என்று கூறினான் சரவணன். சரி, ஏறி உட்காருங்க தம்பி என்றவாறே மாடுகளைத் தட்டினார் அந்த வண்டிக்காரர். பாவம், இந்த வண்டிக்காரர். இரவு நேரம் என்று கூடப் பார்க்காம நமக்காக வண்டி ஓட்டுகிறார். கொஞ்சம் அதிகமாகவே பணம் கொடுக்கலாம் என்று நினைத்துக்கொண்டான் சரவணன். வீட்டுக்குப் பாதுகாப்பாக வந்து சேர்ந்ததும் அவன் மனம் மாறியது. வண்டிக்காரர் அவனது கடமையைத்தானே செய்தான். அதற்கெதற்கு அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று எண்ணியவாறே, இந்தாப்பா, நூறு ரூபாய் என்று அவன் கையில் திணித்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் சென்றான் சரவணன்.

### வினாக்கள்

1. தொடர்வண்டியில் பயணம் செய்தவரின் பெயர் என்ன?
2. தொடர்வண்டி எத்தனை மணிநேரம் தாமதமாக வந்தது?
3. சரவணன் எந்த வண்டியில் வீட்டிற்குச் சென்றான்?
4. வண்டிக்காரரைப் பார்த்துச் சரவணன் ஏன் இரக்கப்பட்டான்?
5. கதையில் குறிப்பிடப்பட்ட இரு கதைமாந்தருள் இரக்கக்குணம் கொண்டவர் யார்? உங்கள் கருத்தைக் கூறுக.

## 3.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 3.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்

- (குறள்: 575)
- திருவள்ளுவர்

(கண்ணோட்டம் – இரக்கம்)

பொருள்:

கண்ணிற்கு அணிகலம் என்று சொல்லப்படுவது இரக்கமே ஆகும். அவ்வாறு இரக்கம் இல்லாத கண், 'புண்' என்று கூறப்படும்.

பழமொழி

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. வறியவர்க்கு ஈதல் வேண்டும்.
2. பிறர்க்கு உதவுதல் சிறந்த மனிதநேயம்.
3. அன்பைவிடச் சிறந்த பண்பு இல்லை.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. உணவு
2. உறவினர்
3. ஓய்வு

## 3.8 மொழிபெயர்ப்போம்

மனிதநேயம் என்பது, பிறரிடம் அன்புகாட்டுவது ஆகும். முகம் தெரியாதவர்களைக் கண்டு சிரிப்பதுகூட மனிதநேயம்தான். பசியால் வாடுபவர்களுக்கு உணவு, வறியவர்களுக்கு உடை, கல்வி முதலியவற்றை வழங்கலாம். இவ்வாறு பிறருக்கு உதவுதலே மனிதநேயத்தின் அடையாளம் ஆகும்.

## 3.9 அறிந்துகொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| 1. எண்ணம் | Thought | 6. வெறுப்பு | Hatred |
| 2. இலக்கியம் | Literature | 7. ஓடம் | Boat |
| 3. ஒற்றுமை | Unity | 8. அறியாமை | Ignorance |
| 4. இயல்பு | Nature | 9. பெருமை | Pride |
| 5. உறவினர் | Relatives | 10. சிறுமை | Pettiness |

## 3.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் கதையைப் படித்துத் தொடர்ந்து கூறுக.**

பொம்மைக் கண்காட்சியைக் காண அம்மாவுடன் செல்கிறாள் மீனா. ஒவ்வொரு கடையிலும் அழகழகான பொம்மைகள். அந்தப் பொம்மை வேண்டும் இந்தப் பொம்மை வேண்டும் என்று அடம்பிடிக்கிறாள் மீனா. அம்மா சமாதானம் செய்கிறாள். ஆனால், மீனா கேட்பதாக இல்லை. அம்மாவின் கையைவிட்டுத் தனியாக ஒரு கடைக்குள் சென்றுவிடுகிறாள். மீனா, மீனா என்று அம்மா கதறுகிறாள். அப்போது, மீனாவின் அருகில் ஒரு பெண் வருகிறாள்.....

## 3.11 உயர்நிலைத்திறன்

**பின்வரும் படத்திற்குப் பொருத்தமாக வினாக்கள் உருவாக்குக.**

**(ஏன்/ எவ்வாறு/ எப்படி/ எங்கு/ யார்)**



## 3.12 செயல்திட்டம்

உலக அமைதிக்காக உழைத்த மாமனிதர் ஒருவர் பற்றிய தகவல்களைத் திரட்டித் தொகுப்பேடு உருவாக்குக.

பாடம்

4

## 4.1 பேசுவோம்









### கலந்துரையாடுவோம்

பல்வேறு நாடுகளின் பண்பாடு, கலை, ஆடை, அணிகலன், விளையாட்டு குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 4.2 படிப்போம்

# வேற்றுமையில் ஒற்றுமை

செப்டம்பர்-14 உலகப் பண்பாட்டு ஒற்றுமை நாள். இந்நாளில், அமெரிக்காவிலுள்ள 'வின்னர்ஸ் அகாடமி' என்னும் பள்ளியில் கண்காட்சி நடைபெறுகிறது. கண்காட்சியின் முகப்பில், 'ஒற்றுமை கொள், உலகை வெல்' என்னும் தொடர் காணப்படுகிறது.

**இனியன்** : செல்வா, கண்காட்சியின் தலைப்பைப் பார்த்தாயா?

**செல்வன்** : ஆம், இனியா. அருமையான தலைப்பு. இது, சிறப்புமிக்க கண்காட்சி என்று நினைக்கின்றேன்.

**இனியன்** : அதோ பார், 'ஆடை அணிகலன்கள்' என்னும் தலைப்பில் ஓர் அரங்கம். வா, அங்கே போகலாம்.

**செல்வன்** : அகன்ற திரையில் காணொலிக் காட்சி உள்ளது. வா, பார்க்கலாம்.

**(ஆஸ்திரேலியத் தலைநகர் கான்பெராவில் நடைபெற்ற தேசிய பன்முக பண்பாட்டு விழாவின் காணொலிக் காட்சிகள் திரையிடப்படுகிறது.)**

**இனியன்** : செல்வா, காணொலிக் காட்சிகள் மிகவும் அருமை.

**செல்வன்** : ஆமாம். நைஜீரிய மக்களின் ஆடை, அணிகலன்கள் அழகாக இருந்தன. அவர்கள் ஆடிய நடனமும் மிகவும் அருமை.



**இனியன்** : மக்கள் பிறநாட்டு ஆடை, அணிகலன்களை அணியும் போது மகிழ்கின்றனர். இதனால், உலக மக்களிடையே நன்மதிப்பும் நல்லுறவும் ஏற்படுகின்றன. இந்நிகழ்வு, உலக ஒற்றுமைக்கு ஓர் அடித்தளமாக உள்ளது.

**(இருவரும் 'இசைமொழி' அரங்கிற்குள் நுழைகின்றனர்.)**

**செல்வன்** : மக்களை ஒன்றிணைப்பதில் இசைக்குக் குறிப்பிடத்தக்க இடம் உண்டு.

**இனியன்** : ஆம். இசையை அனுபவிக்க மொழிகள் தேவையில்லை. உலக மக்கள் அனைவரும் புரிந்துகொள்ளும் ஒரே மொழி இசைதான்.

**செல்வன்** : ஆமாம். இசை, பல்வேறு வேறுபாடுகளைக் கடந்து மக்களை ஒன்றிணைக்கிறது.

**(இருவரும் 'விளையாட்டு உலகம்' என்னும் அரங்கிற்குள் செல்கின்றனர்.)**

**இனியன்** : செல்வா, விளையாட்டுகள் உலக மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கின்றன.

**செல்வன்** : உண்மைதான். மக்களை ஒன்றிணைப்பதில் விளையாட்டுக்கும் பங்கு உண்டு. பல நாட்டு வீரர்கள் இணைந்து ஒற்றுமையாக விளையாடுவது மிகவும் சிறப்பு. உனக்குக் கால்பந்து விளையாட்டில் எத்தொடர் பிடிக்கும்?

**இனியன்** : இந்தியாவில் நடக்கும் இந்தியன் சூப்பர் லீக் (ISL) தொடர் எனக்கு மிகவும் பிடிக்கும்.

**(இருவரும் 'சுற்றுலா' அரங்கிற்குள் செல்கின்றனர்.)**

**செல்வன்** : இனியா, இங்கே பார். சுவிட்சர்லாந்து நாடு எவ்வளவு அழகாக உள்ளது! இத்தாலியின் வெனிஸ் நகரமும் என் மனத்தைக் கவர்கிறது.

**இனியன்** : ஆம். இவற்றைப் பார்க்கும்போது வானில் பறப்பதுபோல் உள்ளது.

**செல்வன்** : புதிய தகவல்களையும் சூழல்களையும் அறிந்துகொள்வதற்கு மூலதனமாக இருப்பவை வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்கள்.

**இனியன்** : ஆம். மனமகிழ்ச்சி, தொழில், அரசியல் போன்ற காரணங்களுக்காக மக்கள் வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செல்கின்றனர்.

**செல்வன்** : இந்தச் சுற்றுப்பயணத்தின் மூலம் பிற நாட்டின் தொழில்நுட்பத் திறனை அறிந்து, தங்கள் நாட்டிலும் பின்பற்றுகின்றனர். இப்பயணங்கள் உலக மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துகின்றன.

**இனியன்** : ஆம். மேலும், ஒரு நாட்டின் பண்பாட்டுக் கூறுகள் பிறநாடுகளுக்கு விரிவடைகின்றன.

**செல்வன்** : உலக மக்களிடையே மொழி, இனம், சமயம், பண்பாடு, வாழிடம் எனப் பல வேறுபாடுகள் காணப்பட்டாலும் விழாக்கள், இசை நிகழ்ச்சிகள், விளையாட்டுகள், விருந்து நிகழ்வுகள், சுற்றுலாக்கள், திரைப்படங்கள் முதலான நிகழ்வுகளில் ஒன்றிணைகின்றனர். நாமும் உலக மக்களின் ஒற்றுமைக்காக நம்மால் இயன்ற ஒத்துழைப்பினை வழங்குவோம்.

**இனியன்** : அப்படியே செய்வோம்.

## பொருள் அறிவோம்

1. அகன்ற திரை - பெரிய திரை
2. கவர்கிறது - ஈர்க்கிறது
3. மூலதனம் - அடிப்படை
4. வாழிடம் - இருப்பிடம்
5. ஒத்துழைப்பு - இணக்கமான உதவி

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. உலக மக்களிடையே காணப்படும் வேற்றுமைகள் யாவை?
2. உலக மக்களை ஒற்றுமைப்படுத்தும் நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுக.
3. உலக மக்களை ஒன்றுபடுத்துவதில் சுற்றுலாவின் பங்கு யாது?
4. விளையாட்டின் மூலம் ஒற்றுமையுணர்வு எவ்வாறு ஏற்படுகிறது?
5. இசை, உலக மக்களை எவ்வாறு ஒருங்கிணைக்கிறது?

### ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக

1. கண்காட்சி முகப்பில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என எழுதியிருந்தது. ( )
2. இசையை இன்புற்று மகிழ மொழியறிவு தேவை. ( )
3. உலக மக்கள் இடம், மொழி, தொழில் முதலியவற்றால் வேறுபட்டிருந்தாலும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். ( )
4. பல்வேறு வேறுபாடுகளுடைய உலக மக்களை விளையாட்டுப் போட்டிகள் ஒற்றுமைப் படுத்துகின்றன. ( )
5. மக்களை ஒன்றிணைப்பதில் இசைக்குக் குறிப்பிடத்தக்க இடம் இல்லை. ( )

### இ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

**(சுற்றுப்பயணம், கான்பெராவில், இசை)**

1. தேசிய பன்முகப் பண்பாட்டு விழா ஆஸ்திரேலியத் தலைநகர் ____________ நடைபெற்றது.
2. உலக மக்கள் அனைவரும் புரிந்துகொள்ளும் ஒரே மொழி ____________ ஆகும்.
3. புதிய தகவல்களின் மூலதனமாக இருப்பவை வெளிநாட்டுச் ____________ ஆகும்.

## 4.3 தெரிந்துகொள்வோம்

### இணைமொழிகள்





ஓசைநயம் பற்றியும் பொருட் செறிவு உடையனவாகவும் அமைந்து இரு சொற்கள் இணைந்து வருமாயின் அது இணைமொழி எனப்படும். இது மூன்று வகைப்படும்.

**இணைமொழிகள்**

- செறியிணை
- நேரிணை
- எதிரிணை

**ஒரு பொருளின் பண்பு அல்லது செயலைக் குறிப்பது, செறியிணை மொழி.**

| | |
|---|---|
| செறியிணை | <br>செவ்வாழை **செக்கச்செவேலெனச்** சிவந்துள்ளது. |
| | <br>வயல்கள் **பச்சைப்பசேலெனக்** காட்சியளித்தது. |
| | <br>நெல் மூட்டைகள் **அடுக்கடுக்காக** வைக்கப்பட்டிருந்தன. |

| நேரிணை | எதிரிணை |
|---|---|
| **ஒரே பொருள் தரும் இரு சொல் இணைந்து வருவது நேரிணை மொழி.** | **ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு சொல் இணைந்து வருவது எதிரிணை மொழி.** |
|  |  |
| தமிழரசன் தேர்வுக்காகக் கண்ணும்கருத்துமாய்ப் படித்தான். | நம்பி, பூங்காவில் நாய்க்குட்டியைத் தேடி அங்கும்இங்கும் அலைந்தான். |
|  |  |
| வயலில் பயிர்கள் நீரின்றி வாடிவதங்கிக் காய்கின்றன. | விளையாட்டுப் போட்டியில் வெற்றியும் தோல்வியும் ஏற்படுவது இயல்பானது. |
|  |  |
| கண்மணி தன் வீட்டிற்கு வந்த உற்றார் உறவினருடன் பேசி மகிழ்ந்தாள். | இளமுருகன் இரவுபகல் பாராது ஓய்வின்றி உழைத்தான். |

## பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(செக்கச்செவேலென, இரவுபகல், வாடிவதங்கி)**

1. மணிமொழி ____________ பாராமல் படித்ததால் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றாள்.
2. கிளியின் அலகு ____________ சிவந்து காணப்படும்.
3. தோட்டத்திலுள்ள பூக்கள் வெயில் காரணமாக ____________ காணப்படுகின்றன.

### ஆ) உரைப்பகுதியைப் பொருத்தமான இணைமொழிகளால் நிரப்புக.

கமலா தனது தோட்டத்தில் ரோஜாச் செடிகள் ____________ இருப்பதைப் பார்த்தாள். அச்செடிகளைக் ____________ காப்பாற்ற எண்ணினாள். அதனால், அவள் ____________ பாராமல் உரமிட்டு, நீர் பாய்ச்சிப் பாதுகாத்தாள். இதன் விளைவாகச் செடிகளிலுள்ள ரோஜாப் பூக்கள் ____________ எனப் பூத்துக் குலுங்கின.

## 4.4 மொழியோடு விளையாடுவோம்

**படத்திற்குரிய பெயரைக் கண்டறிக. அப்பெயரிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக.**



**குதிரை**

குதி, திரை, குரை








**சுவைச்செய்தி**

பன்முகப் பண்பாட்டுச் சிறப்புமிக்க நாடுகளுள் ஒன்று கனடா. இங்குக் கனேடிய பன்முகப் பண்பாட்டுச் சட்டம் (The Canadian Multiculturalism Act) 1988இல் உருவாக்கப்பட்டது. இச்சட்டமானது, கனடாவில் பண்பாட்டுப் பன்முகத்தன்மையைப் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கருத்து விளக்கப்படம்




### வினாக்கள்

1. தேசிய ஒற்றுமை நாள் எந்த நாளில் கொண்டாடப்படுகிறது?
2. சர்தார் வல்லபாய் படேலின் சிறப்புப்பெயர் என்ன?
3. யாருடைய பிறந்தநாள் தேசிய ஒற்றுமை நாளாகக் கொண்டாடப்படுகிறது?
4. சர்தார் வல்லபாய் படேல் செய்த அருஞ்செயல் யாது?
5. இரும்பு மனிதர் என்பதன் பொருள் என்ன?

## 4.5 கேட்டல் கருத்தறிதல்

### மூடுல் (MOODLE)

மூடுல் (MOODLE) என்பது Modular Object-Oriented Dynamic Learning Environment என்ற ஆங்கிலத்தொடரின் சுருக்கமாகும். 1999ஆம் ஆண்டிலிருந்து மெல்ல வளர்ந்துவரும் மூடுல் தற்போது உலகின் 100 மொழிகளில் செயலாற்றி வருகிறது. கற்கும் மாணவர்களை மனத்தில்கொண்டு உருவாக்கப்பட்ட இந்த மென்பொருள் இணையவழிக் கல்விக்குப் பெரிதும் பயன்படுகிறது. மூடுல் ஒரு திறவூற்று (Open source) மென்பொருள் என்பதால் இதை அனைவரும் கட்டணமின்றிப் பயன்படுத்தலாம்.

### வினாக்கள்

1. MOODLE என்பதன் விரிவாக்கம் யாது?
2. மூடுல் தற்போது எத்தனை மொழிகளில் செயலாற்றி வருகிறது?
3. மூடுல் மென்பொருள் யாருக்காக உருவாக்கப்பட்டது?
4. மூடுல் மென்பொருளின் பயன் யாது?
5. மூடுல் மென்பொருள் எந்த ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கியது?

## 4.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 4.7 செந்தமிழ்ச்செல்வம்

### நன்னெறி

உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்குசினம் காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க – வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு

- (பாடல் -8)

- சிவப்பிரகாசர்

(உள்ளம் - மனம்; குணம் - பண்பு; தடங்கரை – பெரிய கரை; விளம்பு – கூறு)

**பொருள்:**

பொங்கிவரும் வெள்ளத்தைக் கரை கட்டித் தடுத்தல் அரிதா அல்லது கரையை உடைத்து வெள்ளத்தை விடுவது அரிதா? உள்ளத்திலிருந்து சீறி எழுகின்ற சினத்தைக் காத்துக் கொள்வதுதான் அரிது. ஆதலால், அத்தகைய சினத்தைக் காத்துக்கொள்வதே சிறந்த பண்பாகும்.

**பழமொழி**
மனம்போல வாழ்வு.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

பண்பாடு என்பதற்குப் பண்படுத்துதல் என்று பொருள். பண்பட்ட மனம் நல்ல மனிதர்களுக்கு அடையாளம். மனம் பண்படும்போது நற்பண்புகள் உருவாகும். ஒருவருடைய மேன்மைக்கு அவருடைய நற்பண்புகளே காரணமாக அமைகின்றன.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. கண்காட்சி
2. சுற்றுலா
3. நட்பு

## 4.8 மொழிபெயர்ப்போம்


Every past event becomes a memory in our mind. It is because of these memories we can think about the things that have taken place in the past. There are some moments in our life that we wish not to lose ever.

## 4.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. அகன்ற திரை | - | Large screen |
| 2. காணொலி | - | Video |
| 3. மூலதனம் | - | Capital |
| 4. வாழிடம் | - | Residence |
| 5. ஒத்துழைப்பு | - | Co-operation |
| 6. அரங்கம் | - | Stage |
| 7. பன்முக பண்பாடு | - | Multi-culturalism |
| 8. நன்மதிப்பு | - | Goodwill |
| 9. நல்லுறவு | - | Rapport |
| 10. கண்டுபிடிப்பு | - | Discovery |

## 4.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் படக்கதையைப் புரிந்துகொண்டு, சொந்த நடையில் கூறுக.**



## 4.11 உயர்நிலைத்திறன்

**நீங்கள் கண்டுகளித்த கண்காட்சி குறித்து உங்கள் நண்பருக்கு ஒரு கடிதம் எழுதுக.**

எண் – XX,

____________________.

அன்புள்ள XX XX,

நான் நலம். நீ ________________________________________

எங்கள் ஊரில் சென்ற வாரம் ________________________________________

நடைபெற்றது. அதில், ________________________________________

இருந்தன. என் பெற்றோர் ________________________________________

தந்தனர். அங்கு ________________________________________

இருந்தன. நான் அதில் விளையாடி மகிழ்ந்தேன். நீயும் இதனைக் காணவேண்டும் என்று விரும்புகிறேன். உன் வருகையை ________________________________

உன் நண்பன்

XX XX XX

பெறுநர் முகவரி

எண்- XX

____________________

____________________.

## 4.12 செயல்திட்டம்

உங்கள் இருப்பிடத்தின் அருகில் நடைபெற்ற கண்காட்சி குறித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.

பாடம் 5

## 5.1 பேசுவோம்







### கலந்துரையாடுவோம்

குடும்ப உறவுகள் குறித்து உங்கள் வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 5.2 படிப்போம்

# உறவின் மேன்மை

28, வள்ளலார் தெரு,
சென்னை – 1.

அன்புள்ள செழியா,

நானும் அப்பாவும் இங்கு நலமாக உள்ளோம். நீயும் மருமகளும் நலமா என்பதை அறிய ஆவலாக உள்ளோம்.

அக்காவின் குழந்தைகளுக்குக் காதணி விழா சொந்த ஊரில் நடைபெற உள்ளது. தாய்மாமனாகிய நீ முன்னின்று விழாவினை நடத்தவேண்டும். உன் மடியில் அக்காவின் குழந்தைகளை அமர்த்தி அவர்களுக்குக் காதணி அணிவிக்க வேண்டும்.

இது வெறும் விழாவோ சடங்கோ அன்று. இது நமது உறவுகளை வலுப்படுத்தவும் இளம்தலைமுறையினர் நமது பண்பாட்டை உணர்ந்துகொள்ளவும் நடத்தப்படும் விழாவாகும்.

உறவுகளோடு மனம்விட்டுப் பேசவும் இன்பதுன்பங்களைப் பரிமாறிக்கொள்ளவும் குடும்ப விழாக்கள் வாய்ப்பைத் தருகின்றன. உறவுமுறைப் பெயர்களை அறிமுகம் செய்கின்றன. வயதில் மூத்தோர் கூறும் அனுபவமிக்க நிகழ்வுகளை நமக்கு எடுத்துரைக்கின்றன. குழந்தைகள் ஒன்றுக்கொன்று விளையாடி மகிழவும் உறவுகளின் மேன்மையைப் புரிந்துகொள்ளவும் வாய்ப்பை உருவாக்குகின்றன.

ஆகையால், இந்த விழா நம் அனைவரையும் ஒருங்கிணைக்கும் என நம்புகிறோம். எனவே, அமெரிக்காவிலிருந்து ஒரு மாதமாவது விடுப்பு எடுத்துக்கொண்டு நீ இங்கு வரவேண்டும். உன் மகனோடு நாங்கள் கொஞ்சி விளையாடவேண்டும். இங்கிருக்கும் வயல்வரப்பு, பசுஞ்சோலை, ஆற்றங்கரை, சந்தை என அனைத்து இடங்களையும் உன் மகனுக்குச் சுற்றிக்காட்டுகிறோம். மகிழுந்தில் பயணம் செய்யும் உன் மகனுக்கு மண்தரையில் மாட்டுவண்டிப் பயணத்தை இனிமையாக்குகிறோம். இங்கிருக்கும் உறவுகளோடு பாண்டியாட்டம், பல்லாங்குழி, ஆடுபுலி ஆட்டம் ஆடி மகிழட்டும். அன்பும் பண்பும் மிக்க அறிவுரைக்கதைகளைத் தாத்தாவிடமும் இனிமையான குழந்தைப்பாடல்களைப் பாட்டியிடமும் கேட்டு மகிழட்டும். புதிய சூழல் அவனுக்கு மிகவும் பிடிக்கும். ஆகையால், காதணி விழாவிற்கு மறக்காமல் உன் குடும்பத்துடன் இங்கு வா. உன் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள அம்மா,
பாரதி.

**உறைமேல் முகவரி**
**பெறுநர்**

ஜெ. செழியன்,
65, கிரான்பரி சாலை,
கிரான்பரி,
நியூ ஜெர்ஸி – 08512
அமெரிக்கா.

**காதணிக்கு வழங்கப்படும் வேறு சில பெயர்கள்**

- கடுக்கன்
- குண்டலம்
- தோடு
- பொன்தோடு
- மணித்தோடு
- தொங்கல்
- மாட்டல்
- அலுக்குத்து
- செவிப்பூ

## பொருள் அறிவோம்

1. மேன்மை - மகத்துவம்
2. ஆவல் - விருப்பம்
3. காதணி விழா - குழந்தைகளுக்குக் காது குத்தும் விழா
4. மூத்தோர் - முதியவர்
5. சடங்கு - வழிவழியாகப் பின்பற்றப்படும் நிகழ்வு

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. கடிதத்தினை யார் யாருக்கு எழுதியுள்ளார்?
2. நீங்கள் படித்த கடிதப் பகுதியிலிருந்து உறவுப் பெயர்களைக் கூறுக.
3. குடும்ப விழாக்களால் விளையும் நன்மைகள் யாவை?
4. செழியனின் அம்மா, தன் பேரனுக்கு எவற்றையெல்லாம் சுற்றிக்காட்டுவதாகக் கூறுகிறார்?
5. கிராமத்துச்சூழல் எப்படி இருக்குமெனக் கடிதம் குறிப்பிடுகிறது?

### ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக

**(இன்பதுன்பம், மாட்டுவண்டி, குடும்ப, சென்னை, தாய்மாமன்)**

1. உறவுகளை வலுப்படுத்த ____________ விழா நடத்தப்படுகிறது.
2. செழியனின் பெற்றோர் வசிக்கும் இடம் ____________.
3. அக்காவின் குழந்தைகளுக்கு ____________ மடியில் அமரவைத்து காதணி அணிவிப்பர்.
4. உறவுகளோடு மனம்விட்டுப் பேசவும் ____________ பரிமாறிக் கொள்ளவும் குடும்ப விழாக்கள் வாய்ப்பைத் தருகின்றன.
5. மகிழுந்தில் பயணம் செய்யும் உன் மகனுக்கு ____________ பயணம் இனிமையைத் தரும்.

## 5.3 தெரிந்துகொள்வோம்

**வினைவகைகள்**

- செயப்படுபொருள் குன்றிய வினை
- செயப்படுபொருள் குன்றா வினை

### செயப்படுபொருள் குன்றிய வினை

**ஒரு வினை செயப்படுபொருளை ஏற்காமல் வருவது செயப்படுபொருள் குன்றிய வினை எனப்படும்.**

எ.கா. மரம் விழுந்தது

இத்தொடரில் மரம் – எழுவாய்; விழுந்தது – பயனிலை. செயப்படுபொருள் இல்லை. இவ்வாறு செயப்படுபொருளை ஏற்காத வினைகள் செயப்படுபொருள் குன்றிய வினை எனப்படும்.



விமானம் உயரே பறந்தது





கவிதா விரைவாக ஓடினாள்



நான் பள்ளிக்குச் சென்றேன்



காற்று வேகமாக வீசியது




அவள் மெதுவாக ஓடினாள்

## செயப்படுபொருள் குன்றா வினை

**ஒரு வினை செயப்படுபொருளை ஏற்று வருவது செயப்படுபொருள் குன்றா வினை எனப்படும்.**

எ.கா. கண்ணன் சிற்பத்தைச் செதுக்கினான்.

இத்தொடரில் கண்ணன் – எழுவாய்; சிற்பம் – செயப்படுபொருள்; செதுக்கினான் – பயனிலை. எதைச் செதுக்கினான் என்ற கேள்விக்கு விடையாகச் சிற்பம் என்று பொருள் தருவதால் இது செயப்படுபொருள் குன்றா வினை எனப்படும்.



மான்கள் தண்ணீர் குடித்தன




ஆசிரியர் பாடம் நடத்தினார்



வசந்தன் பந்து விளையாடினான்



மகிழினி கோப்பையை வென்றாள்



வேலன் ஈட்டி எறிந்தான்

## பயிற்சிகள்

**அ) கீழ்க்காணும் சொற்களைத் தொடரில் அமைத்துச் செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றா வினை என வகைப்படுத்துக.**

கொடுத்தார், எழுதினார், விழுந்தாள், அசைந்தான், நடந்தான், உண்டாள், அழுதான், எறிந்தான், வரைந்தார், உடுத்தினான், உறங்கினான், வாங்கினார்

| வ.எண் | செயப்படுபொருள் குன்றிய வினை | செயப்படுபொருள் குன்றா வினை |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |

**ஆ) செயப்படுபொருள் குன்றா வினைத்தொடர் உருவாக்குக.**

1. உண்டான் - கண்ணன் உணவு உண்டான்.
2. படித்தாள் - ______________.
3. வாங்கினார் - ______________.
4. பாடினார் - ______________.
5. மேய்ந்தது - ______________.

**இ) செயப்படுபொருள் குன்றிய வினைத்தொடர் உருவாக்குக.**

1. ஓடியது - மான் வேகமாக ஓடியது.
2. நடித்தாள் - ______________.
3. சிரித்தனர் - ______________.
4. மகிழ்ந்தான் - ______________.
5. பறந்தன - ______________.

## 5.4 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புணர்த்தும் சொல்லை முதல் எழுத்தை மாற்றிக் கண்டறிக.**

1. நீரிலும் வாழும் நிலத்திலும் வாழும்

| கு | வ | ளை |
|---|---|---|
| த | | |

2. பாட்டிலும் இருக்கும் பையிலும் இருக்கும்

| அ | ரு | ள் |
|---|---|---|
| | | |

3. காலையிலும் மலரும் மாலையிலும் மலரும்

| ஈ | க் | க | ள் |
|---|---|---|---|
| | | | |

4. வரைந்தும் பார்க்கலாம் பார்த்தும் மகிழலாம்


| ம | ட | ம் |
|---|---|---|
| | | |

5. வெண்மையும் இருக்கும் மென்மையும் இருக்கும்

| வி | ற | கு |
|---|---|---|
| | | |

### தகவல்துளி

விலங்குகளுள் யானைகள் கூட்டமாக வாழும் இயல்பு கொண்டவை. மனிதர்களைப் போல, குடும்ப உறவுகளைப் பேணுபவை. குடும்பத்தில், பெண் யானைகளுக்கு முதன்மை உண்டு. இடம்விட்டு இடம் நகரும்போது, பெண் யானையே முன்னால் சென்று வழிகாட்டுகிறது. அதனைப் பின்தொடர்ந்துதான் மற்ற யானைகள் செல்கின்றன. குழந்தைகள் தன் தாயின் கைகளைப் பிடித்து நடப்பதைப் போன்றே, யானைக் கன்றும் தன் தாய் யானையின் வாலைப் பிடித்து நடக்கும்.



## 5.5 கேட்டல் கருத்தறிதல்

### அன்பு பரிசு


விடிந்தால் புத்தாண்டு. கமலா பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள். வீட்டைத் தூய்மைப்படுத்துவதற்கே பாதி நேரம் போயிற்று. இது தெரியாமல், அன்பும் எழினியும் வீடு முழுக்கத் தாள்களைக் கிழித்துப் போட்டுக்கொண்டு இருந்தார்கள். கமலாவுக்கு வந்ததே கோபம். இருவரையும் அழைத்துக் கடுமையாகத் திட்டிவிட்டாள். உதவவில்லை என்றாலும் பரவாயில்லை. தொல்லை செய்யாதீர்கள் என்று கடிந்துகொண்டாள். அம்மாவின் கோபத்தைக் கண்டு குழந்தைகள் சற்றுப் பயந்துவிட்டனர். இருவரும் அமைதியாக இருந்தனர்.

காலையில் கண்விழித்த கமலா, தன்னருகே வண்ணத் தாள்களாலான சிறு அட்டைப்பெட்டியைக் கண்டாள். அதன்மேல், அன்புள்ள அம்மாவிற்கு இனிய புத்தாண்டு வாழ்த்துகள் என்று எழுதியிருந்தது. கமலா அதனைப் பிரித்தாள். உள்ளே அழகான குருவிக்கூடு. அதில், தாய்ப்பறவை உணவூட்ட, பறவைக் குஞ்சுகள் உணவு உண்பதுபோல சிறுசிறு துண்டுத்தாள்களைக் கொண்டு ஒட்டப்பட்ட படம் இருந்தது. அதனைக் கண்ட கமலாவின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. தன் குழந்தைகள் நேற்று இதைத்தான் செய்துகொண்டு இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய மனத்தைப் புண்படுத்திவிட்டேனே! என்று எண்ணி வருந்தினாள். அப்போது குழந்தைகள் இருவரும் அவளுக்கு வாழ்த்து தெரிவித்ததுடன் பரிசு பிடித்திருக்கிறதா? என்று கேட்டனர். கமலா தலையை ஆட்டினாள். குழந்தைகள் தங்களுடைய அன்பையே பரிசாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், நான்? என்று யோசித்த கமலா, அவர்களிடமிருந்து நான் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய உள்ளன என்பதைப் புரிந்துகொண்டாள்.

### வினாக்கள்

1. கமலா ஏன் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள்?
2. கமலாவின் குழந்தைகள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்?
3. கமலாவுக்குக் குழந்தைகள் தந்த பரிசு யாது?
4. குழந்தைகள் தந்த பரிசுப்பொருளின் சிறப்பு என்ன?
5. கதைச் சூழலுக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

## 5.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 5.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

- (குறள்-69)
- திருவள்ளுவர்

(ஈன்ற பொழுது – பெற்றெடுக்கும் பொழுது; உவக்கும் – மகிழும்; சான்றோன் – நற்பண்பு மிக்கவன்)

**பொருள்:**

தாய், தன் மகனை நற்பண்பு மிக்கவன் என மற்றவர் புகழும்போது, அவனைப் பெற்றெடுத்த பொழுதைவிட மிகவும் மகிழ்ச்சி பெறுவாள்.

பழமொழி
குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

மனிதன் கூடி வாழும் இயல்புடையவன். தனிமரம் தோப்பாகாது என்பதை நன்கு உணர்ந்தவன். பிறரோடு இணக்கமாக வாழத் தெரிந்தவன். உறவுகளைப் பேணுவதில் மிகுந்த அக்கறை கொண்டவன்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. அன்பு
2. உறவினர்
3. திருவிழா

## 5.8 மொழிபெயர்ப்போம்

அன்பிற்கு வலிமை மிகுதி. அன்பால் எதனையும் பெறலாம். அன்புடையோர் அதனை மறைக்க இயலாது. அவருடைய கண்களிலிருந்து வழியும் கண்ணீரே அவர் நம்மீது எத்தகைய அன்பு கொண்டுள்ளார் என்பதை வெளிப்படுத்திவிடும்.

## 5.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. உறவு | - | Relationship |
| 2. ஆவல் | - | Desire |
| 3. சடங்கு | - | Ritual |
| 4. வாய்ப்பு | - | Opportunity |
| 5. மகிழுந்து | - | Car |
| 6. பயணம் | - | Travel |
| 7. மாட்டுவண்டி | - | Bullock-cart |

## 5.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் கோடிட்ட இடங்களில் உம் கற்பனைக்கேற்பச் சொற்களை நிரப்புக.**

எறும்பைப் போலச் சுறுசுறுப்பாக
நாம் இருக்கப் பழகுவோம்
யானை போலக் கூட்டமாக
நாம் வாழப் பழகுவோம்
புலியைப் போல ________________
________________________
பசுவைப் போல ________________
________________________
__________ போல __________
________________________
__________ போல __________
________________________

## 5.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் உரைப்பகுதியில் விடுபட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை நிரப்புக.**

தை மாதம் முதல் நாள் __________ விழா கொண்டாடப்படுகிறது. இது தமிழர் திருநாள் எனவும் __________ திருநாள் எனவும் அழைக்கப்படுகிறது. இவ்விழா, __________ உயர்வை உணர்த்துகிறது. இயற்கையை வணங்கும் வகையில் __________ பொங்கல் படைத்துக் கொண்டாடுவர். இரண்டாம் நாள் __________ பொங்கல். அன்று மாடுகளைக் குளிப்பாட்டி, கொம்புகளுக்கு __________ தீட்டுவர். மூன்றாம் நாள் காணும் பொங்கல். அன்று பெரியவர்களைக் கண்டு, அவர்களிடம் __________ பெறுவர்.

## 5.12 செயல்திட்டம்

உங்கள் குடும்ப உறுப்பினர்களை அடிப்படையாகக் கொண்டு, 'என் இனிய உறவுகள்' என்ற தலைப்பில் குறும்படம் உருவாக்குக.

## 6.1 பேசுவோம்

# பாடம் 6



## கலந்துரையாடுவோம்

மறுசுழற்சியினால் சுற்றுச்சூழலில் ஏற்படும் நன்மைகள் குறித்து உங்கள் வகுப்பு நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## 6.2 படிப்போம்

# சமூகப் பொறுப்பு





அம்மா, எனக்கு எழுதுபொருள் வேண்டும்.



சரி, கமலி. வா, கடைக்குச் செல்வோம்.



அம்மா, அதோ பாருங்கள். பதாகைகளுடன் பலர் ஊர்வலமாக வருகின்றனர்.



வா, அருகில் சென்று பார்ப்போம்.






இன்று உலக நீர் நாள். நீரை வீணாக்காமல் அதனைச் சேமிக்க வலியுறுத்தி, அவர்கள் ஊர்வலமாகச் செல்கின்றனர். நீரைச் சேமிப்பது சமூகப்பொறுப்புகளுள் ஒன்றல்லவா!

சமூகப்பொறுப்பா? அப்படியென்றால் என்ன அம்மா?

சமுதாய வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு தரும் செயல்களைச் சமூகப்பொறுப்பு என்கிறோம்.

ஓ! புரிந்துகொண்டேன் அம்மா.




அம்மா, அங்கே பாருங்கள். சாலையில் செல்லும் வண்டிகள் எல்லாம் அந்தப் பெரிய வண்டிக்கு ஏன் வழிவிடுகின்றன?

அது அவசரகால ஊர்தி. உயிர் காக்கும் செயலில் அது ஈடுபடுவதால், அந்த ஊர்திக்கு முதலில் வழிவிடவேண்டும். அதுவும் சமூகப்பொறுப்பே.

**(இருவரும் கடைக்குச் சென்று எழுதுபொருள்களை வாங்கிக்கொண்டு வீடு திரும்புகின்றனர்.)**

அம்மா, அங்கே குப்பை கொட்டும் இடத்தில் ஏன் இரண்டு பெட்டியை வைத்திருக்கிறார்கள்?

மட்கும் பொருளைப் போடுவதற்காக ஒரு பெட்டியும் மட்காத பொருளைப் போடுவதற்காக இன்னொரு பெட்டியும் வைத்திருக்கிறார்கள்.

மட்கும் பொருள், மட்காத பொருள் அப்படியென்றால் என்ன அம்மா?

மண்ணோடு மண்ணாக மட்கிப் போனால், அவை மட்கும் பொருள்கள். அவ்வாறு ஆகாதவை எல்லாம் மட்காத பொருள்கள்.

எவையெல்லாம் மட்கும், மட்காப் பொருள்கள் அம்மா?

காய்கறிக்கழிவு, அழுகிய பழங்கள் போன்றவை மட்கும் பொருள்கள்.
நெகிழியாலான பொருள்கள் எல்லாம் மட்காத பொருள்கள்.



**(அம்மா, அருகிலிருக்கும் பனிக்கூழ் கடைக்குக் கமலியை அழைத்துச் செல்கிறார். இருவரும் பனிக்கூழ் சாப்பிடுகின்றனர்.)**



கமலி, நெகிழியையும் குச்சியையும் குப்பைத் தொட்டியில் போடு. நாமே சுற்றுச்சூழலை மாசுபடுத்தலாமா?





இதோ, உடனே செய்கிறேன். இன்று உங்களிடமிருந்து நிறைய கற்றுக்கொண்டேன். இனி, நானும் சமூகப்பொறுப்புடன் நடந்து கொள்வேன் அம்மா.

## பொருள் அறிவோம்

1. பதாகை – விளம்பரத் தட்டி
2. ஊர்வலம் - ஊரைச்சுற்றி வருதல்
3. ஊர்தி - வண்டி
4. மாசடைதல் - தூய்மை இழத்தல்
5. பனிக்கூழ் - ஐஸ்கிரீம்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்.

1. கமலி, தன் அம்மாவுடன் எங்குச் சென்றாள்?
2. சமூகப்பொறுப்பு என்றால் என்ன?
3. கமலி அறிந்துகொண்ட சமூகப்பொறுப்புகளைக் கூறுக.
4. மட்கும்பொருள், மட்காப்பொருள் விளக்குக.
5. நீங்கள் அறிந்த சமூகப்பொறுப்புகள் இரண்டு கூறுக.

### ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக.

1. பொது இடங்களில் குப்பைகளை வீசுதல். ( )
2. போக்குவரத்து, சாலைவிதிகளை மதித்தல் வேண்டும். ( )
3. பேருந்துகளில் முதியோர்கள் அமர இடம் அளித்தல். ( )
4. அவசர கால ஊர்திக்கு வழிவிடாதிருத்தல். ( )
5. மண்ணோடு மண்ணாக மட்கிப் போனால், அவை மட்காதப் பொருள். ( )

### இ) பின்வரும் வினாக்களுக்குப் பொருந்தும் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(சமுதாய வளர்ச்சிக்கு, உயிர் காக்கும், ஊர்வலம், மட்கும், சமூகப்பொறுப்பு)**

1. பதாகைகளுடன் பலர் ________ வருகின்றனர்.
2. நீரைச் சேமிப்பது ________.
3. சமூகப்பொறுப்பு என்பது ________ ஒத்துழைப்பு தருவது.
4. அவசர கால ஊர்தி ________ செயலில் ஈடுபடுகிறது.
5. காய்கறிகளும், பழங்களும் ________ பொருள்கள்.

## 6.3 தெரிந்துகொள்வோம்

### நிறுத்தக்குறிகள்

| | | | |
|---|---|---|---|
| , | காற்புள்ளி | ? | வினாக்குறி |
| ; | அரைப்புள்ளி | ! | வியப்புக்குறி |
| : | முக்காற்புள்ளி | ‘ ’ | ஒற்றை மேற்கோள்குறி |
| . | முற்றுப்புள்ளி | “ ” | இரட்டை மேற்கோள்குறி |

### காற்புள்ளி ,

**1. பெயர்கள் அடுக்கிவரும்போது**

**(எ.கா.)** கபிலன், மாறன், புகழேந்தி மூவரும் பரிசு பெற்றனர்.

**2. விளிப்பெயர்களின் பின்**

**(எ.கா.)** ஆசிரியர்களே, மாணவர்களே, வணக்கம்.

**3. தொகுத்தோ, பிரித்தோ கூறும்போது**

**(எ.கா.)** ஆகவே, நாம் எடுக்கும் முடிவே இறுதியானது.

**4. மேற்கோள் குறிகளுக்கு முன்**

**(எ.கா.)** கவின் தன் அம்மாவிடம், “நீங்கள் கூறியபடி செய்கிறேன்” என்றான்.

### அரைப்புள்ளி ;

**1. ஒரு தொடர் தொடர்ச்சியாக வரும்போது**

**(எ.கா.)** இளமதி நன்கு படித்தாள்; தேர்ச்சி பெற்றாள்; பாராட்டப்பட்டாள்.

**2. ஒரே தொடரில் வேறுபட்ட கருத்துகள் வரும்போது**

**(எ.கா.)** வேல்விழி நன்கு ஆடுவாள்; ஆனால், பாடுவாள் எனக் கூற இயலாது.

## முக்காற்புள்ளி :

**1. ஒரு கூற்றை எடுத்துக் கூறும்போது**

**(எ.கா.)** ஔவையார் கூறுகிறார்: அறம் செய விரும்பு.

**2. பல பொருள் அல்லது செய்தி கொண்ட பட்டியல் வரும்போது**

**(எ.கா.)** அறுசுவையாவன: இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு.

## முற்றுப்புள்ளி •

**1. ஒரு தொடர் முடியும்போது**

**(எ.கா.)** நாள்தோறும் உடற்பயிற்சி செய்வது உடலுக்கு நல்லது.

**2. சொற்சுருக்கம் வரும்போது**

**(எ.கா.)** முகிலன் மாண்ட்ஃபோர்ட் உ.நி. பள்ளியில் படிக்கிறான்.

## வினாக்குறி ?

**1. வினாப்பொருள் தரும் தொடர் வரும்போது**

**(எ.கா.)** உன் பெயர் என்ன?

## வியப்புக்குறி !

**1. ஒரு தொடரில் உணர்ச்சி வெளிப்படும்போது**

**(எ.கா.)** ஆ! நான் உழைத்ததெல்லாம் வீணாகப் போயிற்றே!

**2. வரவேற்றல், வாழ்த்தல், வைதல் ஆகிய பொருள்களில் வரும்போது**

**(எ.கா.)** சான்றோரே வணக்கம்! அரசே, நீடூழி வாழ்க! ஆணவம் அழிக!

## ஒற்றை மேற்கோள்குறி ‘ ’

**1. நேர்கூற்றாக வரும்போது**

**(எ.கா.)** கண்ணன் தன் நண்பனிடம் நாம் படித்த கதை, ‘ஆழமறியாமல் காலை விடாதே என்று அறிவுறுத்துவதுபோல் இருக்கிறது’ என்று கூறினான்.

## இரட்டை மேற்கோள்குறி “ ”

**பிறர் கூற்றைக் கூறும்போது**

**(எ.கா.)** பாரதியார், “ஓடி விளையாடு பாப்பா” என்றார்.

## பயிற்சிகள்

**அ) படக்காட்சியைக் கண்டு, நிறுத்தக்குறியுடன் கூடிய தொடர் உருவாக்குக.**



1. காட்டில் பல விலங்குகள் வாழ்கின்றன.
2. ______________________________
3. ______________________________

**ஆ) கீழ்க்காணும் தொடர்களில் உரிய நிறுத்தக்குறிகளை இடுக.**

1. நந்தினி வனிதாவிடம் இன்று மாலை விளையாட வருவாயா என்று கேட்டாள்

______________________________

2. பேரறிஞர் அண்ணாவின் செவ்வாழை என்னும் சிறுகதை குறிப்பிடத்தக்கது

______________________________

3. நாளை பள்ளி விடுமுறையா

______________________________

4. ஆ பாம்பு பாம்பு

______________________________

**இ) பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. காற்புள்ளி | - | ? |
| 2. அரைப்புள்ளி | - | , |
| 3. முற்றுப்புள்ளி | - | ; |
| 4. முக்காற்புள்ளி | - | ! |
| 5. வியப்புக்குறி | - | . |
| 6. வினாக்குறி | - | : |

## 6.4 மொழியோடு விளையாடுவோம்

**ஒரே ஓசையில் முடியும் சொற்களைக் கொண்டு தொடர் உருவாக்குக.**

1. காலை, காளை

உழவன் **காலை**யில் எழுந்தவுடன் **காளை**யைக் காணாமல் திகைத்தான்.

2. மலை, மழை

குமணன் **மலை**மீது ஏறும்போது **மழை** பெய்தது.

3. வலை, வளை

________________________________________

4. இளை, இழை, இலை

________________________________________

5. பனி, பணி

________________________________________

6. எரி, எறி


________________________________________

7. கலை, களை

________________________________________

**தகவல்துளி**

தமிழகச் சமூகச் சீர்திருத்தவாதிகளுள் முதன்மையானவர் தந்தை பெரியார். சமூகச் சீர்திருத்தத்தைத் தம் வாழ்நாள் இலக்காகக்கொண்டு வாழ்ந்தார்; சமூகத்தில் மண்டிக்கிடந்த மூடநம்பிக்கைகளை ஒழிக்கப் பாடுபட்டார்; பிறப்பின் அடிப்படையில் மனிதர்களை இழிவுபடுத்தும் செயல்களை எதிர்த்தார்; மனிதநேயத்தை வலியுறுத்தினார்; சமூகத்தில் பெண்களுக்கும் சம வாய்ப்புகள் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.



தந்தை பெரியார்

## 6.5 கேட்டல் கருத்தறிதல்


### குலுக்கல் பரிசு

முதியவர் ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். அவருக்கு இதயநோய் இருந்ததால், அதிர்ச்சி தரும் எந்தச் செய்தியையும் சொல்லக்கூடாது என மருத்துவர் கூறியிருந்தார். சில நாளுக்குப் பிறகு, முதியவரின் மகன் மருத்துவரைத் தேடி வந்தான். என் தந்தை வாங்கிய குலுக்கல் சீட்டில் முதற்பரிசு விழுந்திருக்கிறது. அவரிடம் எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை என்றான். மருத்துவர் தாம் பக்குவமாக எடுத்துக்கூறுவதாக உறுதி அளித்தார். மறுநாள் மருத்துவர், முதியவரிடம் எப்போதும்போல பேசிக்கொண்டிருந்தார். பேச்சின் இடையே உங்களுக்குக் குலுக்கல் சீட்டில் ஒரு கோடி கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டார். அந்த முதியவர் சிரித்துக்கொண்டே அந்தத் தொகையில் பாதித்தொகையை உங்களுக்குத் தந்துவிடுவேன் என்றார். இப்போது மயங்கி விழுந்தவர் அந்த முதியவர் அல்லர்; மருத்துவர். பாவம், அவரால் அதிர்ச்சியைத் தாங்கமுடியவில்லை.

### வினாக்கள்

1. முதியவர் எந்த நோயால் துன்பப்பட்டார்?
2. முதியவரின் மகன் மருத்துவரிடம் கூறிய செய்தி யாது?
3. குலுக்கலில் கிடைத்த பரிசு என மருத்துவர் குறிப்பிட்ட தொகை யாது?
4. குலுக்கல் பரிசில் எவ்வளவு தொகையினை முதியவர் மருத்துவருக்குத் தருவதாகக் கூறினார்?
5. மருத்துவர் மயங்கிவிழக் காரணம் என்ன?

## 6.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 6.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

- (குறள்-983)
- திருவள்ளுவர்

(நாண் - நாணம்; ஒப்புரவு - உதவுதல்; கண்ணோட்டம் - இரக்கம்; சால்பு – சான்றாண்மை)

பொருள்:

அன்பு கொள்ளுதல், பழி புரிந்திட நாணுதல், பிறருக்கு உதவுதல், இரக்க உணர்வு கொள்ளுதல், வாய்மையைக் கடைப்பிடித்தல் ஆகிய ஐந்து பண்பும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்களாகும்.

பழமொழி
புயலுக்குப் பின்னே அமைதி.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

மனித வாழ்க்கை சிறப்பானது. பிறருக்கு உதவி செய்து வாழ்தல் மகிழ்வானது. தனக்கென வாழ்வதைவிடச் சமூகத்திற்காக வாழும்பொழுது வாழ்க்கை அழகு பெறுகிறது.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. அவசர கால ஊர்தி -
2. விழிப்புணர்வு -
3. ஒத்துழைப்பு -

## 6.8 மொழிபெயர்ப்போம்

சமூக முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். இக்கால இளைஞர்களே, எதிர்காலச் சமூகத்தின் அடித்தளமாக உள்ளனர். எனவே, இளைஞர்கள் தனிமனித ஒழுக்கத்தைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, சகிப்புத்தன்மை, பொதுநலம் போன்ற பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

## 6.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. எழுதுபொருள் | - | Stationery |
| 2. மழைத்துளி | - | Raindrop |
| 3. சமூகப்பொறுப்பு | - | Social responsibility |
| 4. அவசரகால ஊர்தி | - | Ambulance |
| 5. சமூக வளர்ச்சி | - | Social development |
| 6. மட்கும் பொருள் | - | Biodegradable material |
| 7. மட்காப் பொருள் | - | Non - biodegradable |
| 8. பதாகை | - | Banner |
| 9. பனிக்கூழ் | - | Ice cream |

## 6.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் பாதிக்கதையைப் படித்து, மீதிக்கதையை எழுதுக.**

முருகனும் குமரனும் பள்ளிக்குச் செல்கின்றனர். வழியில் பணப்பை ஒன்று இருப்பதை முருகன் பார்க்கிறான். உடனே அதைக் கையில் எடுக்கிறான். அப்போது, குமரன், யாரோ தொலைத்து விட்டார்கள் போலும். வா, அருகில் இருக்கும் காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிடலாம் என்று கூறுகிறான். ஆனால், முருகன்

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

## 6.11 உயர்நிலைத்திறன்

**குறிப்புகளை விரித்து, உரைப்பகுதி உருவாக்குக.**

வயதான உழவர் - மகன்கள் நால்வர் – எப்போதும் சண்டை – உழவர் வருத்தம் – பாடம் கற்பிக்க நினைத்தல் – குச்சிகள் இணைந்த கட்டு – ஒவ்வொருவரையும் அழைத்தல் – உடைக்கச் சொல்லுதல் – ஒருவராலும் முடியவில்லை – கட்டிலிருந்து ஒரு குச்சி மட்டும் எடுத்தல் – எளிதாக உடைத்தல் – ஒற்றுமை – வலிமை - யாராலும் வெல்ல முடியாது- நால்வரும் புரிந்துகொள்ளல்.

## 6.12 செயல்திட்டம்

சமூக ஆர்வலர்களின் படங்களைத் தொகுத்துப் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.

பாடம்

# 7

## 7.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

சுற்றுச்சூழல் மாசுபாடு ஏற்படுவதற்கான காரணங்கள் குறித்து உங்கள் வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 7.2 படிப்போம்

# மாசிலா உலகம் படைப்போம்



சூழலியல் ஆர்வலர் திரு. அருளனுடன் ஒரு நேர்காணல். நிகழ்த்துபவர்கள் உதயா: கதிர்.

**உதயா** : வணக்கம். நாங்கள் பள்ளி மாணவர்கள். இன்று ஏப்ரல் 22 'புவிநாள்'. உங்களோடு சூழலியல் குறித்துப் பேசவந்தோம்.

**அருளன்** : வணக்கம். உங்களை மாதிரி இளைஞர்கள் சூழலியல் பற்றித் தெரிந்துகொள்வது நல்லது. இந்தக் காலத்தில் இது மிகவும் தேவை.

**உதயா** : புவிநாளைக் கொண்டாடுவதன் நோக்கம் என்ன?

**அருளன்** : நிலம், நீர், காற்று எல்லாம் இயற்கை நமக்கு அளித்த கொடைகள். இவற்றை மாசடையாமல் பாதுகாப்பதே நமது கடமை. அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே புவிநாள்.

**கதிர்** : நிலம், நீர், காற்று எல்லாம் எவ்வாறு மாசடைகின்றன?

**அருளன்** : எல்லாக் கழிவுகளையும் கொட்டி மண்வளத்தைக் கெடுக்கிறோம். நம் தேவைகளுக்காக நீர்நிலைகள், காடுகள் முதலியவற்றை ஆக்கிரமிப்பு செய்கிறோம். குப்பைகள், நெகிழிப்பைகள் போன்றவற்றை எரிக்கிறோம். மிகுதியான வெடிபொருள்களை வெடிக்கிறோம். புகை வடிகட்டி இல்லாமல், தொழிற்சாலைகளை இயக்குகிறோம். தனிமனிதரின் மிகுதியான ஊர்திப் பயன்பாட்டால் காற்று மாசுபடுகிறது. இதனால், பூமியின் வெப்பம் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

**உதயா** : புவி வெப்பம் அடைவதால் என்னென்ன பாதிப்புகள் ஏற்படுகின்றன?

**அருளன்** : ஒன்றா? இரண்டா? நிறைய பாதிப்புகளைச் சந்திக்கிறோம். காலநிலை மாற்றம், பெருமழை, வறட்சி, காட்டுத்தீ இவையெல்லாம் உருவாகின்றன. காலநிலை மாற்றத்தால் பனிமலைகள் உருகுகின்றன. உருகிய பனியானது, ஆறுகளின் வழியே கடலில் அதிக அளவில் சேர்கிறது. கடல் மட்டம் உயர்கிறது. இதனால், கரையோர நகரங்கள் மூழ்கும் நிலை ஏற்படும்.

**உதயா** : நாம் அன்றாட வாழ்வில் குளிர்பதனப் பெட்டியைப் பயன்படுத்துவதால் நன்மை விளையுமா?

**அருளன்** : நன்மை இல்லை. அதிலிருந்து குளோரோ புளோரோ கார்பன் என்னும் நச்சுக்காற்று வெளிவருகிறது. இந்த நச்சுக் காற்று ஓசோன் படலத்தைப் பாதிக்கிறது. இதனால், உயிரினங்களுக்குத் தீங்கு ஏற்படுகிறது.

**கதிர்** : இந்த இடர்ப்பாட்டிலிருந்து பூமியை எப்படிக் காப்பாற்றலாம்?

**அருளன்** : பூமிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் நாம் பார்த்துக்கொண்டாலே போதும். அப்படி இருந்தால், பூமி தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்ளும். இதற்கு, உலக நாடுகள் எல்லாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

**உதயா** : அப்படியா?

**அருளன்** : ஆமாம். மேலும், காற்றில் கரியமில வாயு (கார்பன்-டை-ஆக்சைடு) கலப்பதைக் குறைக்கவேண்டும். நெகிழிப் பொருள்களின் பயன்பாட்டை முற்றிலும் தவிர்க்கவேண்டும். இயற்கை மூலங்களிலிருந்து மின்உற்பத்தி செய்ய வேண்டும்.

**உதயா** : நன்கு புரிந்துகொண்டோம்,

**கதிர்** : மரங்களை வளர்ப்பதால் புவி வெப்பமயமாதல் குறையுமா?

**அருளன்** : ஆம். கட்டாயம் குறையும். தாவரங்களும் நம்மைப்போல் சுவாசிக்கின்றன. கரியமிலவாயுவை உள்ளே இழுத்துக்கொண்டு உயிர்க்காற்றை (ஆக்சிஜன்) வெளிவிடுகின்றன. எனவே, நாம் அதிகமாக மரங்களை வளர்க்க வேண்டும்.

**இருவரும்** : புவியை எவ்வாறு காப்பது என்பது பற்றி நன்றாக எடுத்துச் சொன்னீர்கள். அவை அனைத்தும் எங்களுக்குப் பயனுள்ளவையாக இருந்தன. இவற்றை நாங்கள் மட்டுமல்லாமல், மற்றவர்களையும் பின்பற்றச் செய்வோம். மிக்க நன்றி.

**அருளன்** : நல்லது. மீண்டும் சந்திப்போம்.

## பொருள் அறிவோம்

1. தொந்தரவு - துன்பம்
2. புவி - பூமி
3. ஆக்கிரமிப்பு - கையகப்படுத்துதல்
4. பாதிப்பு - விளைவு

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. மனிதர்களால் புவிக்கு ஏற்படும் பாதிப்புகள் யாவை?
2. மரம் வளர்ப்பதால் விளையும் நன்மைகள் யாவை?
3. புவி வெப்பமடைதலால் ஏற்படும் தீங்குகள் யாவை?
4. புவிநாள் எப்போது கொண்டாடப்படுகிறது?
5. காற்று எவ்வாறு மாசடைகிறது?

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. இயற்கை நமக்களித்த கொடை ________________ ஆகும்.

   அ) மகிழுந்து ஆ) காற்று இ) தேநீர் ஈ) நெடுஞ்சாலை

2. புவியின் வெப்பம் ________________ மூலம் உயர்கிறது.

   அ) மரம் வளர்த்தல் ஆ) கடல் அரிப்பு இ) வாகனப் புகை ஈ) மழை நீர் சேகரிப்பு

3. புவி வெப்பம் அடைவதால் ஏற்படும் பாதிப்புகளுள் குறிப்பிடத்தக்கது __________.

   அ) காலநிலை மாற்றம் ஆ) நீர்நிலை மாசுபாடு
   இ) மரங்கள் அழிதல் ஈ) நிலநடுக்கம்


### இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(குளோரோ புளோரோ கார்பன், ஏப்ரல், மரம், ஓசோன் படலம், புவி வெப்பமடைதல்)**

1. புவிநாள் ____________ மாதத்தில் கொண்டாடப்படுகிறது.
2. காலநிலை மாற்றம் ஏற்படக் காரணமாக அமைவது ____________ ஆகும்.
3. காற்று மாசுபட ____________ வாயுவும் ஒரு காரணமாகும்.
4. புவி வெப்பமடைதலைக் குறைப்பதற்கு ____________ வளர்க்கவேண்டும்.
5. வளிமண்டலத்தில் நச்சுக்காற்று சேர்வதால் ____________ பாதிக்கப்படுகிறது.

### ஈ) இரு படத்தையும் ஒப்பிட்டு, மூன்று தொடர் எழுதுக.






______________________________________________

______________________________________________

______________________________________________

## 7.3 தெரிந்துகொள்வோம்

### ஒரு சொல் பல பொருள்





| சொல் | பொருள் |
|---|---|
| ஆழி | கடல், சக்கரம், வட்டம், மோதிரம் |
| ஆறு | வழி, நதி, இளைப்பாறல், ஓர் எண் |
| கார் | மேகம், மாரிக்காலம், கருமை |
| தரணி | புவி, உலகம், நிலம், மலை, பூமி |
| பனி | அச்சம், துன்பம், நடுக்கம், குளிர் |
| பொழில் | சோலை, உலகம் |
| மஞ்சு | மேகம், இளமை, வனப்பு |
| மாலை | பொன்மாலை, பூமாலை, இரவு, அந்தி |
| வனம் | காடு, நீர், அழகு |
| மதி | அறிவு, சந்திரன், மதித்தல், அளவிடு |


## பயிற்சி

**அ) கொடுக்கப்பட்ட சொல்லிற்குரிய படத்தினைத் தேர்வு செய்க.**

**கார்**


**தரணி**





**வனம்**





## 7.4 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டங்களை நிரப்புக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | |
| | | 3 | | | 4 |
| | | | 5 | | |
| 6 | | | | | |
| | | | | | |
| | | 7 | | | |

**இடமிருந்து வலம்**

1. மின்னலுக்கு முன் தோன்றும்
2. முக்கனிகளுள் ஒன்று
3. குதிரையின் ஒலி
6. நிலவைக் குறிக்கும்
7. துன்பத்திற்குக் காரணம்

**வலமிருந்து இடம்**

5. கடல் அலையைக் குறிக்கும்

**மேலிருந்து கீழ்**

1. இந்தியாவின் வடக்கிலுள்ள மலை
2. தமிழ்நாட்டின் மாநில மரம்
3. ஆற்றின் ஓரம்
4. விழுதுகள் கொண்ட மரம்
5. கொடியில் தோன்றும் பழம்

**கீழிருந்து மேல்**

5. பயிர்வகைகளுள் ஒன்று

**சுவைச்செய்தி**

உலகிலேயே மிகவும் உயரமான மரம் ஹைபரியன். இதன் தாவரவியல் பெயர் செக்கோயா செம்பர்வைரன்ஸ் (Sequoia sempervirens). இந்த மரம் ஏறக்குறைய 700-800 ஆண்டுகள் பழைமையானது: இதன் பொதுப்பெயர் 'கோஸ்ட் ரெட்வுட்' (coast redwood). இந்த மரம் 380.3 அடி உயரம் உடையது. இந்த மரத்தின் அருகிலிருந்து அதன் உச்சியைப் பார்க்க இயலாது. இந்த மரம் கலிஃபோர்னியாவிலுள்ள ரெட்வுட் நேஷனல் பார்க்கில் உள்ளது.



ஹைபரியன் மரம் (Hyperion tree)

## கருத்து விளக்கப்படம்

# சர்வதேச யோகா தினம்

**ஜூன் 21**

உலக அமைதிக்காகச் சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு "உடலையும் மனத்தையும் ஒருங்கிணைக்கும் யோகாப் பயிற்சி"

**நாள்** : ஜூன் 21, 2023: புதன் கிழமை

**இடம்** : தமிழ்ப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானம், தஞ்சாவூர்.

யோகாசனம் நம் உடல் ஆரோக்கியத்திற்கும் மன உறுதிக்கும் உதவுகிறது.



**அனைவரும் வாரீர்!**
**அனுமதி இலவசம்!**

### வினாக்கள்

1. உலக யோகா தினம் கொண்டாடப்படும் நாள் எது?
2. யோகா செய்வதனால் ஒருங்கிணைக்கப்படுபவை எவை?
3. உடல் ஆரோக்கியத்திற்கு உதவுவது எது?
4. எந்த நோக்கத்திற்காக யோகா தினம் கொண்டாடப்படுகின்றது?
5. யோகா தினம் கொண்டாடப்படும் இடம் எது?

## 7.5 கேட்டல் கருத்தறிதல்

### கிரேட்டா துன்பர்க்

ஸ்வீடன் நாட்டின் இளம் சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரேட்டா துன்பர்க் (Greta Thunberg). இவர், 'பருவநிலை காக்கப் பள்ளி வேலைநிறுத்தம்' (School Strike for the Climate) என்ற இயக்கத்தைத் தோற்றுவித்தார். "எதிர்காலத்திற்கான வெள்ளி" (Fridays for Future) என்னும் ஹேஸ்டேக் (Hashtag) உருவாக்கி உலகம் முழுவதும் அறிமுகமானார். 2018 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் பருவநிலை மாற்றம் குறித்துப் பேசினார். தற்போது, பல நகரங்களுக்குச் சென்று பள்ளி, கல்லூரி மாணவர்களைச் சந்தித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்.

### வினாக்கள்

1. ஸ்வீடன் நாட்டின் இளம் சுற்றுச்சூழல் ஆர்வலரின் பெயர் என்ன?
2. கிரேட்டா துன்பர்க் தோற்றுவித்த இயக்கத்தின் பெயர் யாது?
3. கிரேட்டா துன்பர்க்கை உலகம் முழுவதும் அறிமுகப்படுத்திய ஹேஸ்டேக் எது?
4. ஐக்கிய நாடுகள் சபையில் கிரேட்டா துன்பர்க் எது குறித்து பேசினார்?
5. கிரேட்டா துன்பர்க் தற்போது யாரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்?

## 7.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 7.7 செந்தமிழ்ச்செல்வம்

### தனிப்பாடல்

கற்றதுகைம் மண்ணளவு கல்லாத(து) உலகளவென்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள் – மெத்த
வெறும்பந் தயம்கூற வேண்டா புலவீர்
எறும்புந்தன் கையால்எண் சாண்

- (பாடல்- 39)

- ஔவையார்

(கலைமடந்தை - கலைமகள்; ஓதுகிறாள் - படிக்கிறாள்; மெத்த - மிகுதியாக; பந்தயம் - போட்டி; புலவீர் - புலவர்களே; சாண் – நீளத்தை அளவிடும் அளவு)

**பொருள்:**

தான் இதுவரை படித்தது கைம்மண்ணளவே; கல்லாதது உலகளவு என நினைத்துக் கலைமகளே இன்னும் படித்துக் கொண்டிருக்கிறாள். ஆதலால், புலவர்களே! மிகுதியாகப் படித்துவிட்டோம் என்னும் செருக்குடன் வீண்பேச்சு பேசாதீர்கள். சிறு எறும்பும் அதன் கையினால் எண் சாண் அளவுடையதே ஆகும்.

**பழமொழி**

பொறுமை கடலினும் பெரிது.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. இயற்கையைப் பாதுகாக்க வேண்டும்.

2. புவி மாசுபடுவதைத் தடுப்போம்

3. காடுகளின் செழிப்புக்குக் காட்டுயிரிகள் உதவுகின்றன.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. காலநிலை மாற்றம்

2. இயற்கை வளம்

3. காடுகள் விழிப்புணர்வு

## 7.8 மொழிபெயர்ப்போம்

There are many kinds of insects on earth. Some kinds are useful to man. We get honey and wax from bees. We get silk from silk worms.

---

---

## 7.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. சூழலியல் | - | Ecology |
| 2. ஆர்வலர் | - | Activist |
| 3. புவிநாள் | - | Earth day |
| 4. விழிப்புணர்வு | - | Awareness |
| 5. நெகிழிப் பைகள் | - | Plastic bags |
| 6. குளிர்பதனப் பெட்டி | - | Refrigerator |
| 7. நச்சுக்காற்று | - | Toxic air |
| 8. கரியமில வாயு | - | Carbon-dioxide |
| 9. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் | - | Renewable energy |
| 10. மின்உற்பத்தி | - | Power generation |

## 7.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**படத்திற்குப் பொருத்தமாக ஐந்து வருணனைத் தொடர் உருவாக்குக.**

**மரங்கள் பச்சைப் பசேலெனக் காட்சியளித்தன**

1. ________________________________

2. ________________________________

3. ________________________________

4. ________________________________

5. ________________________________



## 7.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் பாடலைப் படித்து உமது கருத்துகளைச் சொந்த நடையில் கூறுக.**

சுற்றுச் சூழல் காத்திடுவோம்
சுகமாய் வாழ வழிவகுப்போம்
சுற்றம் சூழ வாழ்ந்திடுவோம்
சுறுசுறுப்பாய் செயல்படுவோம்

காடு அழிய விடமாட்டோம்
காற்று மாசு செய்யமாட்டோம்
காக்கை குருவி காத்திடுவோம்
காலம் கருதிச் செயல்படுவோம்

## 7.12 செயல்திட்டம்

“மலரும் பூமி” - என்னும் தலைப்பில் படம் வரைந்து வகுப்பில் காட்சிப்படுத்துக.

பாடம்
8

## 8.1 பேசுவோம்



### கலந்துரையாடுவோம்

மண்ணின் வளங்கள் குறித்து, உங்கள் வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 8.2 படிப்போம்

# சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்

நாம் வாழும் பூமி, பல்லாயிரக்கணக்கான உயிர்களுக்கு உறைவிடம். இப்பூமியைப் பாதுகாப்பது நம் கடமை. இதனையே இயற்கை ஆர்வலர்களும் வலியுறுத்துகின்றனர். அவர்களுள் சிலரைப் பற்றி இங்கு அறிந்துகொள்வோம்.

### நம்மாழ்வார்



"இயற்கைத் தாத்தா" என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படுபவர், நம்மாழ்வார். இவர், தமிழ்நாட்டிலுள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் பிறந்தார். இயற்கையின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். வேளாண்மையில் இயற்கை முறைக்கு முதன்மை அளித்தார். இந்திய மரபுவிதைகளை மீட்டெடுத்து, மீண்டும் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தார். வேம்பு, மஞ்சள் உள்ளிட்ட மருத்துவப் பொருள்களுக்குக் காப்புரிமை பெற்றுக்கொடுத்தார். குடும்பம், லிசா, வானகம் போன்ற சூழலியல் அமைப்புகளை உருவாக்கினார். இயற்கை, மரபு விவசாயம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தினார். இவர், சுற்றுச்சூழல், வேளாண்மை தொடர்பாகப் பல நூல்களை எழுதியுள்ளார்.

### வான்காரி மாத்தாய்




கென்ய நாட்டைச் சேர்ந்தவர், வான்காரி மாத்தாய். இவர், "பசுமைப் பட்டை" இயக்கத்தைத் தொடங்கி, ஆப்பிரிக்கக் காடுகளை மீட்டெடுத்தார். இவரை 'மரங்களின் தாய்' என அழைத்தனர். காடுகள் அழிப்பினால் ஏற்பட்ட வறுமையை ஒழிக்க, ஓர் அமைப்பைத் தொடங்கினார். பெண்களின் உதவியுடன் முப்பது ஆண்டில், மூன்றுகோடி மரம் நட்டுள்ளார். சுற்றுச்சூழலை மேம்படுத்துவதையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டார். நோபல் பரிசு பெற்ற முதல் ஆப்பிரிக்கப் பெண் இவரே ஆவார்.

### ரேச்சல் லூயிஸ் கார்சன்



அமெரிக்கக் கடல் உயிரியலாளர்; எழுத்தாளர்; சூழலியலாளர் எனப் பன்முகம் கொண்டவர், ரேச்சல் லூயிஸ் கார்சன். இவர் எழுதிய 'மௌன வசந்தம்' என்னும் நூல் மிகவும் புகழ்பெற்றது. இந்நூல், அமெரிக்காவின் தேசிய பூச்சிக்கொல்லிக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஏராளமான மக்களைச் சுற்றுச்சூழல் பாதுகாவலர்களாக மாற்றிய பெருமை இந்நூலுக்கு உண்டு. இந்நூல் பூச்சிக்கொல்லி வேதிப் பொருள்களுக்குத் தடைவிதிக்க வழிவகுத்தது. இவர் பல நூல்களை எழுதியுள்ளார். Under the Sea Wind, The Sea Around Us, The Edge of the Sea என்னும் நூல்கள் கடற்கரையிலிருந்து கடலின் ஆழம்வரை வாழும் உயிரினங்கள் பற்றிய விரிவான ஆய்வு நூல்களாகும். இவருக்கு அமெரிக்காவின் 'சுதந்திர விருது' வழங்கப்பட்டுள்ளது.

### மசானபு ஃபுகோகா



ஷிகோகு என்ற ஜப்பானியத் தீவைச் சேர்ந்தவர், மசானபு ஃபுகோகா. பழங்குடியினரின் வேளாண் முறையை வலியுறுத்திய இவர், இயற்கை வேளாண்மைக்கு இயந்திரங்கள், வேதியியல் பொருள்கள் முதலியன தேவையில்லை என்றார்.

இந்த வேளாண்முறைக்கு "இயற்கை உழவு முறை" எனப் பெயரிட்டார். இவர் எழுதிய 'ஒற்றை வைக்கோல் புரட்சி' என்னும் நூல் உலகப் புகழ்பெற்றது. இவருக்கு ஆசியாவின் நோபல் பரிசான 'இராமன் மகசேசே விருது', 'பூமிசபை விருது' ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழல் வளங்கள், மக்களின் முறையற்ற செயல்பாடுகளால் பாதிக்கப்படுகின்றன. இதனால், பருவநிலை மாறுபாடு உள்ளிட்ட பல சீர்கேடுகள் ஏற்படுகின்றன. அவற்றைச் சரிசெய்ய, சூழலியலாளர்கள் தம் வாழ்நாளையே அர்ப்பணித்துள்ளனர். நாமும் அவர்களைப்போல இயற்கையை நேசிப்போம். சூழலியல் கேடுகளிலிருந்து இயற்கையை மீட்டெடுப்போம்.

## பொருள் அறிவோம்

1. உறைவிடம் - இருப்பிடம்
2. விவசாயம் – வேளாண்மை
3. வேம்பு - வேப்பமரம்
4. மரபு விதைகள் - மண்ணிற்கு ஏற்ற நாட்டு விதைகள்
5. தீவு – நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட பகுதி
6. வனம் – காடு
7. தாக்கம் – பாதிப்பு

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்.

1. இயற்கை உழவு முறை பற்றி எழுதுக.
2. நம்மாழ்வார் காப்புரிமை பெற்றுக் கொடுத்த பொருள்களைக் குறிப்பிடுக.
3. வான்காரி மாத்தாய் தோற்றுவித்த திட்டத்தையும் பணிகளையும் குறிப்பிடுக.
4. ரேச்சல் லூயிஸ் கார்சன் எழுதிய மௌன வசந்தம் என்னும் நூலின் சிறப்பு யாது?
5. உங்களுக்குப் பிடித்த இயற்கை ஆர்வலர் இருவரின் செயல்பாடுகளை எழுதுக.

## ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நம்மாழ்வார் உருவாக்கிய சூழலியல் அமைப்பின் பெயர்

அ) வனம் ஆ) வாணம் இ) வானகம் ஈ) விதை

2. பசுமைப்பட்டை என்னும் இயக்கத்தைத் தொடங்கி, காடுகளை மீட்டவர் ________

அ) மசானபு ஃபுகோகா ஆ) வான்காரி மாத்தாய்

இ) ரேச்சல் லூயிஸ் கார்சன் ஈ) நம்மாழ்வார்

3. ரேச்சல் லூயிஸ் கார்சனுக்கு வழங்கப்பட்ட விருது

அ) மேன் ஆப் தி மில்லினியம் விருது ஆ) நோபல் பரிசு

இ) வனமகன் விருது ஈ) சுதந்திர விருது

## இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(ஆப்பிரிக்கக் காடுகள், வான்காரி மாத்தாய், ரேச்சல் லூயிஸ் கார்சன், ஒற்றை வைக்கோல் புரட்சி, நம்மாழ்வார்)**

1. மசானபு ஃபுகோகா எழுதிய ____________ நூல் உலகப் புகழ்பெற்றது.

2. மஞ்சள், வேம்பு முதலியவற்றிற்குக் காப்புரிமை பெற்றுத் தந்தவர் ____________.

3. 'மரங்களின் தாய்' என அழைக்கப்பட்டவர் ____________.

4. பூச்சிக்கொல்லி வேதிப்பொருள்களுக்குத் தடைவிதிக்க வலியுறுத்தியவர் ____________.

5. 'பசுமைப்பட்டை' இயக்கத்தினால் ____________ மீட்கப்பட்டன.

## ஈ) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. ரேச்சல் கார்சன் | – | ஒற்றை வைக்கோல் புரட்சி |
| 2. நம்மாழ்வார் | – | மௌன வசந்தம் |
| 3. வான்காரி மாத்தாய் | – | வானகம் |
| 4. மசானபு ஃபுகோகா | – | பசுமைப்பட்டை |

## உ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக.

1. பூமியைப் பாதுகாப்பது நம் அனைவரின் கடமை. ( )

2. நம்மாழ்வார் தமிழ்நாட்டில் கடலூரில் பிறந்தார். ( )

3. வான்காரி மாத்தாய் நோபல் பரிசு பெற்ற ஆப்பிரிக்க பெண். ( )

4. மௌன வசந்தம் என்ற நூலை எழுதியவர் மசானபு ஃபுகோகா. ( )

5. அமெரிக்காவின் சுதந்திர விருது ரேச்சல் லூயிஸ் கார்சனுக்கு வழங்கப்பட்டது. ( )

## 8.3 தெரிந்துகொள்வோம்

### மரபுத்தொடர்கள்



**இராமு** : சோமு ஏன் இப்படிப் பஞ்சாகப் பறக்கிறாய்?

**சோமு** : நேற்று ஆசிரியர் நடத்திய பாடத்தினைப் படிக்க வேண்டும். அதற்குப் புத்தகத்தைத் தேடிக்கொண்டிருக்கிறேன்.

**இராமு** : ஆமாம், ஆமாம் நானும் முடிக்க வேண்டும்.

**அப்பா** : அருண், அடுத்த ஆண்டு பள்ளிச் சுற்றுலாவில் கலந்துகொள்.

**அருண்** : ஒவ்வொரு முறையும் நீங்கள் இப்படித்தான் தட்டிக் கழிக்கிறீர்கள்.

**அப்பா** : அடுத்தமுறை கட்டாயம் அனுப்புவேன். வருத்தப்படாதே.





**அம்மா** : இனியா, என்ன வெட்டிப் பேச்சு பேசிக்கொண்டு இருக்கிறாய். வந்து படி.

**இனியா** : இதோ வந்துவிடுகிறேன்.

**அம்மா** : தேர்வுக்குப் படித்தால்தான் நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். வா!

| | | |
|---|---|---|
| பஞ்சாகப் பறத்தல் | – | அலைந்து திரிதல் |
| தட்டிக் கழித்தல் | – | சாக்குபோக்கு சொல்லுதல் |
| வெட்டிப்பேச்சு | – | வீண்பேச்சு / பயனற்ற பேச்சு |

## பயிற்சிகள்

**அ) கீழ்க்காணும் மரபுத்தொடர்களுக்கு ஏற்ப, தொடர் உருவாக்குக.**

1. பஞ்சாகப் பறத்தல் - ______________________.
2. தட்டிக் கழித்தல் - ______________________.
3. வெட்டிப்பேச்சு - ______________________.

**ஆ) பின்வரும் வினாக்களுக்குப் பொருந்தும் சரியான மரபுத்தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**(வெட்டிப்பேச்சு, பஞ்சாகப் பறந்தான், தட்டிக் கழித்தாள்)**

1. கண்ணன் தன் பணப்பையைத் தொலைத்ததால் அதைத் தேடிப் ______________.
2. கமலா கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டதற்கு விமலா அவளிடம் நாளை தருகிறேன் என்று சொல்லித் ______________.
3. அண்ணனும் தங்கையும் கட்டுரைப் போட்டிக்குத் தயாராகாமல் என்ன ______________ பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? என்று அம்மா கேட்டாள்.

**இ) பொருத்துக.**

1. பஞ்சாகப் பறத்தல் - சாக்குபோக்கு சொல்லுதல்
2. தட்டிக் கழித்தல் - வீண்பேச்சு
3. வெட்டிப்பேச்சு - அலைந்து திரிதல்

## 8.4 மொழியோடு விளையாடுவோம்

**நான்கு சொல்லுக்கும் பொருந்தும் ஓரெழுத்தைக் கண்டறிக.**

| | | |
|---|---|---|
| காகிதம் | கா | காசு |
| காய் | | காகம் |

| | | |
|---|---|---|
| ச ___ ரம் | | மு ___ மை |
| ம ___ ரை | | பு ___ மை |

| | | |
|---|---|---|
| ப ___ சு | | இ ___ சி |
| ம ___ சள் | | அ ___ சு |

| | | |
|---|---|---|
| தமி ___ | | யா ___ |
| வா ___ | | இத ___ |

**தகவல்துளி**

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர் திம்மக்கா. இவர், தேசிய நெடுஞ்சாலையில் நான்கு கிலோமீட்டர் நீளத்திற்கு ஏறக்குறைய 284 ஆலமரம் நட்டுப் பராமரித்துள்ளார். இப்பணிக்காக இவருக்கு இந்திய அரசு '**பத்மஸ்ரீ விருது**' வழங்கியுள்ளது. இம்மரங்களைப் பராமரிக்கும் பொறுப்பைக் கர்நாடக அரசே ஏற்றுக்கொண்டது. '**சாலமருத**' என்ற சொல்லிற்குச் சாலையின் இருபக்கங்களிலும் மரம் நட்டவர் என்று பொருள். இப்பொருள்பட திம்மக்கா தற்போது **சாலமருத திம்மக்கா** என அழைக்கப்படுகிறார்.



**திம்மக்கா**

## 8.5 கேட்டல் கருத்தறிதல்

### பறவைகளின் கலைக்களஞ்சியம்

டாக்டர் சலீம் அலி, இயற்கை ஆர்வலர்களுள் குறிப்பிடத்தக்கவர். பறவைகள் பற்றி அறிந்து கொள்வதில் அவருக்கு ஆர்வம் இருந்தது. சலீம் அலியின் ஆர்வத்தை அவருடைய சித்தப்பா அறிந்துகொண்டார். அப்போது அவர், பம்பாய் இயற்கை வரலாற்றுக் கழகத்தின் சிறப்புச் செயலராக இருந்த மில்லர்ட் என்பவரிடம் சலீம் அலியை அறிமுகப்படுத்தினார். மில்லர்டின் உதவியுடன் பறவைகளை எவ்வாறு அறிந்துகொள்வது, எப்படிப் பாதுகாப்பது போன்ற விவரங்களைக் கற்றறிந்து கொண்டார். அந்நாள் முதல், சலீம் அலிக்குப் பறவைகள்மீது தீராப் பற்று ஏற்பட்டது. நாளடைவில் மக்கள் அனைவரும் அவரை, "பறவைகளைப் பற்றிய நடமாடும் கலைக்களஞ்சியம்" என்று அழைக்கத் தொடங்கினர். இந்திய அரசு அவரது செயல்களைப் பாராட்டி, அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது.

### வினாக்கள்

1. சலீம் அலி எந்த உயிரினத்தைப் பற்றி அறிய ஆர்வம் கொண்டிருந்தார்?
2. சலீம் அலி பம்பாயில் யாரைச் சந்தித்தார்?
3. சலீம் அலி, மில்லர்டிடம் பறவைகளைப் பற்றி என்ன கற்றுக்கொண்டார்?
4. சலீம் அலி மக்களால் எவ்வாறு அழைக்கப்பட்டார்?
5. இந்திய அரசு, சலீம் அலியை எவ்வாறு சிறப்பித்தது?

## 8.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 8.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்

- (குறள்-428)
- திருவள்ளுவர்

(அஞ்சு – அச்சப்படு; பேதைமை – அறியாமை; அறிவார் – அறிவுடையார்)

பொருள்:

அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சாமல் இருப்பது, அறியாமை. அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சி நடப்பது அறிவுடையார் செயல்.

பழமொழி

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

மூங்கில் மரம் புல் வகையைச் சார்ந்தது. இது, மணலிலும் களிமண்ணிலும் வண்டல் மண்ணிலும் வளரும் தன்மை கொண்டது. உவர்நிலம் மற்றும் நீர் தேங்கியிருக்கும் மண்ணிலும் நன்கு வளரும்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. புத்துணர்வு

2. வாழ்நாள்

3. மக்கள்

4. பாதுகாப்பு

## 8.8 மொழிபெயர்ப்போம்

இயற்கையைப் பாதுகாப்பது, மக்களின் கடமையாகும். இன்று உலக நாடுகள் அனைத்தும் இயற்கையைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்துகின்றன. உலகிலுள்ள இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்காகப் பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் உருவாக்கப்பட்டது.

## 8.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. இயற்கை ஆர்வலர் | - | Naturalist |
| 2. மரபு விதைகள் | - | Traditional seeds |
| 3. வல்லுநர் | - | Specialist |
| 4. காப்புரிமை | - | Copyright |
| 5. பசுமைப்பட்டை | - | Green belt |
| 6. உயிரியலாளர் | - | Biologist |
| 7. பூச்சிக்கொல்லி | - | Insecticide / Pesticide |
| 8. பருவநிலை மாற்றம் | - | Climate change |

## 8.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் சொற்களைப் பயன்படுத்திப் படத்திற்குப் பொருத்தமாக ஐந்து தொடர் உருவாக்குக.**

| | | | | |
|---|---|---|---|---|
| சலசல | பளபள | மடமட | சடசட | படபட |



## 8.11 உயர்நிலைத்திறன்

**சுற்றுலா செல்வதற்கான குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை முழுமைப்படுத்திக் கூறுக.**

எங்கள் பள்ளி – சுற்றுலா - ஏற்பாடு – மாணவர்கள் நாற்பது பேர் – ஆசிரியர்கள் ஐந்து பேர் – மூன்று நாள் – பேருந்துப் பயணம் – முதல் நாள் – உயிரியல் பூங்கா – துறைமுகம் – கடற்கரை மணலில் விளையாட்டு – இரண்டாம் நாள் – அருங்காட்சியகம் – மலர்க்கண்காட்சி – மூன்றாம் நாள் – மகிழுந்து தயாரிப்புத் தொழிற்சாலை – பார்வை – நூலகம் – அரிய நூல்கள் - அனைவரும் மகிழ்ச்சிக் கொண்டாட்டம் – பள்ளி திரும்புதல்.

## 8.12 செயல்திட்டம்

ஏதேனும் ஒரு பறவையைப் பற்றிய செய்திகளைத் திரட்டிக் கணினி நழுவம் (Power point) உருவாக்குக.

## மீள்பார்வை

### 1) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக.

**(புறநானூறு, செயப்படுபொருள் குன்றா வினை, ஷெல்லி, ரேச்சல் லூயிஸ் கார்சன், புவி)**

1. பாரதியார் ______________ என்பவர் பெயரில் சங்கம் நிறுவினார்.
2. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் ______________.
3. செயப்படுபொருளை ஏற்று வருவது ______________ எனப்படும்.
4. ஏப்ரல் 22 அன்று ______________ நாள் கொண்டாடப்படுகிறது.
5. மௌன வசந்தம் என்ற நூலை எழுதியவர் ______________.

### 2) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. மஞ்சு | - | உலகம் |
| 2. ஆழி | - | அழகு |
| 3. கார் | - | மேகம் |
| 4. பொலிவு | - | மோதிரம் |
| 5. வையம் | - | கருமை |

### 3) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக.

1. பாரதியாரின் இயற்பெயர் சுப்பிரமணியம். ( )
2. குறிப்புப் பெயரெச்சம் காலம் காட்டும். ( )
3. தேசிய ஒற்றுமை நாள் ஆகஸ்ட் 30இல் கொண்டாடப்படுகிறது. ( )
4. பெயர்கள் தொடர்ந்து வரும்போது காற்புள்ளி இடவேண்டும். ( )
5. சமூகச் சீர்திருத்தவாதிகளுள் ஒருவர் தந்தை பெரியார். ( )

### 4) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. புவி வெப்பமயமாதலைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?
2. மரபுத்தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. பாரதியாரின் விடுதலை உணர்வு குறித்த வரிகளை குறிப்பிடுக.
4. வினையெச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
5. இணைமொழிகளின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

### 5) கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையை எழுதுக.

1. அறிவுக்களஞ்சியமாகத் திகழும் இடம் எது?
2. இரவில் கண் விழித்திருக்கும் பறவை எது?
3. நீரிலும் வாழும் நிலத்திலும் வாழும் உயிரினங்கள் யாவை?
4. இந்தியாவின் வடக்கிலுள்ள மலை எது?
5. தை மாதம் முதல் நாள் கொண்டாடப்படும் விழாவின் பெயர் என்ன?

## 6) கீழ்க்காணும் கதையைப் படித்துத் தேவையான இடத்தில் சரியான நிறுத்தக்குறிகளைக் கொண்டு நிரப்புக.

மரவெட்டிகள் இருவர் காட்டிற்குச் சென்றார்கள் மாலை மீண்டும் இருவரும் கூடும்போது ஒருவனிடத்தில் அதிக விறகும் மேலும் அவன் அதிக களைப்படையாமலும் இருந்தான் அவனைப் பார்த்த மற்றொருவனுக்கோ பெரும் வியப்பு நம்மைப் போலதானே அவனும் அவனால் மட்டும் எப்படி இது முடிந்தது என்று ஆர்வம் தாங்காமல் அவனிடமே கேட்டுவிட்டான் இந்த விறகுகளுக்காக நீ என்ன செய்தாய் என்று ஒருவன் கேட்டான் அதற்கு மற்றொருவன் இடைவிடாமல் வெட்டிக் கொண்டே இருந்தேன் என்று சொன்னான் சிறிதும் ஓய்வு இல்லாமலா என்று கேட்டான் ஆம் அதிக விறகுகள் பெற வேண்டுமே ஆனால் நீ மட்டும் கொஞ்சமும் களைப்படையாமல் இருப்பது எப்படி என்று கேட்டான் நான் இடையில் அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொள்வேன் என்று சொன்னான் நண்பன் மறுநாள் அவனும் அதேபோல் ஓய்வு எடுத்து மரம் வெட்டினான் இருப்பினும் அவனால் நண்பன் அளவுக்கு மரம் வெட்டமுடியவில்லை மறுநாள் மரம் வெட்டப் பிரிந்து சென்றபின் அவன் நண்பனைப் பின்தொடர்ந்து சென்றான் நண்பனும் அரைமணி நேரம் மரம் வெட்டிவிட்டு ஓய்வாக அமர்ந்தான் ஆனால் அவன் ஓய்வு நேரத்தில் அவனது கோடரியைத் தீட்டிக் கொண்டிருந்தான்

## 7) கீழ்க்காணும் திருக்குறளில் விடுபட்ட சொற்களை நிரப்புக.

**(அணிகலம், ஊன்றிய, பேதைமை, உலகு, தன்மகனைச்)**

1. தாமின் புறுவது __________ இன் புறக்கண்டு
   காமுறுவர் கற்றறிந் தார்.
2. கண்ணிற்கு __________ கண்ணோட்டம் அஃதின்றேல்
   புண்ணென்று உணரப் படும்
3. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் __________
   சான்றோன் எனக்கேட்ட தாய்
4. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
   ஐந்துசால்பு __________ தூண்.
5. அஞ்சுவது அஞ்சாமை __________ அஞ்சுவது
   அஞ்சல் அறிவார் தொழில்

## 8) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. வந்த எழிலன் | - | குறிப்புப் பெயரெச்சம் |
| 2. நல்ல புத்தகம் | - | தெரிநிலை வினையெச்சம் |
| 3. ஓடாத வண்டி | - | குறிப்பு வினையெச்சம் |
| 4. படிக்கச் சென்றான் | - | தெரிநிலைப் பெயரெச்சம் |
| 5. வலியப் பேசினான் | - | எதிர்மறைப் பெயரெச்சம் |

**9) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. Mother tongue | - | ________ | 6. Unity | - | ________ |
| 2. Poetry | - | ________ | 7. Residence | - | ________ |
| 3. Peace | - | ________ | 8. Culture | - | ________ |
| 4. Idea | - | ________ | 9. Global warming | - | ________ |
| 5. Ignorance | - | ________ | 10. Ecologist | - | ________ |

**10) கீழ்க்காணும் பழமொழிகளை நிரப்புக.**

1. விளையும் பயிர் முளையிலே ________.
2. கரைப்பார் கரைத்தால் ________ கரையும்.
3. குற்றம் பார்ப்பின் ________ இல்லை.
4. புயலுக்குப் பின்னே ________.
5. பொறுமை ________ பெரிது.

**11) கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை எழுதுக.**

1. தமிழில் முதன்முதலில் ஞானபீட விருது பெற்ற எழுத்தாளர் யார்?
2. உலக உணவுத் திட்டம் எத்தகைய பணிகளை மேற்கொள்கிறது?
3. இயற்கை நமக்கு அளித்த கொடைகள் என்னென்ன?
4. தந்தை பெரியாரின் வாழ்நாள் இலக்கு என்ன?
5. புவிநாள் எப்போது கொண்டாடப்படுகிறது?

**12) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சமத்துவப்பண்பு குறித்து பாரதி மற்றும் ஷெல்லியின் கருத்துகளைக் குறிப்பிடுக.
2. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனத் தொடங்கும் பாடலின் முதல் நான்கு வரிகளை எழுதுக.
3. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்றால் என்ன? இரண்டு எடுத்துக்காட்டு தருக.
4. நேரிணை மொழி, எதிரிணை மொழி இரண்டையும் எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5. வான்காரி மத்தாய் செய்த அருஞ்செயலை எழுதுக.

**13) பின்வரும் தொடர்களில் பொருத்தமான மரபுத்தொடர் கொண்டு நிரப்புக.**

**(வெட்டிப்பேச்சு, தட்டிக் கழித்தான், தாளம் போடுகிறான்)**

1. சங்கர் கிடைத்த வேலையை உதறியதால், இப்போது உணவுக்குத் ________.
2. சீதாவும் கலையும் போட்டிக்குத் தயாராகாமல் ________ பேசிக்கொண்டிருந்தனர்.
3. கண்ணா, வீட்டுப்பாடத்தை முடித்துவிட்டாயா என்று ஆசிரியர் கேட்டதற்கு அவன் சரியாக விடை கூறாமல் ________.

14) பின்வரும் விளம்பரத்தைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.




**வினாக்கள்**

1. கட்டுரைப் போட்டி எங்கு, எப்போது நடைபெறுகிறது?
2. கட்டுரைப் போட்டிக்கான தலைப்புகள் யாவை?
3. கட்டுரைப் போட்டியில் பங்கு பெறுவோருக்கான வயது வரம்பு என்ன?
3. கட்டுரைப் போட்டியை நடத்தும் அமைப்புகள் யாவை?
4. போட்டியில் அறிவிக்கப்பட்ட பரிசுத் தொகையைக் குறிப்பிடுக.


15) பின்வரும் தொடர்களைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.

1. Subramania Bharathi is one of the great nationalist poet, social reformer, writer and revolutionary of modern India. His works were mostly in Tamil, his mother tongue.
2. A short story is a work of prose fiction that can be read in one sitting—usually between 20 minutes to an hour.
3. Cultural unity is the way people of different cultural backgrounds come together to foster a common objective.
4. Global warming is the long-term warming of the planet's overall temperature. It has significant impact on our lives.
5. Nammazhvar was an Indian green crusader, agricultural scientist, environmental activist and organic farming expert best known for his work on spreading ecological farming and organic farming.

பாடம் 9

## 9.1 பேசுவோம்




## கலந்துரையாடுவோம்

வகுப்பறை கற்பித்தல் எவ்வாறு இருக்கவேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்கள்? என்று உங்கள் ஆசிரியர் உதவியுடன் வகுப்பில் கலந்துரையாடுக.

## 9.2 படிப்போம்

# நன்னூல் கூறும் ஆசிரியர் இயல்புகள்

தமிழ் இலக்கண நூல்களுள் ஒன்று நன்னூல். இந்நூலிலுள்ள இலக்கணக் கருத்துகள், பள்ளி மாணவர்களுக்குப் பாடங்களாக உள்ளன. இந்நூலானது, ஆசிரியர், மாணவர் இயல்புகள் பற்றியும் கூறியுள்ளது. ஆசிரியரானவர் கொள்ள வேண்டிய பண்புகள், தள்ள வேண்டிய பண்புகள் எவையெவை என்பதை இந்நூல் வாயிலாக அறிந்துகொள்வோம்.

### ஆசிரியர் இயல்பு

ஒழுக்கம், மேன்மை, பல நூல்களைக் கற்றறிந்த தெளிவு, மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும்படி எடுத்துரைக்கும் ஆற்றல், உலகியல் அறிவு, உயர்குணம் ஆகிய பண்புகள் ஆசிரியருக்கு உரியன.

ஆசிரியருக்கு உரிய பண்புகளைப் பட்டியலிட்ட நன்னூல் நிலம், மலை, நிறைகோல், பூ ஆகியவற்றின் பண்புகளோடு ஆசிரியரின் பண்புகளை ஒப்பிட்டு மேலும் தெளிவுபடுத்துகிறது. அவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

### நிலம்

நல்ல நிலமானது பிறரால் அறியப்படாத பெருமையும் வலிமையும் பொறுமையும் கொண்டிருக்கும். உழவர் செய்யும் முயற்சிக்கேற்ப அவர்க்குப் பயன் தரும்.

அதுபோல, நல்ல ஆசிரியர் என்பவர், பிறரால் அறியப்படாத கல்வியறிவு, தன்னைப் பிறர் பேச்சாற்றலில் வெல்ல முடியாத வலிமை, மாணவர் இகழ்ந்தாலும் அதனைப் பொறுத்துக் கொள்ளும் பண்பு, மாணவர் செய்யும் முயற்சிக்கு ஏற்பப் பயன் தருதல் ஆகிய பண்புகளை உடையவராய் இருப்பார்.

### மலை

மலையை யாரும் எளிதில் அளக்கமுடியாது. அசைக்கவும் முடியாது. நெடுந்தொலைவில் உள்ளோரும் காணக்கூடிய உயரமும், மழை பெய்யாது வறண்ட காலத்திலும் நீர்வளம் தரும் கொடையும் மலைக்குரிய இயல்புகள்.

அதுபோல, ஆசிரியர் என்பவர் அளவிலாத நூலறிவும், எப்படிப்பட்ட புலமையுடையவராலும் அசைக்க முடியாத கல்வியறிவும் பெற்றிருப்பார். பொருளற்ற காலத்திலும் மாணவர்க்குக் கல்விப் பொருளைக் கொடுக்கும் கொடைப்பண்பும் அவரிடம் இருக்கும்.

### நிறைகோல்

நிறைகோலானது, தான் நிறுக்கும் பொருளின் எடையைத் துல்லியமாகக் காட்டும். இரு தட்டுக்கும் இடையே அளவுகோல் நடுவுநிலையுடன் நிற்கும்.

அதுபோல, தம்மிடம் கேட்பவருக்கு ஐயம் தீர விளக்கம் அளித்தல், இருவர் மாறுபட்டு நிற்கும்போது அவ்விருவருக்கும் இடையே நின்று உண்மையை வெளிப்படுத்தல் ஆகியன ஆசிரியருக்குரிய பண்புகள்.

## பூ

மங்கல நிகழ்ச்சிகளில் இடம்பிடித்தல், அழகுபடுத்தும் செயல்களில் தான் முதன்மையாக இருத்தல், யாவரும் மகிழ்ந்து தன்னைச் சூடிக்கொள்ள வைத்தல், மென்மைத்தன்மையோடும், மலரும் காலத்திலே பொலிவோடும் இருத்தல் ஆகிய பண்புகள் பூவிற்கு உரியன.

அதுபோல, நற்செயல்களில் பங்கு பெறுதல், தான் இல்லாமல் ஒரு செயல் சிறப்பாகாது என்பதை உணர்தல், கண்டோர் தன்னிடம் மகிழ்ந்து உரையாடுதல், மெல்லிய குணம் கொண்டு, பாடம் கற்பிக்கும் காலத்தில் முகமலர்ச்சி கொண்டிருத்தல் ஆகிய யாவும் நல்ல ஆசிரியருக்கு உரிய தகுதிகளாகும்.

இதுவரை ஆசிரியருக்குரிய தகுதிகளைப் படித்தோம். இனி, ஆசிரியர் தள்ள வேண்டிய இயல்புகளைப் பற்றியும் அறிந்துகொள்வோம்.

## ஆசிரியர் தள்ள வேண்டிய இயல்புகள்

பாடம் சொல்லும் குணமின்மை, இழிவான குணம் இருத்தல், பிறர் தம்மைவிட உயர்கல்வி பெற்றிருப்பின் பொறாமை கொள்ளுதல், பொருள்களின் மீது அளவுக்கதிகமான ஆசை கொள்ளுதல், உண்மையை மறைத்துப் பொய் கூறி வஞ்சித்தல், கேட்போருக்கு அச்சம் உண்டாகும்படி பேசுதல், மாறுபாடான பண்புகளைக் கொண்டிருத்தல் ஆகியவை ஆசிரியர் தள்ள வேண்டிய இயல்புகள் ஆகும்.

மேலும் கழற்குடம், மடற்பனை, பருத்திக்குண்டிகை, முடத்தெங்கு ஆகியவற்றின் குணங்களைக் கொண்டிருப்பவரும் நல்ல ஆசிரியர் அல்லர். கழற்குடம் முதலானவற்றின் பண்புகள் என்ன என்பதைப் பற்றி நன்னூல்வழி அறிவோம்.

## கழற்குடம்

கழற்குடமானது, தன்னுள்ளே போடப்பட்ட காய்கள் முன்பின்னாகப் பிறழ்ந்துபோகும்படி கொடுக்கும் தன்மையுடையது.

அதுபோல, தமக்கும் கற்பித்த முறையினாலன்றி முன் கற்பிக்கப்பட்டவற்றையும் பின் கற்பிக்கப்பட்டவற்றையும் அம்முறை பிறழ்ந்துபோகத் தாம் கற்றதை எடுத்துக்கூறும் தன்மையுடைவர் ஆசிரியராகத் தகுதி இல்லாதவர்.

## மடற்பனை

தானே தரும் இயல்புடையது, மடல் விரிந்த பனை. ஆனால், தன்னை நாடி வந்து பறிப்பவர்க்குப் பழங்களைக் கொடுக்காது.

அதுபோல, தாம் விரும்பினால் மட்டுமே பிறருக்குக் கற்றுக்கொடுக்கும் இயல்புகொண்டு, தம்மை நாடி வருபவர்க்குக் கற்றுக்கொடுக்க முடியாத தன்மையுடையவர் ஆசிரியர் ஆகமாட்டார்.

## பருத்திக்குண்டிகை

பருத்திக்குண்டிகையானது, பஞ்சைச் சிறிது சிறிதாக அடைக்கும்போதும் துன்பத்துடன் ஏற்றுக்கொள்ளும். பிறர் எடுக்க நினைக்கும்போதும் எளிதில் கொடுக்க இயலாத குணம் கொண்டிருக்கும்.

அதுபோலக் கல்வியைக் கற்கும்போதும் வருந்திக்கொண்டே கற்றுக்கொள்ளுதல், அக்கல்வியைப் பிறர்க்கு எளிதில் எடுத்துச்சொல்லாதிருத்தல் ஆகிய குற்றங்களைக் கொண்டவரும் நல்ல ஆசிரியருக்குரிய தகுதியில்லாதவர்.

## முடத்தெங்கு

வளைந்த தென்னையானது தனக்கு நீர் முதலிய உதவிகளைச் செய்து, தன்னை வளர்த்தவர்க்குப் பயன் தராமல் பிறர்க்குத் தன் காய்களைத் தந்துநிற்கும்.

அதுபோல, பொருள் கொடுத்தல் முதலிய பலவகை உதவிகளையும் செய்து தம்மை வழிபடும் மாணவர்க்கு உதவாமல், அத்தகைய பண்பு இல்லாத மாணவர்க்குத் தாம் கற்ற கல்விப் பொருளைத் தந்து உதவும் ஆசிரியர் குற்றமுடையவர். அவர் ஆசிரியருக்கு உரிய தகுதியில்லாதவர் ஆவார் என்று நன்னூல் விரிவாகக் கூறுகிறது.

ஆசிரியர் தமக்கு ஏற்ற பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். வேண்டாத பண்புகளைத் தள்ளவேண்டும். ஏனெனில், மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது அறிவு, கல்வி, ஒழுக்கம், பெருமை, நடை, உடை, பாவனை ஆகியவற்றை ஆசிரியரிடமிருந்தே பெறுகிறார்கள். ஆசிரியர்களுக்கு உரிய பண்புநலன்கள் எக்காலத்திற்கும் ஏற்றவை.

# பொருள் அறிவோம்

| | | |
|---|---|---|
| 1. மேன்மை | - | சிறப்பு |
| 2. உலகியல் அறிவு | - | அனுபவ அறிவு |
| 3. தொலைவு | - | தூரம் |
| 4. நிறைகோல் | - | தராசு |
| 5. ஐயம் | - | தெளிவின்மை |
| 6. பொலிவு | - | அழகு |
| 7. வஞ்சித்தல் | - | ஏமாற்றுதல் |
| 8. பிறழ்தல் | - | மாறுபடுதல் |
| 9. முடத்தெங்கு | - | வளைந்த தென்னை மரம் |
| 10. குணம் | - | பண்பு |

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. ஆசிரியர், மாணவர் ஆகியோரின் இயல்புகளைக் கூறும் தமிழ் இலக்கண நூல் எது?

2. ஆசிரியருக்குரிய தகுதிகளாக நன்னூல் குறிப்பிடுவன யாவை?

3. நிலத்தின் பண்புகளோடு ஆசிரியருக்குரிய பண்புகளை ஒப்பிடுக.

4. நிறைகோலும் ஆசிரியரும் குறித்து நன்னூல் கூறுவது யாது?

5. ஆசிரியர் ஆகாதவருக்குரிய இயல்புகளாக நன்னூல் குறிப்பிடுவன யாவை?

6. கழற்குடத்தின் பண்புகளோடு நல்லாசிரியர் ஆகாதவரின் பண்புகளை ஒப்பிடுக.

### ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(உலகியல் அறிவு, நிறைகோல், நன்னூல், முடத்தெங்கு, பொறுமை)**

1. தமிழ் இலக்கண நூல்களுள் ஒன்று ______________.

2. ஆசிரியருக்குரிய தகுதிகளுள் ஒன்று ______________.

3. பெருமை, வலிமை, ______________ ஆகியன நிலத்திற்குரிய பண்புகளாகும்.

4. நடுவுநிலைமையுடன் இருப்பதால் ______________ நல்லாசிரியருக்கு ஒப்பாகும்.

5. தன்னை வளர்த்தவருக்கு உதவாமல், பிறர்க்கு உதவுவது ______________.

### இ) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. நிலம் | - | மென்மை |
| 2. மலை | - | தமிழ் இலக்கண நூல் |
| 3. நிறைகோல் | - | உயர்ச்சி |
| 4. பூ | - | நடுவுநிலைமை |
| 5. நன்னூல் | - | வலிமை |

### ஈ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக.

1. நிறைகோலானது தான் நிறுக்கும் பொருளின் எடையைத் துல்லியமாகக் காட்டாது. (    )

2. மலையை யாராலும் எளிதில் அளக்க முடியாது. (    )

3. ஆசிரியர் என்பவர் அசைக்க முடியாத கல்வியறிவு பெற்றிருப்பார். (    )

4. கல்வியைக் கற்கும்போதும் வருந்திக்கொண்டே கற்றுக் கொள்ளுதல் வேண்டும். (    )

5. அறிவுமிக்க சமுதாயத்தை உருவாக்குவது ஆசிரியர்கள். (    )

## 9.3 தெரிந்துகொள்வோம்



## தனிமொழி

**ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது, தனிமொழி.**



மரம்



நிலம்




மலை



படித்தான்

# தொடர்மொழி


ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் தருவது தொடர்மொழி.



வீடு கட்டினான்



நிலத்தை உழுதார்




அவன் பாடம் எழுதினான்



அவள் நடனம் ஆடினாள்

# பொதுமொழி

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும்,
பிரித்தால் வேறொரு பொருளையும் தருவது பொதுமொழி.

| | | |
|---|---|---|
| தாமரை |  மலர் |  தாவுகின்ற மான் (தா + மரை) |
| பலகை |  பலகை |  பல கை (பல + கை) |
| வைகை |  வைகை |  வை கை (வை + கை) |

## பொதுமொழிக்கு மேலும் சில எடுத்துக்காட்டுகள்

1. வேங்கை (புலி/ வேம் + கை)

2. அந்தமான் (அந்தமான் தீவு / அந்த + மான்)

3. எட்டு (எண்ணிக்கை, எள்ளை உண் (எள் + (து- உண்))

4. மாதங்கம் (யானை/நிறைய தங்கம்)

## பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் சொற்களை அட்டவணைப்படுத்துக.

நிலம், பலகை, நூல் எழுதினான், வீடு, அவன் விரைவாக நடந்தான், தாமரை

| தனிமொழி | தொடர்மொழி | பொதுமொழி |
|---|---|---|
| | | |
| | | |

### ஆ) விடைகூறுக.

1. கவின் படம் வரைந்தான் - இது எவ்வகை மொழி?
2. புத்தகம் - இது எவ்வகை மொழி?
3. வேங்கை - இது எவ்வகை மொழி?

## 9.4 மொழியோடு விளையாடுவோம்

### கட்டத்தில் முறைமாறியுள்ள எழுத்துகளை முறைப்படுத்தி விடையைக் கண்டறிக.

1. ஏப்ரல் 23 ______________ நாளாகக் கொண்டாடப்படுகிறது.
2. நூல்களைத் ______________ படிக்க வேண்டும்.
3. புத்தகத்தின் மற்றொரு பெயர் ______________.
4. அறிவுக் களஞ்சியமாகத் திகழும் இடம் ______________.
5. கல்வி அனைவருக்கும் ______________.
6. பாடசாலையைக் குறிக்கும் ______________.
7. பாடம் கற்பிப்பவர் ______________.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ல் | நூ | | | | | | |
| ம | ம் | ச | | | | | |
| தி | ம் | மு | ன | | | | |
| ர் | ய | ரி | சி | ஆ | | | |
| க | ல | ள் | ங் | நூ | க | | |
| ளி | ள் | ப | க் | கூ | ட | ம் | |
| பு | த் | த | க | ப் | உ | ல | க |

**தகவல்துளி**

**இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் (1886–1968)**

மருத்துவர் முத்துலட்சுமி, தமிழகத்தின் புதுக்கோட்டையில் திருக்கோகர்ணம் என்ற ஊரில் பிறந்தார். பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்ட சூழலில், சமூகத் தடைகளை முறியடித்துக் கல்வி பயின்றார். தம் தந்தையின் ஊக்கத்தாலும், நற்சிந்தனையாளர் சிலரின் உதவியாலும் கல்வி கற்று, நாட்டின் முதல் பெண் மருத்துவரானார்.



மருத்துவர் முத்துலட்சுமி

## 9.5 கேட்டல் கருத்தறிதல்


### ஞானி

ஞானி ஒருவர் இருந்தார். அவரிடம் கல்வி கற்க மாணவர்கள் வருவார்கள். அவ்வாறு வரும் மாணவர்களிடம் ஞானி ஒரு தேர்வு வைப்பார். அதாவது, அருகிலிருக்கும் குளத்தைப் பார்த்துவிட்டு வரச்சொல்வார். அங்கே என்ன பார்த்தாய் என்று கேட்பார். அவர்கள் சொல்லும் விடையைக் கொண்டே, அவர்களைத் தம் மாணவர்களாக ஏற்றுக் கொள்வார். தாம் எதிர்பார்க்கும் விடையைக் கூறாதவர்களைத் திருப்பி அனுப்பிவிடுவார். இவரது செயலைக் கண்ட நண்பர், நீங்கள் ஒரே ஒரு கேள்வி கேட்டு, எப்படி மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு அந்த ஞானி, குளத்தில் மீன்கள் துள்ளுகின்றன என்று சொல்பவனை என் மாணவனாக ஏற்றுக்கொள்கிறேன். அதில் என் உருவம் தெரிந்தது என்று சொல்பவனை ஏற்றுக்கொள்வதில்லை. ஏனெனில், அப்படிப்பட்டவன் தான் என்னும் எண்ணம் உடையவன். அவனுக்கு ஞானத்தை ஊட்டமுடியாது என்று விடையளித்தார்.

## வினாக்கள்

1. மாணவர்கள் கல்வி கற்க யாரிடம் சென்றார்கள்?
2. ஞானி, மாணவரைத் தேர்ந்தெடுக்கும் முறை யாது?
3. ஞானி, மாணவர்களிடம் கேட்கும் கேள்வி யாது?
4. நண்பரிடம் ஞானி கூறிய விடை என்ன?
5. மாணவர்களிடம் இருக்கக் கூடாத குணம் என்று உரைப்பகுதி எதனைக் குறிப்பிடுகிறது?

## 9.6 படம் பார்த்துக் கருத்து கூறல்







## 9.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

- (குறள்-517)
- திருவள்ளுவர்

**பொருள்:**

இந்தச் செயலை, இக்காரணங்களால் இவன் முடிப்பான் என்று ஆராய்ந்த பிறகு, அந்தச் செயலை அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

பழமொழி
எழுத்து இல்லாதவர் கழுத்து இல்லாதவர்.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

வாசிப்புப் பழக்கம் அறிவு வளர்ச்சிக்கு வித்திடுகிறது. இப்பழக்கத்தை மாணவர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். நூல்கள் நமக்கு மிகச்சிறந்த வழிகாட்டிகள். பாடநூல்களுடன் பிற நல்ல நூல்களையும் வாசிக்க வேண்டும்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. கல்வி

2. பள்ளிக்கூடம்

3. மாணவர்கள்

## 9.8 மொழிபெயர்ப்போம்

"நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவரே என் தலைசிறந்த நண்பன்" என்பார் ஆபிரகாம் லிங்கன். நல்ல நண்பனைப் போன்ற நூலையும், நல்ல நூலைப் போன்ற நண்பனையும் தேடிப் பெறவேண்டும். நூல்கள், மனத்தைப் பண்படுத்துவன.

---

---

---

## 9.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. ஒழுக்கம் | - | Discipline |
| 2. மேன்மை | - | Superiority |
| 3. நிலம் | - | Land |
| 4. வலிமை | - | Strength |
| 5. பொறுமை | - | Patience |
| 6. கல்வியறிவு | - | Literacy |
| 7. புலமை | - | Proficiency |
| 8. பொறாமை | - | Jealousy |
| 9. ஐயம் | - | Doubt |
| 10. வஞ்சித்தல் | - | Cheating |
| 11. உழவர் | - | Farmer |
| 12. பண்பு | - | Character |
| 13. அளவுகோல் | - | Scale |
| 14. இயல்பு | - | Tendency |

## 9.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் விடைகள் வருமாறு விடுகதை உருவாக்குக.**

| | வினாக்கள் | விடைகள் |
|---|---|---|
| 1. | இரவு பகல் விழித்திருக்கும். இதயம்போல் துடிப்பிருக்கும். அது எது? | கடிகாரம் |
| 2. | | காற்று |
| 3. | | புத்தகம் |
| 4. | | கண்ணாடி |
| 5. | | மழை |
| 6. | | கரும்பு |

## 9.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் பாடலைப் படித்து, அதன் மையக்கருத்தைக் கூறுக.**

மனிதக் கணக்கில் வாழ்வு பெரிது
காலக் கணக்கில் வாழ்நாள் சிறிது
திரும்பிப் பார்த்தால் மனிதர் வாழ்க்கை
எறும்பின் கால்நுனி அளவிலும் சிறிது

மனித உள்ளம் காலிக் கிண்ணம்
இலட்சியங்களை ஊற்றி நிரப்பு
விண்ணும் மண்ணும் வெற்றியின் இலக்கு
செவ்வாய்க் கிரகம் சீக்கிரம் உனக்கு

- கவிஞர் வைரமுத்து

## 9.12 செயல்திட்டம்

கல்வி தொடர்பாக உலக அறிஞர்கள் ஐவரின் கருத்துகளைத் தொகுத்து வருக.

## 10.1 பேசுவோம்

பாடம் 10

## கலந்துரையாடுவோம்


கனவு வகுப்பறை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை மேலே படமாக வரைந்து அது குறித்து உங்கள் வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 10.2 படிப்போம்

# உலகக் கல்வியாளர்கள்


கல்வி குறித்த சிந்தனைகள் நாட்டுக்கு நாடு, இடத்துக்கு இடம் மாறுபடுகின்றன. மக்களுக்கு உகந்த கல்விமுறை என ஒவ்வொரு கல்வியாளரும் சில கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர். அவர்களுள் சிலருடைய கல்விச் சிந்தனைகள் இங்கு இடம்பெறுகின்றன.

### பிளாட்டோ




உலகப் புகழ்பெற்ற கிரேக்கத் தத்துவ ஞானி பிளாட்டோ. இவர் ஏதென்ஸ் நகரில் ஒரு கல்விக்கழகத்தை நிறுவினார். இதுவே உலகின் தொன்மையான பல்கலைக்கழகமாகக் கருதப்படுகிறது. அங்கு இளைஞர்களுக்கு அரசியல், அறிவியல், கணிதம், வானியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. பிளாட்டோ தமது கல்விக் கருத்துகளைத் தொகுத்துக் 'குடியரசு', 'சட்டங்கள்' என்னும் நூல்களாக வெளியிட்டார்.

### ரூசோ




ஜீன் ஜேக்கஸ் ரூசோ சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனீவா நகரில் பிறந்தார். இவர், இயற்கைக் கோட்பாட்டை வலியுறுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஆவார். கல்வியின் நோக்கங்கள், பயிற்றுமுறைகள், கலைத்திட்டக் கூறுகள் முதலியவை இயற்கையின் இயல்புகளுக்கு ஏற்ப அமையவேண்டும் என்பது இவரது கோட்பாடாகும். தமது இயற்கைக் கோட்பாடுகள் குறித்த செய்திகளை 'எமிலி' என்னும் நூலில் வெளியிட்டார். குழந்தைகளை மையமாகக் கொண்ட கல்விமுறைக்கு இவர் முன்னோடியாகத் திகழ்ந்தார். குழந்தைகள் சுதந்திரமாக, தாமே கற்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

### புரோபெல்



ஜெர்மானிய நாட்டைச் சேர்ந்தவர் பிரிட்ரிக் வில்ஹெல்ம் ஆகஸ்ட் புரோபெல். இவர், 'மழலையர் பள்ளி' (KINDER GARTEN) கல்வி முறையை உருவாக்கினார். விளையாட்டுகள் குழந்தைகளின் மன உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. எனவே, குழந்தைகளுக்கு விளையாட்டு மூலம் கற்பிப்பதே சிறந்தது எனக் கருதினார். மாணவர்களின் மன உணர்வுகளை மதிக்கவேண்டும் என வலியுறுத்தினார். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாடிக் காட்டும் வகையில் பாடல் தொகுப்பு வெளியிட்டார்.

## ஜான் டூயி




அமெரிக்கக் கல்விச் சிந்தனையாளர்களுள் முதன்மையானவர் ஜான் டூயி. கல்வி என்பது செய்து கற்றல் (Learning by doing) என்னும் அடிப்படையில் இருக்க வேண்டும் என வலியுறுத்தினார். பல நாடுகளுக்குச் சென்று அங்குள்ள பள்ளி நடைமுறைகளைக் கண்டறிந்தார். 'சூழ்நிலையோடு பொருத்தப்பாட்டை அடைய ஒருவர் பெறும் பயிற்சியே கல்வி' என்பது அவரது கொள்கையாகும். நடைமுறை வாழ்க்கையோடு ஒத்துவராத கல்வி பயனற்றது. ஆதலால், மாணவர்களை வாழ்க்கைக்குத் தயார்படுத்தும் வகையில் பாடத்திட்டம் அமையவேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

## மரியா மாண்டிசோரி

இத்தாலி நாட்டில் பிறந்தவர் மரியா மாண்டிசோரி. இவர் மருத்துவராக இருந்தார். குழந்தை மையக்கல்வி முறையில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். எனவே, குழந்தைகளுக்கான கல்விமுறை ஒன்றினை உருவாக்கினார். அம்முறை "மாண்டிசோரி" கல்விமுறை என்றழைக்கப்படுகிறது. குழந்தைகளின் தனித்தன்மைக்கு ஏற்ப, பாடத்திட்டம் இருக்கவேண்டும் என்றார். குழந்தைகளின் புலன் செயல்பாடுகளைத் தூண்டும் வகையில் துணைக்கருவிகளைப் பயன்படுத்தினார். குழந்தை உளவியலை மையமாகக்கொண்ட 'மாண்டிசோரி கல்வி முறை" இன்றும் பல நாடுகளில் பின்பற்றப்படுகிறது.



## ஜே. கிருஷ்ணமூர்த்தி



இந்தியத் தத்துவவியலாளர்களுள் குறிப்பிடத்தக்கவர், ஜே. கிருஷ்ணமூர்த்தி. இவர் இந்தியாவில் பிறந்தவர். கல்வியானது, ஒருவரின் ஒட்டுமொத்த வளர்ச்சியை வெளிப்படுத்தவேண்டும் என்பது, இவரது கூற்றாகும். இவரது கல்விச் சிந்தனைகள், 'பள்ளிக்குக் கடிதங்கள்' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளன. இவரது சிந்தனைகள் சமகாலத்திற்கு மட்டுமன்று, உலகளாவியதும் ஆகும். சுதந்திரம், ஒழுக்கம், புலன்வழிக் கற்றல், அறிவியல் மனப்பான்மை, படைப்பாற்றல் சிந்தனை முதலானவற்றை உள்ளடக்கியதாகும். கல்வி என்பது, அடிப்படையில் கற்றல் கலையாகும். இதனைப் புத்தகங்களிலிருந்து மட்டும் பெற இயலாது. வாழ்க்கையின் முழு இயக்கத்திலிருந்தும் பெறவேண்டும் என்பது, இவரது கொள்கையாகும்.

## பொருள் அறிவோம்

| | | |
|---|---|---|
| 1. சிந்தனை | - | எண்ணம் |
| 2. தொன்மை | - | பழைமை |
| 3. நோக்கம் | - | குறிக்கோள் |
| 4. சுதந்திரம் | - | விடுதலை |

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. பிளாட்டோவின் கல்விக்கழகத்தில் கற்பிக்கப்பட்ட பாடங்கள் யாவை?
2. புரோபெல் அறிமுகம் செய்த கல்வி முறையின் பெயர் என்ன?
3. கல்வி என்பது எதன் அடிப்படையில் அமைய வேண்டும் என்று ஜான்டூயி கூறுகிறார்?
4. மாண்டிசோரி கல்வி முறை குறித்து எழுதுக.
5. ரூசோவின் கல்விச் சிந்தனைகளை எழுதுக.
6. ஜே. கிருஷ்ணமூர்த்தியின் கல்விக் கோட்பாட்டைக் கூறுக.

### ஆ) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. ரூசோ | - | இத்தாலி |
| 2. பிளாட்டோ | - | அமெரிக்கா |
| 3. ஜான் டூயி | - | கிரேக்கம் |
| 4. மரியா மாண்டிசோரி | - | ஜெர்மனி |
| 5. புரோபெல் | - | சுவிட்சர்லாந்து |

### இ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக.

1. மரியா மாண்டிசோரி மருத்துவர். ( )
2. பிளோட்டோ, குழந்தைகளுக்கான பாடல் தொகுப்பை வெளியிட்டார். ( )
3. ரூசோ எமிலி என்ற நூலை எழுதினார். ( )
4. புரொபெல் மாண்டிசோரி முறையை அறிமுகப்படுத்தினார். ( )

# 10.3 தெரிந்துகொள்வோம்

## பல சொல் ஒரு பொருள்



பின்வரும் உரையாடலில் வண்ணத்திலுள்ள சொற்கள் யாவும் பேசினார் என்னும் பொருளையே தருவதைப் படித்து மகிழுங்கள்.

ஆசிரியர் : அனைவருக்கும் வணக்கம்!

மாணவர்கள் : வணக்கம் ஐயா

ஆசிரியர் : நேற்று கல்வி அமைச்சர் தொலைக்காட்சியில் பேசினார். அனைவரும் கேட்டீர்களா?

மாணவர்கள் : ஆம் ஐயா. கல்வித் தரத்தை உயர்த்துவது குறித்து அருமையாகக் கூறினார்.

ஆசிரியர் : மிக எளிமையாகவும் நன்கு புரிந்துகொள்ளும் படியும் எடுத்துச் சொன்னார்.

கண்மணி : நாள்தோறும் நூலகம் செல்லும் பழக்கம் வேண்டும் என்று கூடப் பகிர்ந்தார்.

குறளரசன் : உடற்பயிற்சிக்கு முதன்மை அளிக்கவேண்டும் என்று உரைத்தார்.


இனியன் : அதுமட்டுமா, மனப்பயிற்சிக்கும் இடம்தர வேண்டுமென இயம்பினார்.

ஆசிரியர் : ஆம். உடல், உள்ளம் இரண்டுமே நமது கண்கள் என்று விளம்பினார் அல்லவா!

செழியன் : ஆமாம். மேலும், நாள்தோறும் புத்துணர்ச்சியுடன் செயல்பட உயர்சிந்தனைத் திறனை மேம்படுத்துக என்றும் பகன்றார்.

ஆசிரியர் : அருமை! அருமை! அமைச்சர் நவின்ற கருத்துகளை அனைவரும் நன்கு புரிந்து கொண்டுள்ளீர்கள். அவற்றை நாமும் பின்பற்றுவோம்.

## யானையைக் குறிக்கும் பல சொல் அறிவோம்




## மேலும் சில பல சொல் ஒரு பொருள் தரும் சொற்கள்

| பல சொல் | ஒரு பொருள் |
| --- | --- |
| ஊண், ஆகாரம், அடிசில், உண்டி | உணவு |
| நாசம், அழிவு, சிதைவு, சேதம் | கேடு |
| அணிதல், சூடுதல், புனைதல், அலங்கரித்தல் | தரித்தல் |
| ஓசை, சத்தம், அரவம் | ஒலி |
| பகலவன், கதிரவன், இரவி, பரிதி, ஆதவன் | சூரியன் |
| உடம்பு, மேனி, மெய், சரீரம் | உடல் |
| தூக்கம், துயில், அனந்தல், சயனம் | உறக்கம் |
| பா, கவிதை, யாப்பு | செய்யுள் |
| பரி, மா, அசுவம், புரவி, கலிமா | குதிரை |
| பதம், மொழி, கிளவி | சொல் |
| மங்கை, நங்கை, வனிதை | பெண் |
| மாசு, குற்றம், பிழை | தவறு |
| பாசம், பரிவு, ஈரம், பற்று, கருணை, நேசம் | அன்பு |
| வனப்பு, பொலிவு, எழில், வடிவு, அணி | அழகு |
| கோ, கொற்றவன், காவலன், வேந்தன், மன்னன், இராஜா, கோன் | அரசன் |
| கணை, சரம், பாணம், வாளி, அஸ்திரம் | அம்பு |
| அல்லல், துயர், இடர், இடும்பை, இன்னல் | துன்பம் |
| சிங்கம், திருமால், அரிதல் | அரிமா |
| இன்பம், களிப்பு, ஆனந்தம் | மகிழ்ச்சி |
| மதி, விவேகம், ஞானம், உணர்வு, மேதை, உரம் | அறிவு |

## பயிற்சிகள்

### அ) ஒரு பொருளைக் குறிக்கும் பல சொல்லை எழுதுக.

<table>
<tr><td>குழந்தை</td><td>பிள்ளை</td><td>குழவி</td><td>சிசு</td></tr>
<tr><td rowspan="2">மதலை</td><td colspan="2"></td><td rowspan="2">மகவு</td></tr>
<tr><td>மழலை</td><td>சேய்</td></tr>
</table>



சூரியன்



குதிரை

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td rowspan="2"></td><td colspan="2"></td><td rowspan="2"></td></tr>
<tr><td></td><td>மன்னன்</td></tr>
</table>

**ஆ) சரியான சொல்லை வட்டமிடுக.**

1. உடலைக் குறிக்காத சொல் : உடம்பு, மேனி, மெய், உண்டி
2. அன்பைக் குறிக்காத சொல் : பாசம், நேசம், பொய், பற்று
3. அழகைக் குறிக்காத சொல் : அரவம், பொலிவு, எழில், வடிவு

**இ) கொடுக்கப்பட்ட சொற்களுக்கு இணையான சொற்களை எழுதுக.**

1. மகிழ்ச்சி - இன்பம் களிப்பு ஆனந்தம்
2. பெண் - ______ ______ ______
3. உணவு - ______ ______ ______
4. சொல் - ______ ______ ______

**ஈ) பொருத்துக.**

1. ஓசை, சத்தம், அரவம் - யானை
2. பா, கவிதை, யாப்பு - சொல்
3. மாசு, குற்றம், பிழை - ஒலி
4. பதம், கிளவி, மொழி - செய்யுள்
5. வேழம், கரி, களிறு - தவறு

## 10.4 மொழியோடு விளையாடுவோம்

**கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திச் சொல்லின் முதல் எழுத்தை மட்டும் மாற்றிச் சொல்லைக் கண்டறிக.**

1. அருமை - நிறத்தைக் குறிக்கும் ______.
2. கடல் - விளையாடும் இடத்தைக் குறிக்கும் ______.
3. தூக்கம் - முயற்சியைக் குறிக்கும் ______.
4. தங்கம் - விலங்குகளின் அரசனைக் குறிக்கும் ______.
5. என்பு - பரிவைக் குறிக்கும் ______.
6. சிந்தை - கால்நடைகளின் கூட்டத்தைக் குறிக்கும் ______.
7. பத்து - கடலில் கிடைக்கும் ஒரு பொருளைக் குறிக்கும் ______.
8. நண்டு - பூவில் தேனெடுக்கும் பூச்சியைக் குறிக்கும் ______.
9. ஆவி - பூட்டைத் திறக்கும் பொருளைக் குறிக்கும் ______.
10. கருவி - மலையிலிருந்து வீழ்வதைக் குறிக்கும் ______.

## கருத்து விளக்கப்படம்


# 700
# அரங்குகள்

**நாள்** : செப்டம்பர் 6 முதல் 19 வரை

**நேரம்** : சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் காலை 11 மணி முதல் இரவு 9 மணி வரை; மற்ற நாள்களில் பகல் 2 மணி முதல் இரவு 9 மணி வரை

**இடம்** : செயின்ட் ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி (பச்சையப்பன் கல்லூரி எதிரில்)

**நுழைவுக் கட்டணம் ₹ 10/-**





கோடிக்கணக்கான புத்தகங்கள் **10% தள்ளுபடி**

## வினாக்கள்

1. கொடுக்கப்பட்ட விளம்பரம் எதனைப் பற்றியது?
2. சென்னைப் புத்தகக் கண்காட்சியில் எத்தனை அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன?
3. புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெற்றது?
4. புத்தகங்களுக்கு 10% தள்ளுபடி என்பதன் பொருள் என்ன?
5. புத்தகக் கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெறுகின்றன?

## சுவைச் செய்தி



அரிஸ்டாடில் வாழ்வில் நடைபெற்றதாக கூறப்படும் ஒரு சுவாரசியமான நிகழ்வு. ஒருமுறை அரிஸ்டாட்டில் தம் மாணவர்களை மலையேற்றப் பயிற்சிக்கு அழைத்துச் சென்றார். அவர், முன்னே செல்ல, மாணவர்கள் பின்தொடர்ந்து சென்றனர். அவரின் மாணவராகிய அலெக்சாண்டரும் உடன் சென்றார். வழியில் திடீரென்று காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து வரத்தொடங்கியது. இதனைப் பார்த்த அலெக்சாண்டர், அரிஸ்டாட்டிலின் முன்பாக வந்து நின்றார். அரிஸ்டாட்டிலோ, காட்டாற்று வெள்ளம் அதிகமாக இருப்பதால் அலெக்சாண்டரைப் பின்னால் செல்லுமாறு கூறினார். அதற்கு அலெக்சாண்டர் தம் ஆசிரியரிடம், 'நீங்கள் நினைத்தால் ஆயிரம் அலெக்சாண்டர்களை உருவாக்க முடியும். ஆனால், உங்களைப் போன்ற ஆசிரியரை எங்களால் உருவாக்க முடியாது' என்று கூறி வெள்ளப்பகுதியிலிருந்து ஆசிரியரான அரிஸ்டாட்டிலையும் தள்ளி நிற்க வைத்தார். இந்நிகழ்வு, தம் ஆசிரியர்மீது அலெக்சாண்டருக்கு இருந்த மதிப்பை உணர்த்துகிறது.

## 10.5 கேட்டல் கருத்தறிதல்

### படி


நூலைப்படி சங்கத்தமிழ்
நூலைப்படி - முறைப்படி
நூலைப்படி
காலையில் படி - கடும் பகல் படி
மாலை இரவு
பொருள்படும்படி (நூலைப்)
கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டுமப்படி
கல்லாதவர் வாழ்வதெப்படி ?

- பாவேந்தர் பாரதிதாசன்

### வினாக்கள்

1. எந்த நூலைப் படிக்க வேண்டும் எனப் பாடல் கூறுகிறது?
2. நூலை எப்படிப் படிக்க வேண்டும்?
3. திருவள்ளுவர் கூறும் 'கற்க கசடற...' என்னும் குறளைக் கூறுக?
4. எப்போதெல்லாம் நூல்களைப் படிக்கவேண்டும்?
5. பாடலின் ஆசிரியர் பெயரைக் கூறுக.

## 10.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 10.7 செந்தமிழ்ச்செல்வம்

### மூதுரை

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் - தானும்தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி

- (பாடல் 14)

- ஔவையார்

(கான மயில் – காட்டிலுள்ள மயில்: பாவித்து- எண்ணி)

**பொருள்:**

ஆழ்ந்த கல்வி அறிவு இல்லாதவன், நன்கு கற்றவர்களைப்போலத் தன்னை நினைத்துக்கொண்டு, பேச நினைக்கும் செயலானது, காட்டிலுள்ள மயில் தன் அழகிய தோகையை விரித்து ஆடுவதைக் கண்டு, தன்னுடைய அழகில்லாத சிறகை விரித்து ஆடும் வான்கோழியின் செயலுக்கு ஒப்பானதாகும்.

**பழமொழி**

கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

மாண்டிசோரி கல்விமுறை குழந்தைகளை மையமாகக் கொண்டது. இம்முறையில் மாணவர்களின் தனித்திறனுக்கு இடம் கொடுக்கப்படுகிறது. வகுப்பறையில் துணைக் கருவிகள் பயன்படுத்த வலியுறுத்தப்படுகிறது. கற்கும் வேகத்திற்கேற்பப் பாடத்திட்டம் வடிவமைக்கப்படுகிறது.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. நற்பண்பு
2. சுயமுயற்சி
3. ஆர்வம்

## 10.8 மொழிபெயர்ப்போம்

J. Krishnamurti was an Indian philosophers, writer and speaker. According to him, education should reveal one's overall development. His educational thoughts are stated in the book 'Letters to School'.

__________________________________________

__________________________________________

## 10.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. பல்கலைக்கழகம் | - | University |
| 2. அரசியல் | - | Politics |
| 3. அறிவியல் | - | Science |
| 4. கணிதம் | - | Mathematics |
| 5. வானியல் | - | Astronomy |
| 6. இராணுவம் | - | Army |
| 7. இயற்கைக் கோட்பாடு | - | Naturalism |
| 8. குழந்தைமையக் கல்வி | - | Child-centred Education |
| 9. முன்னோடி | - | Pioneer |
| 10. தத்துவவியலாளர் | - | Philosopher |

## 10.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கல்வி என இறுதியில் முடியும்படி மூன்று சொல் கொண்ட பாடல் உருவாக்குக.**

உலகம் போற்றும் கல்வி

உயர்வைத் தரும் கல்வி

______________________

______________________

______________________

## 10.11 உயர்நிலைத் திறன்

**கீழ்க்காணும் உரைப்பகுதியில் பொருத்தமான சொற்களை நிரப்பி, முழுமையாக எழுதுக.**

உலகில் வாழும் உயிரினங்கள் ஒவ்வொன்றும் _______________ திறனைப் பெற்றுள்ளன. கற்றலின் மூலம் அறிவு, உடல்திறன், மனப்பான்மை ஆகியவற்றில் _______________ ஏற்படுகின்றன. கற்றலின் விளைவாக, உயிரினங்களின் _______________ சிறிதளவாவது மாற்றம் ஏற்படுகிறது. எல்லா உயிரினங்களிடத்தும் கற்றல் திறன் உள்ளபோதும் _______________ கற்றல் செயலில் சிறந்து விளங்குகிறான். இத்திறன் அவனது _______________ சார்ந்ததாகும்.

(நடத்தையில்  நுண்ணறிவைச்  கற்றல்  மாற்றங்கள்  மனிதன்)


## 10.12 செயல்திட்டம்

உலகக் கல்வியாளர்களுள் யாரேனும் ஒருவரைப் பற்றிய செய்திகளைத் திரட்டிக் காணொலி தயாரித்து வருக.

பாடம்

11

## 11.1 பேசுவோம்



## கலந்துரையாடுவோம்

தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சி குறித்து உங்கள் வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 11.2 படிப்போம்

# உலகளாவிய தொழிற்புரட்சி

தொடக்கத்தில் மக்களின் சமூக, பொருளாதார அமைப்புமுறை பல்வேறு தொழில்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பின்னர் ஏற்பட்ட அறிவியல் முன்னேற்றத்தினால், தொழில் துறையில் பெரும் மாறுதல்கள் உண்டாயின. இத்தகைய மாறுதல்களால் தொழில்துறையில் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டது. இதனையே தொழிற்புரட்சி என்கிறோம்.

## தொழிற்புரட்சியின் தோற்றம்

தொழிற்புரட்சி, இங்கிலாந்தில்தான் முதன்முதலில் தோற்றம் பெற்றது. பின்னர், ஐரோப்பா, வடஅமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மனி, இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்கும் பரவியது. தொழிற்புரட்சியின் காரணமாக ஒரு நாட்டின் பொருளாதாரம் வேளாண்மையை மட்டும் சார்ந்திருந்த நிலை மாறித் தொழிலகப் படைப்புகளின் பங்களிப்பும் ஏற்படத் தொடங்கியது. கைகளால் செய்யப்பட்டு வந்த பஞ்சு நூற்பாலை முதல் பல தொழில்கள் இயந்திரமயமாகின. இதனால், பெரும் எண்ணிக்கையில் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அச்சுத்தொழில், மக்கள் தொடர்பு ஊடகங்கள், போக்குவரத்து, கல்வி, மருத்துவம் முதலான பல துறைகள் பெருகத் தொடங்கின.

## நெசவு

மக்கள்தொகைப் பெருக்கத்தினால், துணிகளின் தேவை அதிகரித்தது. இதனால், நெசவுத்தொழிலுக்கு உதவும் இயந்திரங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித் துணிகளின் உற்பத்தி பன்மடங்கு பெருகியது. நாளடைவில் தையல் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், பருத்தித் துணியாலான அழகிய ஆடைகள் உருவாயின.

## வேளாண்மை

வேளாண்மை துறையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் உதவியால் நிலங்களைப் பண்படுத்துவதற்குப் புதிய கருவிகள் தயாரிக்கப்பட்டன. இதன் மூலம் வேளாண்மையில் உடல் உழைப்பின் பங்கு குறைந்து இயந்திரங்களின் பங்கு பெருகியது. 'டிரில்' என்னும் விதை விதைக்கும் கருவி, எஃகினாலான கலப்பைகள், கதிர் அறுக்க உதவும் இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மண்ணை வளப்படுத்த பயிர் சுழற்சிமுறை செயல்படுத்தப்பட்டது.

## போக்குவரத்து

தொழிற்புரட்சியினால் உற்பத்தி அதிகரித்தது. இதனால், வாணிகம் பெருகியது. உற்பத்தியாகும் பொருள்களை உலகெங்கும் கொண்டு செல்ல, போக்குவரத்தின் தேவை ஏற்பட்டது. புதிய சாலைகள் உருவாக்கப்பட்டன. ஜன் மெக்காடம் என்பவர் உறுதியான மேற்பரப்பு கொண்ட சாலைகளை அமைத்தார். ஆனால், கனமான பொருள்களை எடுத்துச் செல்ல நீர்ப்போக்குவரத்து தேவைப்பட்டது. இதற்குப் பிரிட்ஜ் வாட்டர் டியூக் மற்றும் ஜேம்ஸ் பிரின்ட்லியும் உதவினர். ஜார்ஜ் ஸ்டீவன்சன் கண்டுபிடித்த நீராவி இயந்திரம் இரயில் பாதை தொடங்க உதவியது. இரப்பரைக்கொண்டு சக்கரங்கள் உருவாக்கியதால் சாலைப்போக்குவரத்தில் பெரும்புரட்சி ஏற்பட்டது.

## தகவல் தொடர்பு

செய்திகளைப் பரிமாறிக்கொள்ளும் தகவல் தொடர்புத் துறையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. ரௌலண்ட் ஹில் என்பவர், இங்கிலாந்தில் அஞ்சல் முறையை ஏற்படுத்தினார். இவரை 'நவீன அஞ்சல் முறையின் தந்தை' என அழைக்கிறோம். மின்னாற்றல் கண்டுபிடிக்கப்பட்டபின் தந்தி, தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி முதலான கருவிகள் தோற்றம் பெற்றன.

## தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகள்

தொழிற்புரட்சியினால் ஏராளமான நன்மைகள் ஏற்பட்டன. பெரிய ஆலைகள் அமைக்கப்பட்டதால், பொருள் உற்பத்தி அதிகரித்தது. அதிக எண்ணிக்கையிலும் விலை மலிவாகவும் விரைவாகவும் பொருள்கள் தயாரிக்கப்பட்டன.

நன்மைகள் ஏற்பட்டாலும் தொழிற்புரட்சியால் பாதிப்புகளும் ஏற்பட்டன. தொழிற்சாலைகள் பெருகியதால் அதிக மக்கள் நகரப்பகுதிகளில் குடியேறத் தொடங்கினர். இதனால், நகரப்பகுதிகளில் கூட்ட நெரிசல், சுகாதாரமற்ற வாழ்க்கை, தொற்றுநோய் பாதிப்புகள் ஏற்பட்டன.

தொழிற்சாலைகள் பெருமளவு தோற்றம் பெற்றதால், சிறுதொழில்கள் செல்வாக்கு இழந்தன. மேலும், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளால் மக்களின் உடல்நலம் பாதிக்கப்பட்டது.

தொழிற்சாலை முறையால் முதலாளி, தொழிலாளி என்னும் பிரிவுகள் உண்டாயின. கடுமையான வேலை, குறைந்த கூலி இவற்றால் தொழிலாளிகள் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு ஆதரவாகத் தொழிற்சங்கங்கள் உருவாயின.

இன்றைய அறிவியல் தொழில்நுட்பம், தொழிற்புரட்சிக்குப் பெரிதும் உதவுகிறது. பாதிப்புகளைக் குறைத்து, நன்மைகளை அதிகரித்ததன் மூலமாக தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட மாற்றத்தை நம்மால் காணமுடிகிறது. மக்களின் பொருளாதாரம், நாகரிகம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளன. வருங்கால இளைஞர் சமுதாயம் இதனை நன்குணர்ந்து உலகளாவிய தொழிற்புரட்சிக்கு மேலும் வழிவகுக்கலாம்.

## பொருள் அறிவோம்

1. வேளாண்மை - உழவு
2. உற்பத்தி - தயாரிப்பு
3. இயந்திரம் - கருவி
4. கனமான - எடை மிகுந்த
5. மலிவு - குறைவு
6. பாதிப்பு - தாக்கம்

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்.

1. தொழிற்புரட்சி என்றால் என்ன?

2. தொழிற்புரட்சி முதலில் எங்குத் தோன்றியது?

3. பசுமைப்புரட்சி எனக் குறிப்பிடப்படுவது எது?

4. 'நவீன அஞ்சல்முறையின் தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?

5. தொழிற்புரட்சியினால் விளைந்த நன்மைகள் யாவை?

6. தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட பாதிப்புகளுள் இரண்டு எழுதுக.

### ஆ) கோடிட்ட இடத்தில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

**(தொழிற்புரட்சிக்குப், நீராவி, பசுமைப்புரட்சி, இங்கிலாந்து, ஜன் மெக்காடம்)**

1. தொழிற்புரட்சி முதன்முதலில் தோன்றிய நாடு ____________.

2. உறுதியான மேற்பரப்பு கொண்ட சாலைகளை அமைத்தார் ____________.

3. வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட மாறுதலே ____________.

4. இரயில் பாதை தொடங்குவதற்கு____________ இயந்திரம் உதவியது.

5. அறிவியல் தொழில்நுட்பம் ____________ பெரிதும் உதவுகிறது.

### இ) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. ரௌலண்ட் ஹில் | - | நீராவி இயந்திரம் |
| 2. ஜார்ஜ் ஸ்டீவன்சன் | - | உறுதியான சாலை |
| 3. ஜன் மெக்காடம் | - | அஞ்சல் முறை |

### ஈ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக.

1. தொழிற்புரட்சி முதன்முதலில் இந்தியாவில் நடைபெற்றது. ( )

2. மக்கள்தொகை பெருக்கத்தினால் துணிகளின் தேவை அதிகரித்தது. ( )



3. 'டிரில்' என்பது கதிர் அறுக்க உதவும் கருவி. ( )

4. ஜார்ஜ் ஸ்டீவன்சன் என்பவர் நவீன அஞ்சல் முறையின் தந்தை. ( )

5. தொழிற்சாலை முறையால் முதலாளி, தொழிலாளி என்ற பிரிவுகள் உண்டாயின. ( )

## 11.3 தெரிந்துகொள்வோம்

### உவமைத் தொடர்கள்

| | | |
|---|---|---|
|  | சாலையில்<br>அடிபட்டுக்கிடந்த தன்<br>கன்றைக் கண்டு,<br>பசுவானது அனலில் பட்ட<br>புழுபோலத் துடித்தது. |  |
|  | கந்தன் தனக்குத்<br>தெரிந்தவர்க்கு மட்டுமே<br>உதவியதால்,<br>அவனது பெருமை<br>குடத்திலிட்ட<br>விளக்கைப்போல<br>இருந்தது. |  |
|  | ஆசிரியர் கொடுத்த<br>பரிசை செல்வம்<br>கண்ணினைக் காக்கும்<br>இமை போல பாதுகாத்து<br>வருகிறான். |  |

| | | |
|---|---|---|
| அனலில்பட்ட புழுபோல | - | துன்பம் |
| குடத்திலிட்ட விளக்குபோல | - | யாரும் அறியாதிருத்தல் |
| கண்ணினைக் காக்கும் இமை போல | - | பாதுகாத்தல் |

## பயிற்சிகள்

**அ) கீழ்க்காணும் தொடர்களில் பொருத்தமான உவமைத்தொடர்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

**(அனலில்பட்ட புழுபோல, குடத்திலிட்ட விளக்குபோல, கண்ணினைக் காக்கும் இமை போல)**

1. மாலதிக்கு இனிய குரல்வளம் இருந்தும், அவள் பாட்டுப்போட்டியில் சேராததால் அவளது திறமை ________________ இருந்தது.
2. வள்ளி கவிதை போட்டியின் மூலம் பெற்ற பரிசுப் பொருளை ________________ போல பாதுகாத்து வந்தாள்.
3. வெள்ளத்தில் தன் நண்பனின் வீடு இடிந்து விழுந்ததைக் கேட்ட தமிழரசன் ________________ துடித்தான்.

**(ஆ) கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து, அதிலுள்ள உவமைத் தொடர்களின் பொருளை எழுதுக.**

மக்கள், கொள்ளைநோய் காரணமாக ஓட்டுக்குள் அடங்கிய ஆமைபோல் வீட்டில் பாதுகாப்பாக இருந்தனர். தொற்றுப் பரவல், காட்டுத் தீயைப்போல் பரவியது. நண்பர்களையும் உறவினர்களையும் காண்பது அத்தி பூத்தாற்போல் ஆனது. பல குழந்தைகள் பெற்றோரை இழந்து அடியற்ற மரம்போல் ஆயினர். கொள்ளை நோய்த் தடுப்பூசியை மக்கள் அனைவரும் கலங்கரை விளக்கம் போல் எண்ணினர்.

1. ________________.
2. ________________.
3. ________________.
4. ________________.
5. ________________.

## 11.4 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளுக்கான விடைகள் இடம் மாறியுள்ளன. அவற்றைக் கண்டறிக.**

1. சிவப்பு முத்துகள்

| | |
|---|---|
| து | ளை |
| ம | மா |

மாதுளை

6. தேனை உண்ணும் விலங்கு

| | |
|---|---|
| க | ற |
| ர | டி |

______

2. எதிரொளிக்கும்.

| | |
|---|---|
| டி | ணா |
| க | ண் |

______

7. நம்மைத் தொடர்ந்து வரும்.

| | |
|---|---|
| ல் | நி |
| ழ | ள் |

______

3. குதித்துக் குதித்து ஓடும்.

| | |
|---|---|
| ங் | க |
| கா | ரு |

______

8. வெயிலுக்குக் குளிர்ச்சியைத் தரும்.

| | |
|---|---|
| ர் | இ |
| ள | நீ |

______

4. கதிரவனின் மறுபெயர்

| | |
|---|---|
| யி | க |
| ஞா | று |

______

9. முழங்கும் விலங்கு

| | |
|---|---|
| க | ங் |
| சி | ம் |

______

5. இரவில் வெளிச்சம் தரும்.

| | |
|---|---|
| ள | கு |
| வி | க் |

______

10. சுவைக்க உதவும்

| | |
|---|---|
| க் | ப |
| கு | நா |

______

**தகவல்துளி**

தமிழ்நாட்டில் சென்னை மெரினாக் கடற்கரையில் உழைப்பாளர் சிலை உள்ளது. தொழிலாளர்களின் உழைப்பை நினைவுபடுத்தும் வகையில், இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இச்சிலையைச் செய்தவர் தேவி பிரசாத் ராய் சௌத்ரி. இவர் சிறந்த ஓவியர்; சிலை வடிப்பதிலும் ஆர்வம் கொண்டவர்.



## 11.5 கேட்டல் கருத்தறிதல்


### விதை

அமெரிக்காவில், மாக்சிமோவிச் பிர்ச் என்னும் சாலையில் மரங்கள் நிறைந்திருந்தன. அம்மரங்களின் கீழே விதைகள் கொட்டிக் கிடந்தன. அவற்றைத் தன் சட்டைப் பையில் சேகரித்துக் கொண்டாள் மாயா. சேகரித்த விதைகளை நடந்து செல்லும் வழியில் ஆங்காங்கே தூவிக் கொண்டே சென்றாள். சில விதைகளை மண்ணில் ஊன்றினாள். சில விதைகளைத் தூரமாகத் தூக்கியும் எறிந்தாள். குறிப்பிட்ட இடத்தில்தான் விதைக்க வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு இல்லை. மனம் போன போக்கிலே விதைகளைப் பரப்பினாள். வீடு சேர்வதற்குள் சட்டைப் பையில் இருந்த விதைகள் தீர்ந்துபோயின.

### வினாக்கள்

1. மாயா, விதைகளைச் சேகரித்ததன் நோக்கம் என்ன?
2. சேகரித்த விதைகளை மாயா என்ன செய்தாள்?
3. மாயாவின் செயல்களால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.
4. மாயா விதைகளை எங்கிருந்து சேகரித்தாள்?
5. மாயாவுக்குக் கிடைத்ததுபோல் உங்களுக்கு விதைகள் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?

## 11.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 11.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

- (குறள்: 1033)
- திருவள்ளுவர்

பொருள்:

உழவுத் தொழில் செய்து வாழ்பவர்களே வாழ்பவர்கள் ஆவர். மற்ற தொழில் செய்பவர்கள் எல்லாம் உழவுத் தொழில் செய்பவர்களை வணங்கி, அவர்களின் பின்னால் செல்பவர்கள் ஆவர்.

பழமொழி

மூத்தோர் சொல் வார்த்தை அமுதம்.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

தொழிற்புரட்சியினால் ஏராளமான நன்மைகள் ஏற்பட்டன. பெரிய ஆலைகள் அமைக்கப்பட்டதால், பொருள் உற்பத்தி அதிகரித்தது. அதிக எண்ணிக்கையிலும் விலை மலிவாகவும் விரைவாகவும் பொருள்கள் தயாரிக்கப்பட்டன.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. முன்னேற்றம்
2. மாறுதல்
3. பங்களிப்பு

## 11.8 மொழிபெயர்ப்போம்

தொழில்துறையில் வளர்ச்சி அடைந்த நாடுகள் பொருளாதாரத்தில் சிறந்து விளங்குகின்றன. இதற்குப் போக்குவரத்து வசதியும் ஒரு காரணமாகும். மின்னல் வேகத்தில் பாய்ந்து செல்லும் வானூர்திகளால், தொலைவிலுள்ள இடங்களுக்கும் எளிதாகச் செல்லமுடிகிறது.

## 11.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. பொருளாதாரம் | - | Economics |
| 2. தொழிற்புரட்சி | - | Industrial Revolution |
| 3. வேளாண்மை | - | Agriculture |
| 4. அச்சுத்தொழில் | - | Printing Industry |
| 5. மக்கள்தொடர்பு ஊடகம் | - | Mass media |
| 6. மக்கள்தொகை | - | Population |
| 7. நகர்ப்பகுதி | - | Urban area |
| 8. கிராமப்பகுதி | - | Rural area |

## 11.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**பின்வரும் படக்குறிப்புகளைக் கொண்டு, உழைப்பு என்னும் தலைப்பில் சிறுகதை உருவாக்குக.**



## 11.11 உயர்நிலைத்திறன்

**முறைமாறியுள்ள தொடர்களை முறைப்படுத்தி எழுதுக.**

- ❖ மாடுகள் வாங்குவதற்காகப் பணமூட்டையுடன் சந்தைக்குச் சென்றான்.
- ❖ வழியில் ஒரு குரங்கு, அவன் கையிலிருந்து பணமூட்டையைப் பறித்துச் சென்றது.
- ❖ கண்ணன் பால் வியாபாரம் செய்கிறான். பாலில் பாதிக்குப் பாதி தண்ணீர் கலந்து விற்பது அவனது வழக்கம்.
- ❖ குரங்கைத் துரத்திச் சென்ற கண்ணன், அது ஒரு குளத்தின் அருகே இருப்பதைப் பார்த்தான்.
- ❖ உணவுப்பொருள் இல்லை என்று தெரிந்தவுடன் குரங்கு, அந்த நாணயங்களை நீரில் வீசியது.
- ❖ ஆசை அடங்காத கண்ணன், புதிதாக இரு பசுமாடு வாங்கி, வியாபாரத்தைப் பெருக்க எண்ணினான்.
- ❖ குரங்கின் செயலைக் கண்டு பதறிய கண்ணன், அதனை அச்சுறுத்தவே, குரங்கு மீதம் இருந்த பணமூட்டையை அவனை நோக்கி வீசியது.
- ❖ கிடைக்கவேண்டிய பணம் கிடைத்துவிட்டது. தண்ணீரால் வந்த பணம் தண்ணீரோடு போயிற்று. இனிமேலாவது திருந்தி வாழ்வோம் என முடிவுசெய்தான்.
- ❖ குரங்கு, மூட்டையைப் பிரித்து, ஒவ்வொரு நாணயமாக எடுத்துக் கடித்துப் பார்த்தது.
- ❖ கண்ணன் ஓடிச்சென்று, மூட்டையிலிருந்த நாணயங்களை எண்ணினான். கொண்டு வந்ததில் பாதிக்குப் பாதிதான் இருந்தன.

## 11.12 செயல்திட்டம்

தொழிற்புரட்சியினால் வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து படத்தொகுப்பு ஒன்றை உருவாக்கி வருக.

## 12.1 பேசுவோம்

# பாடம் 12



## கலந்துரையாடுவோம்

உங்களுடைய எதிர்காலத் திட்டம் என்ன? எந்தத் தொழிலில் உங்களுக்கு ஈடுபாடு உண்டு? நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## 12.2 படிப்போம்

# சிறந்த தொழில் முனைவோர்கள்

மனித வளர்ச்சியின் ஒட்டு மொத்த வரலாற்றையும் 'மாற்றம்' என்ற ஒரு சொல்லுக்குள் அடக்கலாம். அந்த மாற்றத்தை ஏற்படுத்திய முகவர்கள் சிந்தனையாளர்கள், தத்துவ ஞானிகள், அரசியல் தலைவர்கள், தொழில் அதிபர்கள், விஞ்ஞானிகள் எனப் பல்வேறு அடையாளங்களைத் தாங்கி நிற்கின்றனர். மாற்றத்தினை ஏற்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் தொழில் முனைவோர்கள். அவர்களுள் இருவரைப் பற்றி இங்கு அறிந்துகொள்வோம்.

**(தொழில் முனைவோர்கள் மாநாட்டில் இரத்தன் டாடாவும் பில்கேட்ஸும் பேசுவதுபோன்று கற்பனை உரையாடல்)**



**பில்கேட்ஸ்** : வணக்கம் ரத்தன்.

**ரத்தன் டாடா** : வணக்கம் பில்.

**பில்கேட்ஸ்** : தொழில்முனைவோர் மாநாடு நடத்தப்படுவது மிகச்சிறப்பானது. இதுபோன்ற மாநாடுகள், இளைய தலைமுறையினருக்கு ஊக்கமளிக்கும்.

**ரத்தன் டாடா** : ஆமாம். சரியாகச் சொன்னீர்கள். இதன்மூலம் திறமை உள்ளவரை எளிதாகக் கண்டறியலாம்.

**பில்கேட்ஸ்** : ஆமாம். அனைத்து நிறுவனங்களும் இந்தியாவினை நோக்கிப் படையெடுக்க, நீங்கள் டாடா நிறுவனத்தை அயல்நாடுகளில் விரிவுபடுத்தி வெற்றி அடையவில்லையா? அதேபோல் தேடல் எங்கிருந்தும் தொடங்கும்.

**ரத்தன் டாடா** : நீங்களும் உங்கள் வாணிகத்தை எளியவர்கள், சாதாரண மனிதர்கள்

போன்றோரை மனத்திற்கொண்டு விரிவுபடுத்தினீர்கள். அதுபோலத்தான் எங்கள் நிறுவனத்தையும் விரிவுபடுத்தினோம். மேலும் நீங்கள் மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தின் மூலம் உலகத்தையே கணினி மயமாக மாற்றிவிட்டீர்கள்!

**பில்கேட்ஸ்** : உங்கள் நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் இல்லா வீடு உலகில் இருக்க முடியுமா?

**ரத்தன் டாடா** : நீங்கள் உங்கள் பதின்மூன்றாவது வயதிலே நிரல்கள்(Program) எழுதத் தொடங்கிவிட்டீர்கள் அல்லவா?

**பில்கேட்ஸ்** : ஆமாம். எனக்குக் கணினி நிரலாக்கத்தில் ஆர்வம் அதிகம். அந்த நேரத்தில்தான் நண்பருடன் இணைந்து பல்வேறு வகையான முயற்சிகளை மேற்கொண்டு வந்தேன்.

**ரத்தன் டாடா** : அந்த முயற்சிகளின் விளைவுதான் தனிநபர் கணினி(PC).

**பில்கேட்ஸ்** : ஆமாம். தங்களுடைய குடும்பம் மிகவும் கண்டிப்பானது அல்லவா?

**ரத்தன் டாடா** : ஆமாம். என் தந்தையின் விருப்பப்படி என்னை இயந்திரவியல் பொறியியலாளர் பட்டம் படிக்க அமெரிக்கா அனுப்பினார். ஆனால், நான் கட்டடக்கலையில் இளங்கலை படித்தேன்.

**பில்கேட்ஸ்** : நான் இளங்கலையை முடிக்கவே இல்லை. உங்களுக்கு ஆரம்பத்தில் குடும்பத்தொழிலில் விருப்பம் இல்லையே! எப்படி இந்தளவுக்கு வந்தீர்கள்?

**ரத்தன் டாடா** : டாடா குழுமம் மிகுந்த பொருளாதாரச் சிக்கலில் மாட்டிக் கொண்டுவிட்டது. சூழ்நிலையால் குடும்பத்தொழிலின் மீது ஆர்வம் ஏற்பட்டு, அடிமட்ட ஊழியராக இருந்து குழுமத்தின் ஒவ்வொரு துகளையும் அறிந்து கொண்டேன். அப்படிப் படிப்படியாக முயன்று குழுமத்தை வளர்ச்சிப் பாதையில் இயக்கினேன்.

**பில்கேட்ஸ்** : தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களின் ஊதியத்தையும் உயர்த்தினீர்கள்.

**ரத்தன் டாடா** : நீங்கள், நாதன் முர்வால்ட் மற்றும் பீட்டர் ரினீர்சன் ஆகியோருடன் சேர்ந்து எழுதிய 'த ரோட் அஹெட்' (The Road Ahead, 1995) என்னும் நூலில், கணினியானது தனிநபர் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கத்தினையும் அதிவேகத் தகவல் தொடர்பின் வளர்ச்சி நிலையையும் குறித்து அப்போதே கணித்துக் கூறியுள்ளீர்கள்.

**பில்கேட்ஸ்** : நீங்கள் எழுதிய 'ஃப்ரம் ஸ்டீல் டு செல்லுலார்' (From Steel to Cellular ) (2005) என்ற நூலில் டாடா குழும நிறுவனங்களின் வளர்ச்சி குறித்து விரிவாக கூறியுள்ளீர்கள்.

**ரத்தன் டாடா** : நல்லது.

**பில்கேட்ஸ்** : “உங்கள்மீது யாரேனும் கற்கள் வீசினால், அதைக்கொண்டு கட்டடம் எழுப்புங்கள்” என்ற உங்கள் வரிகள் என்னை மிகவும் ஈர்த்தன.

**ரத்தன் டாடா** : நீங்கள் கூறியுள்ள “வெற்றி ஒரு மோசமான ஆசிரியர் அது புத்திசாலிகளையும் மயக்கித் தோல்வியே நமக்கு இல்லை என்று நினைக்க வைத்துவிடும்” என்ற வாசகம் மிகவும் அருமையானது. உங்களைச் சந்தித்து இவ்வளவு நேரம் உரையாடியதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நாம் மாநாட்டிற்குச் செல்வோம் வாருங்கள்.

**பில்கேட்ஸ்** : எனக்கும் மகிழ்ச்சியே. வாருங்கள். போகலாம்.

மனிதனால் செய்யமுடியாத செயல் என எதுவும் இல்லை. ஆர்வம், தன்னம்பிக்கை, துணிவு, நிலைப்பாடு ஆகிய நான்கனையும் கைக்கொண்டவர்கள் சிறந்த தொழில் முனைவோராய்த் தங்கள் தடத்தை இவ்வுலகில் பதித்துக்கொண்டு இருக்கின்றனர்.

## பொருள் அறிவோம்

1. விஞ்ஞானி - அறிவியலாளர்
2. அயல்நாடு - வெளிநாடு
3. ஈர்த்தன - கவர்ந்தன
4. ஆரம்பம் - தொடக்கம்
5. அடிமட்டம் - கடைநிலை
6. தடம் - அடையாளம்/முத்திரை

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. தொழில் முனைவோர்கள் மாநாட்டின் முக்கியத்துவம் என்ன?
2. மைக்ரோசாப்ட் நிறுவனத்தைத் தொடங்கியவர் யார்?
3. பில்கேட்ஸ் எழுதிய நூல் பெயர்களைக் கூறுக.
4. பில்கேட்ஸின் எந்த வாசகம் தம்மைக் கவர்ந்ததாக ரத்தன் டாடா கூறினார்?
5. சிறந்த தொழில் முனைவோர்களாகத் தங்கள் தடத்தை இவ்வுலகில் பதிக்க ஒரு மனிதனுக்கு எத்தகைய பண்புகள் தேவை?

### ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(13, த ரோட் அகெட், பில்கேட்ஸ், தொழில் முனைவோர் மாநாடு, இரத்தன் டாடா)**

1. மைக்ரோ சாஃப்ட் மூலம் உலகத்தையே மாற்றியவர் ____________.
2. பில்கேட்ஸ் கணினி நிரல்கள் எழுதும்போது அவருக்கு வயது ____________.
3. பில்கேட்ஸ் எழுதிய நூல்களுள் ஒன்று ____________.
4. தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டு அவர்களின் ஊதியத்தை உயர்த்தியது ____________ ஆவார்.
5. இளைய தலைமுறையினருக்கு ஊக்கமளிப்பது ____________.

## 12.3 தெரிந்துகொள்வோம்

### தன்வினை – பிறவினை

**எழுவாய் (Noun) ஒரு செயலைத் தானே செய்தால் அது தன்வினை.**
**எழுவாய் ஒரு செயலைச் செய்ய வைத்தால் அது பிறவினை.**


**தன்வினை** | **பிறவினை**



கார்த்திகா ஓவியம்
வரையக் கற்றாள்.



கார்த்திகா, தன் தோழிக்கு
ஓவியம் வரையக் கற்பித்தாள்.



அரசர், அமைச்சரின் அறிவுரையைக்
கேட்டுத் திருந்தினார்.



அமைச்சர் அறிவுரை கூறி,
அரசரைத் திருத்தினார்.



அம்மா சோறு உண்டாள்.



அம்மா குழந்தையைச் சோறு
உண்ண வைத்தாள்.



வேலன், நகைச்சுவைக்
கதையைப் படித்து மகிழ்ந்தான்.



வேலன், நகைச்சுவைக்
கதையை நண்பனுக்குக் கூறி,
அவனை மகிழ்வித்தான்.

## பயிற்சிகள்

அ) தன்வினை, பிறவினைச் சொற்களை உரிய படத்துடன் பொருத்துக



ஊட்டினாள்



பறித்தாள்



கற்பித்தார்



எழுதினார்



ஓட்டினான்

## ஆ) தன்வினைச் சொற்களைப் பிறவினைச் சொற்களாக மாற்றுக.

| தன்வினை | பிறவினை |
|---|---|
| வருந்துவான் | |
| அடங்கினாள் | |
| மாறுவான் | |
| ஆடினாள் | |

## இ) தன்வினை, பிறவினை கண்டறிந்து அட்டவணைப்படுத்துக.

1. தமிழ்ச்செல்வி ஆடினாள்.
2. கோபால் ஓடினான்.
3. பொற்கொடி உண்ண வைத்தாள்.
4. எழிலன் எழுந்தான்.
5. அகிலன் எழுப்பினான்.
6. மணி செய்வித்தான்.

| தன்வினைத் தொடர்கள் | பிறவினைத் தொடர்கள் |
|---|---|
| | |
| | |
| | |

## ஈ) தன்வினைத் தொடர்களைப் பிறவினைத் தொடர்களாக மாற்றுக.

1. கீதா உணவு உண்டாள். - ________________.
2. வசந்தன் மாலை அணிந்தான் - ________________.
3. தேவி பாடம் பயின்றாள். - ________________.
4. வேலன் மகிழ்ந்தான். - ________________.
5. சிற்பி சிலை செய்தார். - ________________.

## 12.4 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைக் கொண்டு சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1 மு | 2 ப | 3 ற |
| 6 யி | 5 ய | 4 ன |
| 7 ற் | 8 ப் | 9 சி |
| 12 பு | 11 க | 10 வு |

1. ________________ திருவினையாக்கும்.
(1, 5, 7, 9)

2. செயலினை முடிக்கப் ________________ செய்தல் வேண்டும்.
(2, 6, 7, 9)

3. கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் ________________.
(9, 3, 8, 12)

4. ________________ நனவாகக் கடினமாக உழைக்க வேண்டும்.
(11, 4, 10)

### தகவல்துளி

தொழில் முனைவோராக ஆவதற்கு வயது ஒரு தடையில்லை என மெய்ப்பித்தார் ஒருவர். தமது அறுபத்து ஐந்தாவது வயதில் தமக்கு நன்கு தெரிந்த கோழிக்கறி வறுவல் விற்பனையைத் தொடங்க எண்ணினார். தம் பொருளை வாங்குமாறு கடை கடையாக ஏறி இறங்கினார். யாரும் இவரின் கோரிக்கையை ஏற்கத் தயாராக இல்லை. இறுதியில் ஒரு நிறுவனம் இவருக்கு ஆதரவளித்தது. தனது கோழிக்கறி வறுவலுக்கு KFC (Kentucky Fried Chicken) எனப் பெயரிட்டார். விற்பனை அதிகரித்தது. ஒன்பது ஆண்டில் KFC மிகப்பெரும் வெற்றி கண்டது. அவர்தாம் KFC உணவகத்தின் நிறுவனர் கர்னல் ஹார்லேண்ட் சாண்டர்ஸ் (Colonel Harland Sanders).



கர்னல் ஹார்லேண்ட் சாண்டர்ஸ்
(Colonel Harland Sanders)

## 12.5 கேட்டல் கருத்தறிதல்

**கீழ்க்காணும் பாடலைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடை கூறுக.**

### தொழில்


இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
இயந்திரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப்பீரே!
அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே!
பெரும்புகழ் நுமக்கே இசைக் கின்றேன்

- மகாகவி பாரதியார்

### வினாக்கள்

1. நீங்கள் கேட்ட பாடல் யாரை மையப்படுத்தியுள்ளது?
2. புவி என்பதைக் குறிக்கும் வேறு சொல் தருக.
3. எத்தனை தொழில் செய்வதாகப் பாடல் குறிப்பிடுகிறது?
4. எதனைக் காய்ச்சி உருக்கலாம்?
5. பாடலில் ஒரே ஓசையுடைய சொற்களைக் கூறுக.

## 12.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 12.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை

- (குறள்: 672)
- திருவள்ளுவர்

(வினை – செயல்)

**பொருள்:**

காலம் தாழ்த்திச் செய்யக்கூடிய செயல்களைக் காலம் தாழ்த்திச் செய்க. ஆனால், காலம் தாழ்த்தாமல் செய்யக்கூடிய செயல்களை விரைந்து செய்க.

**பழமொழி**

காய்த்த மரந்தான் கல் அடிபடும்.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

1. தன்னம்பிக்கை உடையவர் வெற்றி பெறுவார்.
2. உழைப்பால் உயர்ந்தோர் பலர் உள்ளனர்.
3. தொழில் முனைவதற்கு முயற்சியும் முதலீடும் தேவை.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. வெற்றி
2. பாதுகாப்பு
3. முயற்சி

## 12.8 மொழிபெயர்ப்போம்

உலகத்தொழில் முனைவோர் நாள் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 21ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. ஒரு வணிக நிறுவனத்தைத் தொடங்கும் ஒருவரின் முயற்சியைப் பாராட்டும் வகையில் இந்நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

___

___

___

## 12.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. தொழில் முனைவோர்கள் | - | Entrepreneurs |
| 2. விஞ்ஞானி | - | Scientist |
| 3. அயல்நாடு | - | Foreign country |
| 4. கணினி நிரலாக்கம் | - | Computer programme |
| 5. கட்டடக்கலை | - | Architecture |
| 6. இளங்கலை | - | Bachelor of Arts |
| 7. வெற்றி | - | Victory |
| 8. வாசகம் | - | Slogan |
| 9. தன்னம்பிக்கை | - | Self-confidence |
| 10. துணிவு | - | Courage |

## 12.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

### கீழ்க்காணும் கதையைப் படித்து, முடிவு கூறுக.

அறிவானந்தம் பெரும் தொழிலதிபர். அவரிடம் தொழில் நுணுக்கத்தைக் கற்றுக்கொள்ளப் பலர் முன்வந்தனர். அவரும் பல மாநாடுகளில் கலந்துகொண்டு, தம் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். அவருக்கு ஒரே ஒரு மகன். அவன் பெயர் முகிலன். அவனுக்குத் தந்தையிடம் மதிப்பும் மரியாதையும் இருந்தது. ஆனால், அவருடைய செல்வாக்கின் மூலம் தான் உயர்ந்த இடத்தில் வருவது அவனுக்குப் பிடிக்கவில்லை. தானும் சொந்தக்காலில் நின்று சுயதொழில் செய்து முன்னேற நினைத்தான். அலுவலக வேலையின் காரணமாக அப்பா இலண்டனுக்குச் செல்லவிருந்தார். அவனையும் வருமாறு அழைத்தார். ஆனால், முகிலன் மறுத்துவிட்டான். ஒருநாள், இலண்டனிலிருந்து அவனுக்குத் தொலைபேசி அழைப்பு வந்தது. மறுமுனையில் பேசிய மேலாளர், "தம்பி, உங்க அப்பாவுக்குத் திடீர்னு நெஞ்சுவலி. உடனே மருத்துவமனையில் சேர்த்திட்டோம். இப்போது பரவாயில்லை. இரண்டு நாளில் வீடு திரும்பலாம்னு மருத்துவர் சொன்னார். அடுத்த வாரம் உலகப் புகழ்பெற்ற நிறுவனத்தோட அப்பா தொழில்முறை ஒப்பந்தம் செய்ய உள்ளார். அந்தத் திட்டம் நடக்கலேன்னா பல கோடி இழப்பு ஏற்படும். என்ன செய்றதுன்னு தெரியல" என்றார் நிறுவன மேலாளர். இப்போது, முகிலன் சிந்தித்தான். அப்பாவின் நிறுவனத்தில் வேலை செய்யும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் நிலையை எண்ணினான்.

இப்போது முகிலன் என்ன முடிவு எடுத்திருப்பான்?

நீங்கள் முகிலனாக இருந்தால் என்ன செய்வீர்கள்? கதையைத் தொடர்ந்து கூறுக.

## 12.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் பாடலைப் படித்து, நீங்கள் புரிந்துகொண்ட கருத்துகளை வெளிப்படுத்துக.**

ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே -நீ
ஏன்படித்தோம் என்பதையும் மறந்துவிடாதே
நாட்டின் நெறிதவறி நடந்துவிடாதே – நம்
நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்துவிடாதே
மூத்தோர்சொல் வார்த்தைகளை மீறக்கூடாது – பண்பு
முறைகளிலும் மொழிதனிலும் மாறக்கூடாது
மாற்றார்கைப் பொருளைநம்பி வாழக்கூடாது – தன்
மானமில்லாக் கோழையுடன் சேரக்கூடாது.

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

## 12.12 செயல்திட்டம்

உலகப் புகழ்பெற்ற தொழில் முனைவோர்களின் படங்களையும் செய்திகளையும் திரட்டிப் படத்தொகுப்பு ஒன்றை உருவாக்குக.

# 13.1 பேசுவோம்

பாடம்
13



## கலந்துரையாடுவோம்

நீங்கள் கண்டுகளித்த இடங்கள், அவற்றின் சிறப்புகள், வியக்க வைக்கும் கட்டட அமைப்பு குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 13.2 படிப்போம்

# தமிழர் கட்டடக் கலை

நம் உள்ளத்தைக் கவர்வது கலை. கலைகள் பலவகை. அவற்றுள் காவியம், ஓவியம், கட்டடம், சிற்பம் முதலானவை குறிப்பிடத்தக்கவை. உலகில் எல்லா இடங்களிலும் இக்கலைகள் பரவியுள்ளன. தமிழ்நாட்டிலும் இக்கலைகள் வேரூன்றி உள்ளன. அவற்றுள் தமிழகக் கட்டடக் கலைக்குத் தனிச் சிறப்பு உண்டு.

இல்லங்கள், மாளிகைகள், கோவில்கள், பொதுக் கட்டடங்கள் எனப் பல கட்டட வடிவங்களை வடிவமைப்பதில் தமிழர்கள் சிறந்து விளங்கினர். மாடங்கள், முற்றங்கள் உடைய இல்லங்களைத் உருவாக்கினர். சித்திர வேலைப்பாடுகள் அமைந்த கதவுகளை அமைத்தனர். காற்றோட்டத்திற்காக ஜன்னல்களைப் பொருத்தினர். கோவில் கோபுரங்களில் சிற்ப வேலைப்பாடுகளைச் செய்தனர். வளாகச் சுவர்களில் பல்வேறு கருத்துகளை விளக்கும் சிற்பங்களை வடிவமைத்தனர். கருங்கற்களில் சிற்பங்களைச் செதுக்கி அவற்றிற்கு உயிர் ஊட்டினர்.

தமிழர் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்வது தஞ்சைப் பெரிய கோவில். தமிழ்நாட்டிலுள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் இக்கோவில் அமைந்துள்ளது.



இக்கோவிலுக்கு 'இராசராசேசுவரம் கோவில்' என்று பெயர். தஞ்சையில் மிகப்பெரிய கோவிலாக இது திகழ்வதால், தஞ்சைப் பெரிய கோவில் என்றே தற்போது அனைவராலும் அழைக்கப்படுகிறது.

முதலாம் இராசராசன் என்னும் சோழமன்னன், சிறப்புவாய்ந்த இக்கோவிலைக் கட்டினான். இக்கோவில், பதினைந்து அடுக்கு கொண்டது. இது, 60 மீட்டர் உயரத்தில் கற்கோவிலாக உருவாக்கப்பட்டுள்ளது. இக்கோவிலில் 20 டன் எடை கொண்ட பெரிய 'நந்தி' சிலை உள்ளது.

தஞ்சைக் கோவிலின் வாயிலின் மேல் ஐந்து நிலை கொண்ட கருங்கல் கோபுரம் உள்ளது. கோபுரத்தில் தெய்வச்சிற்பங்கள், விலங்குகள் போன்ற அனைத்தும் உயிருள்ள சிற்பங்கள்போல அமைந்துள்ளன. சிற்பக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக இவை விளங்குகின்றன.

பாம்பு ஒன்று யானையை விழுங்குவது போலச் சிற்பம் ஒன்று உள்ளது. அப்படியானால், அந்தப் பாம்பு எவ்வளவு பெரியதாக இருக்கும் என்னும் கற்பனை நம் உள்ளத்தில் தோன்றும். கோபுரத்தில் அமைந்துள்ள சிற்பங்கள் புராண நிகழ்வுகளை வெளிப்படுத்துகின்றன.

கோவிலின் கருவறைப் பகுதிக்கு மேலே உள்ள பகுதியைத் திருவிமானம் என்று கூறுவர். அதன் உச்சியில் மிகப்பெரிய உருண்டை வடிவக் கல் உள்ளது. அக்காலத்தில் இவ்வளவு கற்களை அவ்வளவு உயரத்திற்குக் கொண்டு சென்றது மிகவும் வியப்பிற்குரியதாகும்.

கோவிலிலுள்ள எழில்மிகு ஓவியங்கள் இயற்கை வண்ணங்களால் ஆனவை. மண்டபத்தின் உள்ளே அரசனது சிற்பம் இருக்க, சுற்றிலும் நடனப்பெண்கள் நளினத்துடன் ஆடும் சிற்பங்கள் உள்ளன. கோவிலின் பக்கவாட்டுச் சுவரில் நாட்டியக் கலையின் ஆடல் வகைகளை விளக்கும் சிற்பங்கள் உள்ளன. ஆயிரம் ஆண்டு கடந்தும், அழியாமல் இருக்கும் இக்கோவில், சிறந்த கட்டடக்கலைக்கும் சிற்பக் கலைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

தஞ்சை மாவட்டத்தில் மலைகளோ குன்றுகளோ இல்லை. சமவெளிப்பகுதியில் இக்கோவில் அமைக்கப்பட்டு உள்ளது. இது இக்கோவிலின் தனிச்சிறப்புகளுள் ஒன்றாகும்.

ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (UNESCO) 1987 ஆம் ஆண்டு தஞ்சைப் பெரிய கோவிலை 'உலகப் பாரம்பரியச் சின்னமாக' அறிவித்தது.

கி.பி 1010 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு, ஆயிரம் ஆண்டு ஆனதைக் கொண்டாடும் வகையில், இக்கோவிலுக்கு 2010ஆம் ஆண்டில் பெருவிழா நடத்திச் சிறப்பிக்கப்பட்டது.

## பொருள் அறிவோம்

1. சமவெளி – மேடு பள்ளம் இல்லாத பரந்த நிலப்பரப்பு
2. வேரூன்றி - நிலைபெற்று
3. இல்லங்கள் - வீடுகள்
4. சித்திரம் - ஓவியம்
5. நளினம் - அழகு

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்.

1. கட்டடங்களின் வகைகளை எழுதுக.
2. தஞ்சைப் பெரிய கோவில் யாரால் கட்டப்பட்டது?
3. தஞ்சைப் பெரிய கோவிலுக்கு வைக்கப்பட்ட பெயர் யாது?
4. தஞ்சைப் பெரிய கோவிலில் அமைந்துள்ள கோபுரத்தின் சிறப்பு யாது?
5. தஞ்சைப் பெரிய கோவில் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டது?

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டியவர்கள் ____________.

அ) சேரர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்

2. தஞ்சைக் கோவிலிலுள்ள அடுக்குகளின் எண்ணிக்கை ____________.

அ) பத்து ஆ) பன்னிரண்டு இ) பதினான்கு ஈ) பதினைந்து

3. தஞ்சைக் கோவிலில் 20 டன் எடை கொண்ட ____________ சிலை உள்ளது.

அ) நந்தி ஆ) பாம்பு இ) யானை ஈ) சிங்கம்


### இ) கோடிட்ட இடத்தை நிரப்புக

**(முதலாம் இராசராசன், 1987, சமவெளிப், தஞ்சாவூர், திருவிமானம்)**

1. பெரிய கோவில், தமிழ்நாட்டில் ____________ மாவட்டத்தில் உள்ளது.
2. கோவில் கருவறையின் மேல் பகுதியை ____________ என்று கூறுவர்.
3. பெரிய கோவிலை 'உலகப் பாரம்பரியச் சின்னமாக' அறிவித்த ஆண்டு ________.
4. தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய அரசன் ____________ ஆவான்.
5. தஞ்சைப் பெரிய கோவில் கட்டப்பட்டுள்ள இடம் ____________ பகுதி.

## 13.3 தெரிந்துகொள்வோம்

### கருத்து மாறாத் தொடர்கள்

| | | |
|---|---|---|
| கமலா பாடம் படித்தாள் |  | பாடம் கமலாவால்<br>படிக்கப்பட்டது |
| ஓவியர் ஓவியம்<br>வரைந்தார் |  | ஓவியர் ஓவியம்<br>வரையாமல் இல்லை |
| மரங்களை<br>வளர்ப்பதால்<br>மழைவளம் பெறலாம். |  | மழைவளம் பெற<br>மரங்களை<br>வளர்க்கலாம். |
| பந்து தரையில்<br>உருண்டது |  | தரையில் பந்து<br>உருண்டது |
| பல நாடுகளைச்<br>சுற்றிப் பார்க்கும்<br>ஒருவர் பரந்த<br>அறிவையும், விரிந்த<br>சிந்தனையையும்<br>பெறுகிறார். |  | பல நாடுகளைச் சுற்றிப்<br>பார்க்காத ஒருவரால்<br>பரந்த அறிவையும்,<br>விரிந்த<br>சிந்தனையையும்<br>பெறமுடியாது. |

## பயிற்சி

1. நான் காலையில் செய்தித்தாள் படித்தேன்.

   காலையில் செய்தித்தாள் என்னால் ____________________.

2. உடல் வலுவடைய நல்ல உணவும், உடற்பயிற்சிகளும் தேவை.

   நல்ல உணவும் உடற்பயிற்சிகளும் இருந்தால் ____________________.

3. நேற்று பெய்த மழையால் ஊரில் வெள்ளம் ஏற்பட்டது.

   ஊரில் வெள்ளம் ஏற்படக் காரணம் ____________________.

4. நீர் சேமிப்பு என்னும் திட்டத்தை நமது அரசு வலியுறுத்தி வருகிறது.

   நமது அரசால் வலியுறுத்தப்படுவது ____________________.

5. மாணவர்கள் எதையும் ஆழமாகக் கற்றால்தான் மனத்தில் பதியும்.

   ஆழமாகக் கற்காத எதுவும் மாணவர்கள் ____________________.

## 13.4 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டங்களை நிரப்புக. வட்டத்தில் இடம்பெற்றுள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி ஆத்திசூடித் தொடரைக் கண்டறிக.**

| | |
|---|---|
| அரசனின் மகள் | ◯ ◯ ☐ ☐ ☐ |
| கண்ணுக்கு இடுவது | ◯ |
| இந்தியாவின் தேசியப் பறவை | ☐ ◯ ◯ |
| வீடு கட்ட உதவுவது | ☐ ☐ ◯ ◯ |

விடை : ________________________________________

**சுவைச்செய்தி**

துபாயிலுள்ள புகழ்பெற்ற கட்டடம் புர்ஜ் கலிஃபா. இது, 828 மீட்டர் உயரம் கொண்டது. இக்கட்டடம், 163 மாடிகளைக் கொண்டது. தரைப்பகுதியிலுள்ள வெப்பநிலையைவிடப் புர்ஜ் கலிஃபாவின் உயரத்தால் தரைப்பகுதிக்கும் உச்சிப்பகுதிக்கும் இடையே கணிசமான தட்பவெப்பநிலை வேறுபாடு காணப்படுகிறது. இக்கட்டடம் உலகின் மிக உயரமான கட்டடம் என்னும் கின்னஸ் சாதனையைப் பெற்றுள்ளது.



புர்ஜ் கலிஃபா

## கருத்து விளக்கப்படம்




### வினாக்கள்

1. தமிழர் நாகரிகம் எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டது?
2. கீழடி எவற்றை வெளிப்படுத்துகிறது?
3. கீழடி அரங்கக் கூட்டம் நடைபெறும் அரங்கின் பெயர் என்ன?
4. கீழடியில் கிடைக்கும் சான்றுகளை என்ன செய்யவேண்டும்?
5. கீழடி அரங்கக் கூட்டம் எந்த மாவட்டத்தில் நடைபெற்றது?

## 13.5 கேட்டல் கருத்தறிதல்

### வள்ளுவர் கோட்டம்

உலக மக்கள் அனைவருக்கும் ஏற்புடைய அறக்கருத்துகளை வழங்கும் உயரிய நூல் திருக்குறள். இந்நூலை இயற்றிய திருவள்ளுவரின் பெருமையை உலகறியச் செய்யும் வகையில், வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டது. இது தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில் உள்ளது. தேர் வடிவத்திலுள்ள இக்கோட்டம் யானைகள் இழுத்துச் செல்வதுபோலக் கருங்கல்லால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்பகுதி 25 அடி நீளமும் 25 அடி அகலமும் உடையது. தேரின் மையத்தில் எண்கோண வடிவக் கருவறை உள்ளது. இக்கருவறையில் திருவள்ளுவரின் சிலை அழகாக அமைக்கப்பட்டுள்ளது. வள்ளுவர் கோட்டத்தில் 1330 குறட்பாக்களும் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளன.

## வினாக்கள்

1. வள்ளுவர் கோட்டம் எந்த வடிவில் அமைக்கப்பட்டுள்ளது?
2. வள்ளுவர் கோட்டத்தில் எத்தனை குறட்பாக்கள் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளன ?
3. வள்ளுவர் கோட்டம் எதற்காக அமைக்கப்பட்டது?
4. வள்ளுவர் கோட்டம் எந்த ஊரில் அமைந்துள்ளது?
5. திருக்குறளை ஏன் உயரிய நூல் எனச் சொல்கிறோம்?

## 13.6 படம் பார்த்துக் கருத்து கூறல்





## 13.7 செந்தமிழ்ச்செல்வம்

### மூதுரை

நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா – நின்று
தளரா வளர்தெங்கு தாள்உண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

- (பாடல்- 1)
- ஔவையார்

(நன்றி - உதவி; தெங்கு – தென்னை)

**பொருள்:**

தென்னை மரமானது, வேர்ப்பகுதியில் நீரைப் பெற்றுக்கொண்டு, சுவையான இளநீரைத் தலைப்பகுதியில் தருகிறது. அதுபோல, ஒருவருக்கு நன்மை செய்தால், அதனைப் பெற்றுக்கொண்டவர் எப்போது நமக்குத் திருப்பிச் செய்வார் என்று எதிர்பார்த்துச் செய்யக்கூடாது.

**பழமொழி**
யானைக்கும் அடி சறுக்கும்.

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

கல்லணை தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. இது உலகப் புகழ்வாய்ந்த பழம்பெரும் அணையாகும். இக்கல்லணை இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்டது.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. சிற்பம்
2. கதவு
3. சிறப்பு
4. தூண்

## 13.8 மொழிபெயர்ப்போம்

The Taj Mahal is an ivory-white marble mausoleum on the right bank of the river Yamuna in Agra, Uttar Pradesh, India. It was commissioned in 1631 by the fifth Mughal emperor, Shah Jahan to house the tomb of his favourite wife, Mumtaz Mahal. It also houses the tomb of Shah Jahan himself.

## 13.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. கட்டடக் கலை | - | Architecture |
| 2. சிற்பம் | - | Sculpture |
| 3. மாளிகை | - | Palace |
| 4. கருங்கல் | - | Granite |
| 5. மலைகள் | - | Mountains |
| 6. குன்றுகள் | - | Hills |
| 7. சமவெளிப்பகுதி | - | Plain |
| 9. காற்றோட்டம் | - | Ventilation |
| 10. கணிசமான | - | Significant |

## 13.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் படத்தைப் பார்த்து, ஐந்து தொடர் எழுதுக.**



1. ____________________

2. ____________________

3. ____________________

4. ____________________

5. ____________________

## 13.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தி, நயாகரா அருவியை வருணித்து எழுதுக.**

கடந்த வாரம் – பெற்றோருடன் சுற்றுலா – நயாகரா அருவி – ஐம்பது மீட்டர் உயரம் – காணக் கண்கொள்ளாக் காட்சி – ஆர்ப்பரிக்கும் நீரலைகள் – மெல்லிய புகை போன்ற தோற்றம் – ஐரி ஏரியில் உற்பத்தி – கோட் ஐலண்ட் தீவு – சுற்றி வருதல் – இரண்டாகப் பிரிதல் – அமெரிக்கா – கனடா – அருவியின் அழகு – அனைவருக்கும் மகிழ்ச்சி – மீண்டும் பார்க்கத் தூண்டும் – பொழுதைக் கழிக்கச் சிறந்த இடம்.

## 13.12 செயல்திட்டம்


உங்களுக்குப் பிடித்த கட்டட மாதிரி ஒன்றை (முப்பரிமாண வடிவில்) உருவாக்குக.

பாடம்

14

14.1 பேசுவோம்

# இசை நிகழ்ச்சி



## கலந்துரையாடுவோம்

உங்களுக்கு மிகவும் பிடித்த இசை, இசையமைப்பாளர், இசைக்கருவிகள் குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## 14.2 படிப்போம்

# லுட்விக் வான் பீத்தோவன்
# (1770 – 1827)



இசை, நமது மனத்தை மகிழ்விக்க வல்லது. இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை. இசைக்கு மொழியும் இல்லை. இசைக்கலைக்கு உயிரூட்டிய கலைஞர்கள் ஒவ்வொரு நாட்டிலும் உள்ளனர். அவர்கள் தமது இசை ஆர்வத்தைச் சிறுவயதிலேயே வெளிப்படுத்தியுள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர், **லுட்விக் வான் பீத்தோவன்**. அவர், தமது ஆறாவது வயதிலேயே மேடையேறி, இசைத் திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

லுட்விக் வான் பீத்தோவன் **ஜெர்மனி** நாட்டிலுள்ள **பான்** என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய தந்தை, **யோகன் பீத்தோவன்**. இவர் சிறந்த இசை ஆசிரியர். ஆதலால், தம் மகனுக்கும் அவரே இசை கற்றுக்கொடுத்தார். பீத்தோவன் தம் தந்தையிடம் மட்டுமல்லாமல், பிறரிடமும் பியானோ, வயலின் ஆகியவற்றை வாசிக்கக் கற்றுக்கொண்டார்.

பீத்தோவன் வாழ்வில் குறிப்பிடத்தக்க இசை ஆசிரியர் **கிறிஸ்டியன் கோட்லாப் நீஃப்**. அவரிடம் இசை எழுதக் கற்றுக் கொண்டதுடன், தமது முதல் இசைப்படைப்பையும் பீத்தோவன் வெளியிட்டார். நீஃப்பின் துணை இசைக்கலைஞராகப் பணியாற்றிய பீத்தோவன், அரசவைக் குழுவிலும் இடம்பெற்றார்.

பீத்தோவனது காலத்தில், **வியன்னா** நகரில் புகழ்பெற்ற இசை அமைப்பாளர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் **மொசார்ட்**. அவருடன் இணைந்து பணியாற்ற பீத்தோவன் முடிவு செய்தார். அதனால், வியன்னாவிற்குச் சென்று, மொசார்ட்டைச் சந்தித்தார். ஆனால், வியன்னாவில் இருந்த சிறிது காலத்திற்குள், தாயின் மறைவுச் செய்தியைக் கேட்க நேர்ந்தது, அதனால், பான் நகருக்குத் திரும்பிச் சென்றார். அங்குத் தந்தையின் உடல் நலமும் பாதிப்படையவே, குடும்பப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ளும் சூழல் உருவானது.

லுட்விக் வான் பீத்தோவன் தமது இருபத்தாறாவது வயதில், உடற்குறைபாட்டால் துன்புற்றார். அவரது செவிகள் சிறிது சிறிதாகக் கேட்கும் திறனை இழந்து கொண்டிருந்தன. ஏறக்குறைய பதினைந்து ஆண்டிற்குப்பின் அவர் கேட்கும் தகுதியை முற்றிலுமாக இழந்தார்.

காதுகேளாத தன்மையுடன் **டைபஸ்** என்னும் நோயும் அவருக்கு இருந்தது. மேலும், **இருமுனையப் பிறழ்வு** என்னும் மனநோயாலும் துயருற்றார்.

பீத்தோவன் உடல்நலமில்லாத காலத்திலும், இசைமீது தாம் கொண்டிருந்த பற்றை விடவில்லை. பியானோவும் வயலினும் நன்கு வாசிக்கத் தெரிந்த அவர், சிறந்த இசையமைப்பாளர் ஆவார். அவருடைய **சிம்ஃபொனி (Symphony)** என்னும் **ஒத்தினி** இசையில் ஐந்தாவதும் ஒன்பதாவதும் ஒரு வயலின் இசைவடிவம், முப்பத்திரண்டு பியானோ தனியிசை வடிவங்கள், பதினாறு நரம்பிசை வடிவங்கள் மிகவும் புகழ்பெற்றவை ஆகும்.

பீத்தோவன் தனது ஒன்பதாம் ஒத்தினி இசையை வாசிக்கும்போது, அந்த இசை அவரது காதுகளில் விழவில்லை. பார்வையாளர்களின் கைத்தட்டல்கூட அவருக்கு எட்டவில்லை. பின்னர், தம் இசையை அனைவரும் பாராட்டுவதை உணர்ந்த பீத்தோவன், பொதுமக்கள் முன்னிலையில் வாசிப்பதை நிறுத்திக்கொண்டார். அந்த அளவிற்கு அவர் காது கேளாமையால் துன்பப்பட்டார்.

காது கேளாமை பிரச்சனையால் வருந்தினாலும், பீத்தோவன் பிறருடன் தமது தொடர்பைக் கைவிடவில்லை. தாம் கூற விரும்புவதை உரையாடல்களாக எழுதிக்காட்டினார். நண்பர்களும் அவரவர் கருத்துகளை உரையாடலாகப் பதிவுசெய்தனர். அதற்கு மறுமொழியாகப் பீத்தோவன் வாய்மொழியாகவோ எழுத்து வாயிலாகவோ விடை கூறுவார். இதுபோன்று ஏறக்குறைய நானூறு உரையாடல் கையேடுகள் அவரிடம் இருந்தன. அவற்றுள் பல இப்போது இல்லை. எனினும் அவற்றுள் சிலவற்றை அவர்தம் அருங்காட்சியகத்தில் காணலாம்.

பீத்தோவனது வாழ்க்கை வரலாற்றை மையப்பொருளாகக் கொண்டு திரைப்படங்களும் எடுக்கப்பட்டுள்ளன. அவருடைய எழுபத்தைந்தாம் ஆண்டின் நினைவாக, பான் நகரில் நினைவுச்சின்னம் வைக்கப்பட்டது. ஜெர்மனியில் இசையமைப்பாளர் ஒருவருக்காக உருவாக்கப்பட்ட முதல் சிலை இதுவாகும்.

**பாஸ்டன்** நகரில் **சிம்ஃபொனி அரங்கம்** அமைக்கப்பட்டது. அதில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தகடுகளில் ஒரே ஒரு தகட்டில் மட்டும் பீத்தோவனது பெயர் இடம்பெற்றுள்ளது. மற்ற தகடுகள் அனைத்திலும் யாருடைய பெயரும் இல்லை. இதனால், பீத்தோவனது சிறப்பு நன்கு விளங்கும்.

பீத்தோவன் பிறந்த பான் நகரில், ஓர் **அருங்காட்சியகம்** அமைக்கப்பட்டுள்ளது. இதே நகரில் பீத்தோவன் இசைவிழா என்ற பெயரில் இசைநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. புதன்கோளின் மீதுள்ள மூன்றாவது கிண்ணக்குழிக்குப் பீத்தோவனது பெயர் சூட்டப்பட்டுள்ளமை, அவருக்குப் பெருமை சேர்க்கிறது.

இசைக்கலைஞர்கள் மறைந்தாலும் அவர்களுடைய இசைக்கு அழிவில்லை. அது என்றென்றும் நமது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கும். மேற்கத்திய இசையில் செவ்விசையாளராக அறியப்பட்ட லுட்விக் வான் பீத்தோவனது பெயரும் என்றென்றும் நம் நெஞ்சில் நிலைத்திருக்கும்.

## பொருள் அறிவோம்

| | | |
|---|---|---|
| 1. செவிகள் | - | காதுகள் |
| 2. பற்று | - | விருப்பம் |
| 3. துயருற்றார் | - | வருத்தப்பட்டார் |
| 4. பிரச்சனை | - | சிக்கல் |
| 5. நெஞ்சம் | - | உள்ளம் |

## பயிற்சிகள்

### அ) விடை காண்போம்

1. லுட்விக் வான் பீத்தோவன் எங்குப் பிறந்தார்?
2. பீத்தோவனின் இசை ஆசிரியர் அவருக்கு எவ்வாறு உதவினார்?
3. பீத்தோவன் வியன்னா நகரில் யாரைச் சந்திக்கச் சென்றார்?
4. பீத்தோவன் எத்தகைய உடற்குறைபாட்டால் துன்பப்பட்டார்?
5. காது கேளாத நிலையிலும் பீத்தோவன், தம் நண்பர்களிடம் எவ்வாறு தொடர்பு கொண்டார்?
6. பீத்தோவனுக்கு ஜெர்மனி நாடு செய்த சிறப்புகள் யாவை?

### ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

**(ஆறு, உடற்குறைபாடு, யோகன் பீத்தோவன், மொசார்ட், கிறிஸ்டியன் கோட்லாப் நீஃப்)**

1. லுட்விக் வான் பீத்தோவனின் தந்தை பெயர் ______________________.
2. பீத்தோவன் முதன்முதலில் இசையமைத்தபோது அவருக்கு வயது ____________.
3. பீத்தோவன் ______________________ பிரச்சனையால் துன்பப்பட்டார்.
4. பீத்தோவனின் இசை ஆசிரியரின் பெயர் ______________________.
5. பீத்தோவன் காலத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற இசையமைப்பாளர் ____________.

### இ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக.

1. லுட்விக் வான் பீத்தோவன் ஒரு சிறந்த பாடகர். ( )
2. இசை, நமது மனத்தை மகிழ்விக்க வல்லது. ( )
3. லுட்விக் வான் பீத்தோவன் தந்தை யோகன் பீத்தோவன் சிறந்த இசை ஆசிரியர். ( )
4. நீஃப்பிடம் முதன்மை இசைக்கலைஞராகப் பணியாற்றினார் பீத்தோவன். ( )
5. பான் நகரில் சிம்ஃபொனி அரங்கம் அமைக்கப்பட்டது. ( )

## 14.3 தெரிந்துகொள்வோம்

### நான்கு சொல் கொண்ட தொடர்கள்



எழிலன் மரத்திலிருந்து
பழங்களைப் பறித்தான்.



சிவா மணலில் வீடு கட்டினான்



காவியா மேடையில் நடனம் ஆடினாள்



கண்ணன் கடலில் வலையை வீசினான்

## பயிற்சிகள்

**அ) படத்திற்குப் பொருத்தமாக நான்கு சொல் கொண்ட தொடர் உருவாக்குக.**










ஆ) படத்தையும் தொடரையும் பொருத்துக.




அக்கா, நாம் விளையாடப் போகலாமா?



நாங்கள் இசைக்கருவி அருங்காட்சியகம் சென்றோம்.



எனக்கு வீணை வாசிக்கப் பிடிக்கும்.



உறவினரை வழியனுப்ப விமானநிலையம் சென்றேன்.

## 14.4 மொழியோடு விளையாடுவோம்

### அ) வட்டத்தில் உள்ள சொற்களைப் பயன்படுத்தித் தொடர் உருவாக்குக.

**எ.கா.**

மீன் | நான்
வாங்கினேன்

1. நான் மீன் வாங்கினேன்.
2. மீன் நான் வாங்கினேன்.
3. வாங்கினேன் நான் மீன்.

மரம் | நிழல்
தரும்

1. ______________________________.
2. ______________________________.
3. ______________________________.

கவின் | பாடல்
பாடினான்

1. ______________________________.
2. ______________________________.
3. ______________________________.

### ஆ) சொல்லை நீட்டித்துத் தொடர்கள் உருவாக்குக.

**எ.கா.**

பெய்தது.
மழை பெய்தது.
நேற்று மழை பெய்தது.
ஊரில் நேற்று மழை பெய்தது.
எங்கள் ஊரில் நேற்று மழை பெய்தது.

### பயிற்சி

வளர்ந்தது.

______________________________

______________________________

______________________________

______________________________

**சுவைச்செய்தி**

திரைப்படக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருது 'ஆஸ்கர்'. இந்த விருதைப் பெற்றவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏ.ஆர். இரகுமான். அவருக்கு, 2009ஆம் ஆண்டிற்கான சிறந்த திரைப்படப் பின்னணி இசைக்காகவும் சிறந்த திரையிசைப் பாடலுக்காகவும் இரண்டு ஆஸ்கர் விருதுகள் ஒரே நேரத்தில் வழங்கப்பட்டன. அவருக்கு விருதைப் பெற்றுத் தந்த திரைப்படம், 'ஸ்லம்டாக் மில்லியனர் (Slumdog Millionaire)'.



ஏ.ஆர். இரகுமான்

## 14.5 கேட்டல் கருத்தறிதல்

### இசை


இசை, மனிதர்களின் நினைவுகளையும் நிகழ்வுகளையும் மீட்டெடுக்கிறது. பலரின் இரவுகளைத் தன் வசமாக்குகிறது. நெடுந்தூரப்பயணங்களில் நம்முடன் துணையாக வருவது இசையே.

இசையின் வடிவம் வேறாகலாம். திரையிசை, கருநாடக இசை, இந்துஸ்தானி, கஜல், நாட்டுப்புற இசை என எண்ணற்ற இசை வடிவங்கள் உள்ளன. உலக அளவில் ஒவ்வொரு நாட்டு மக்களும் தம் பண்பாட்டிற்கு ஏற்றவாறு பல்வேறு வகையான இசைகளை இசைத்து மகிழ்கின்றனர். ராக் இசை, சோல் இசை, பாப் இசை, டிஸ்கோ, சிம்ஃபொனி உள்ளிட்ட பல இசை வகைகள் உலக அளவில் புகழ்பெற்றுள்ளன. மனிதர்களின் வாழ்வில் தொடக்கம் முதல் இறுதிவரை இசையும் பயணம் செய்துகொண்டிருக்கிறது.

### வினாக்கள்

1. இசை எவற்றை மீட்டெடுக்க உதவுகிறது?
2. இசை வடிவங்களின் பெயர்களைக் கூறுக.
3. உலக அளவில் புகழ்பெற்ற இசை வகைகள் யாவை?
4. மனிதர்களின் வாழ்வில் இசை எப்படிப் பயணப்படுகிறது?
5. நீங்கள் விரும்பும் இசை வடிவம் எது?

## 14.6 படம் பார்த்துக் கருத்து கூறல்



## 14.7 செந்தமிழ்ச்செல்வம்

### திருக்குறள்

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

- (குறள் – 66)
- திருவள்ளுவர்

(குழல் - காற்று இசைக் கருவி; யாழ் – கம்பிக்கருவி)

**பொருள்:**

தம் குழந்தைகளின் மழலைப்பேச்சுகளைக் கேட்டு மகிழாதவர்களே, குழலின் ஓசையும் யாழின் ஓசையும் இனியவை எனக் கூறுவர்.

பழமொழி

**பேராசை பெரு நட்டம்.**

## சொல்வதைக் கேட்டு எழுதுக.

உயிர்கள் அனைத்தையும் மகிழ்விப்பது இசை. இது மனிதர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஆற்றல் உடையது. இசைக்கருவிகளின் ஓசையோடு பாடல் இணையும்போது அது செவிகளுக்கு மட்டுமன்றிச் சிந்தைக்கும் விருந்தாகிறது. இசையின் இனிமைக்குத் துணை செய்பவை இசைக் கருவிகள் ஆகும்.

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. நடனம்
2. இசை
3. அன்பு

## 14.8 மொழிபெயர்ப்போம்

இசை என்னும் சொல், தன்வயப்படுத்துவது என்னும் பொருள் தரும். இசையானது, கல் மனத்தையும் கரைந்துருகச் செய்யும். இசையைக் கேட்டு, எல்லா உயிர்களும் இன்புற்று மகிழும். இசையின் அருமையையும் பெருமையையும் உணர்ந்தே தமிழர்கள் இசைத்தமிழைப் போற்றினர்.

---

---

---

## 14.9 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. இசை | - | Music |
| 2. பார்வையாளர்கள் | - | Audience |
| 3. காது கேளாமை | - | Deafness |
| 4. பிரச்சனை | - | Problem |
| 5. உரையாடல் | - | Conversation |
| 6. கையேடு | - | Handbook |
| 7. அருங்காட்சியகம் | - | Museum |
| 8. திரைப்படம் | - | Film |
| 9. நினைவுச்சின்னம் | - | Memorial |
| 10. அரங்கம் | - | Theatre |
| 11. மேற்கத்திய இசை | - | Western music |
| 12. பற்று | - | Desire |

## 14.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் சொற்களைச் சரியாகப் பொருத்திப் பாடலைப் பாடுக.**

| | | | |
|---|---|---|---|
| **வாழ்வோமே** | **மகிழ்வோமே** | **வெல்வோமே** | **நடப்போமே** |
| **கற்போமே** | **செய்வோமே** | **படிப்போமே** | **நினையோமே** |

இன்னிசை கேட்டு ______________________

இன்பமாய் நாம் ______________________

அன்பால் உலகை ______________________

அண்ணல் வழியில் ______________________

பள்ளி சென்று ______________________

பாடம் நன்றாய்ப் ______________________

எவர்க்கும் தீங்கு ______________________

என்றும் நன்மை ______________________

## 14.11 உயர்நிலைத்திறன்

**உரைப்பகுதியில் விடுபட்ட சொற்களை நிரப்பி, முழுமையாக்குக.**


(அறிய, முறையை, இயல்புகளை, ஓவியமாகவோ, ஆற்றல், இயற்கை, கலைஞன்)

கலைஞன் ______________ அமைப்புகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். பொருள்களின் பல்வேறு ______________யும் அவற்றுக்கேற்ப பொருத்தத்தையும் நன்கு ______________ வேண்டும். தன் நினைவில் தோன்றுவனவற்றைக் காவியமாகவோ, ______________, சிற்பமாகவோ வெளிப்படுத்தும் ______________ பெற்றிருத்தல் வேண்டும். கலையின் பொருளையும் வாழ்க்கை ______________யும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். இவை அனைத்தும் ஒன்றாகப் பெற்றவனே ______________ ஆவான்.

## 14.12 செயல்திட்டம்

**உங்களுக்குக் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு ஏதேனும் ஓர் இசைக்கருவி செய்து வருக.**

**இசைக்கருவி (மாதிரி)**



## மீள்பார்வை

**1. கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருந்தும் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**(தஞ்சைப் பெரிய கோவில், பான், நன்னூல், ரௌலண்ட் ஹில், ஃபிரெட்ரிக் ஃப்ரோபெல்)**

1. ஆசிரியரின் இயல்புகள் பற்றி விளக்கும் நூல் ________________.
2. கிண்டர்கார்டன் கல்விமுறையை உருவாக்கியவர் ________________.
3. நவீன அஞ்சல் முறையின் தந்தை என்று அழைக்கப்படுவர் ________________.
4. தமிழர்களின் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு ________________.
5. லுட்விக் வான் பீத்தோவன் பிறந்த ஊர் ________________.

**2. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரியில் விடை எழுதுக,**

1. நன்னூல், ஆசிரியரின் பண்புகளை எவற்றோடு ஒப்பிடுகிறது?
2. ஜே. கிருஷ்ணமூர்த்தியின் கல்விச் சிந்தனைகள் இடம்பெற்ற நூலின் பெயர் என்ன?
3. தொழிற்புரட்சி முதன்முதலில் தோன்றிய இடம் எது?
4. பில்கேட்ஸ் எழுதிய நூல்களின் பெயர்களைக் கூறுக.
5. தஞ்சைப் பெரிய கோவிலின் தனிச்சிறப்புகளுள் ஒன்றாகக் கருதப்படுவது எது?

**3. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. மலை | - | பொதுமொழி |
| 2. ஓசை | - | தன்வினை |
| 3. ஊசியும் நூலும் போல | - | ஒலி |
| 4. பறித்தாள் | - | தனிமொழி |
| 5. வைகை | - | உவமைத் தொடர் |

**4. கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக.**

1. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது தனிமொழி. ( )
2. எழுவாய் ஒரு செயலைச் செய்ய வைப்பது தன்வினை. ( )
3. அரிஸ்டாட்டில், மாணவர்களை உடற்பயிற்சிக்கு அழைத்துச் சென்றார். ( )
4. உடலைக் குறிக்கும் மற்றொரு சொல் மெய். ( )
5. யானையைக் குறிக்கும் மற்றொரு சொல் வேழம். ( )

**5. பின்வரும் தொடர்களைக் கருத்து மாறாமல் மாற்றி எழுதுக.**

1. குமரன் பானை வனைந்தான்.
2. நிலா மாணவர்களுக்குப் பாடம் நடத்தினாள்.
3. நண்பர்கள் விடுமுறை நாள்களில் சுற்றுலா சென்றனர்.
4. கவிதைப் போட்டியில் மாலா முதல் பரிசு பெற்றாள்.
5. கீழே விழுந்ததால் தம்பிக்குக் காலில் அடிபட்டது.

## 6. கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு நான்கு சொல் கொண்ட தொடர் உருவாக்குக.

1. கல்வி - ________________________________.
2. பிளாட்டோ - ________________________________.
3. சிற்பம் - ________________________________.
4. இசைக்கருவி - ________________________________.
5. விவசாயம் - ________________________________.

## 7. கீழ்க்காணும் தன்வினைத் தொடர்களைப் பிறவினைத் தொடர்களாக மாற்றுக.

1. கோபால் மிதிவண்டி ஓட்டக் கற்றுக்கொண்டான்.
2. மாணவர்கள் ஆசிரியர் அறிவுரைக் கேட்டுத் திருந்தினர்.
3. வான்மதி பூக்களைத் தொடுத்து மாலை செய்தாள்.
4. சிவா காகிதத்தில் இராக்கெட் செய்தான்.
5. எழிலரசி பரதம் கற்றாள்.

## 8. பின்வரும் குறிப்புகளைப் படித்து விடை எழுதுக.

| | | |
|---|---|---|
| 1. | புத்தகத்தின் மற்றொரு பெயர் | |
| 2. | நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினம் | |
| 3. | கதிரவனின் மற்றொரு பெயர் | |
| 4. | நம்மைத் தொடர்ந்து வருவது | |
| 5. | தேனை உண்ணும் விலங்கு | |

## 9. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மருத்துவர் முத்துலட்சுமி பிறந்த ஊர் எது?

அ) தஞ்சாவூர் ஆ) மதுரை இ) சிவகாசி ஈ) புதுக்கோட்டை

2. ஏ.ஆர். இரகுமான் அவர்களுக்கு எந்த ஆண்டில் இரண்டு ஆஸ்கார் விருதுகள் வழங்கப்பட்டன.

அ) 2002 ஆ) 2004 இ) 2007 ஈ) 2009

3. புர்ஜ் கலிஃபா எந்த நாட்டில் அமைந்துள்ளது?

அ) துபாய் ஆ) மலேசியா இ) ஆப்பிரிக்கா ஈ) லண்டன்

4. அலெக்ஸாண்டரின் ஆசிரியர் பெயர் என்ன?

அ) ஜான் டூயி ஆ) அரிஸ்டாட்டில் இ) ரூசோ ஈ) பிளாட்டோ

5. தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டியவர் யார்?

அ) முதலாம் இராசராச சோழன் ஆ) சுந்தர சோழன்
இ) உத்தம சோழன் ஈ) ஆதித்த கரிகாலச் சோழன்

## 10. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை எழுதுக,

1. நன்னூல் கூறும் ஆசிரியரின் இயல்புகள் யாவை?
2. பிளாட்டோ பற்றிக் குறிப்பு வரைக?
3. வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட தொழில்நுட்ப மாற்றம் குறித்து விளக்குக?
4. லுட்விக் வான் பீத்தோவன் குறித்து எழுதுக?
5. தமிழர்கள், இல்லங்களை எப்படி வடிவமைத்தனர்?

## 11. பழமொழிகளைப் பொருத்துக.

1. எழுத்து இல்லாதவர் - வார்த்தை அமுதம்.
2. மூத்தோர் சொல் - அடி சறுக்கும்.
3. காய்த்த மரம் - இடம் கொடேல்.
4. யானைக்கும் - கழுத்து இல்லாதவர்.
5. நோய்க்கு - கல் அடிபடும்.

## 12. பின்வரும் திருக்குறளில் விடுபட்ட சொல்லைக் கண்டறிந்து நிரப்புக.

1. இதனை இதனால் ____________ என்றாய்ந்து
   அதனை அவன்கண் விடல்.
2. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
   ____________ பின்செல் பவர்.
3. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
   தூங்காது ____________ வினை.
4. குழலினிது ____________ என்ப தம்மக்கள்
   மழலைச் சொல்கேளா தவர்.
5. மகன்தந்தைக்கு ஆற்றும் ____________ இவன்தந்தை
   என்நோற்றான் கொல்எனும் சொல்.

## 13. பின்வரும் ஆங்கிலச்சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக.

1. Jealousy - ____________
2. Philosopher - ____________
3. Rural - ____________
4. Technology - ____________
5. Museum - ____________
6. Sculpture - ____________
7. Ventilation - ____________
8. Bachelor of Arts - ____________
9. Patience - ____________
10. Naturalism - ____________

**14. பின்வரும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**




**வினாக்கள்**

1. இசை வகுப்புகளை எந்தத் துறை நடத்துகிறது?
2. இசை வகுப்பில் வழங்கப்படும் ஊக்கத் தொகை எவ்வளவு?
3. இசை வகுப்பில் என்னென்ன இசைக்கருவிகள் கற்றுத்தரப்படுகின்றன?
4. இசை வகுப்பு எங்கு நடைபெறுகிறது?
5. விளம்பரத்தில் இடம்பெற்றுள்ள இசைக்கருவிகளின் பெயர்களை எழுதுக.

**15. கீழ்க்காணும் தமிழ்ப்பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. கல்வி என்பது குழந்தைகளை, உடல் மற்றும் மன வளர்ச்சியில் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும்.

2. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கனிம வளம் இன்றியமையாததாகும். நாட்டிற்கு வலுவான தொழில்துறை தளத்தை வழங்குவதற்கு இது ஒரு குறிப்பிடத்தக்க காரணம்.

3. உடல் மற்றும் உள்ளத்தின் திறன்களை ஒருங்கிணைத்து கற்பனை வளத்தை ஊக்குவிப்பது கலை ஆகும். கலைகள் பலவகை. அவற்றுள் காவியம், ஓவியம், கட்டடம், சிற்பம் முதலானவை குறிப்பிடத்தக்கவை.

4. இசை என்பது ஒருமொழியே! இசை நமது மனத்தை மகிழ்விக்க வல்லது. இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை. இசை, மனிதர்களின் நினைவுகளையும் நிகழ்வுகளையும் மீட்டெடுக்கிறது.

5. ரவீந்திரநாத் தாகூர் ஒரு கவிஞர், தத்துவஞானி, இசையமைப்பாளர், எழுத்தாளர், மற்றும் ஒரு கல்வியாளரும் கூட. இவர் 1913ல், அவரது கவிதைத் தொகுப்பான 'கீதாஞ்சலி' என்ற படைப்புக்காக, நோபல் பரிசு பெற்றவர்.

# அடிப்படை மொழித்திறன்கள்
# பாடங்கள் 1–14, இலக்கணம், மொழிப் பயிற்சிகள்

## கேட்டல்

- ❖ புதிய சொற்களையும் தொடர்களையும் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்
- ❖ உரைப்பகுதி, உரையாடல் ஆகியவற்றைக் கேட்டுப் பொருளுணர்தல்.
- ❖ அறக்கருத்துகள் நிறைந்த பாடல்களைக் கேட்டுப் பொருளுணர்தல்.
- ❖ அறம்/நீதி கூறும் கதைப் பகுதிகளைக் கேட்டறிதல்.
- ❖ ஒலி வேறுபாடுடைய சொற்களைக் கேட்டுப் பொருள் அறிதல். (ண,ந,ன/ர,ற/ ல,ழ,ள)
- ❖ இலக்கணக் கருத்துகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல் (பெயரெச்சம், வினையெச்சம், செயப்படுபொருள் குன்றிய/ குன்றா வினைகள், தன்வினை-பிறவினை, மூவகை மொழி, மரபுத்தொடர்கள், உவமைத்தொடர்கள், இணைமொழிகள், நிறுத்தக்குறியீடு, கருத்து மாறாத்தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலசொல் ஒருபொருள்)

## பேசுதல்

- ❖ படம் உணர்த்தும் கருத்தைப் புரிந்துகொண்டு பேசுதல்.
- ❖ அறச்சிந்தனை, நற்பண்பு வளர்க்கும் பாடல்களைப் புரிந்துகொண்டு பேச முயலுதல்.
- ❖ இலக்கணக் கருத்துகளைப் எளிமையாகப் புரிந்துகொள்ளல். புரிந்துகொண்ட கருத்துகளைத் தம் பேச்சில் பயன்படுத்துதல்.
- ❖ படக்காட்சிகள், சூழல்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப உரையாடல் உருவாக்கிப் பேசுதல்.
- ❖ தாம் கேட்ட புதிய சொற்கள், தொடர்கள், உரைப்பகுதிகள் முதலியவற்றின் பொருளுணர வினாக்கள் எழுப்பி விடை காணல்.
- ❖ எளிய இலக்கணக்கூறுகளைப் புரிந்துகொண்டு பேசுதல். (பெயரெச்சம், வினையெச்சம், செயப்படுபொருள் குன்றிய/ குன்றா வினைகள், தன்வினை-பிறவினை, மூவகை மொழி, ஒலிவேறுபாடு உடைய சொற்களின் பொருள் அறிந்து, சரியாக ஒலித்துப் பழகுதல்).
- ❖ மொழியின் நுட்பங்களைப் புரிந்துகொண்டு பொருத்தமாகப் பேசுதல். (மரபுத்தொடர்கள், இணைமொழிகள். நிறுத்தக்குறியீடு, கருத்து மாறாத்தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலசொல் ஒருபொருள், உவமைத்தொடர்கள்)
- ❖ மூன்று, நான்கு, ஐந்து சொல்கொண்டு தொடர் உருவாக்கிப் பேசுதல்.
- ❖ பிறரோடு தயக்கமின்றித் தமிழில் பேசும் திறன் பெறுதல்.

## படித்தல்

- ❖ எளிய பாடல்கள், உரைப்பகுதிகள், தகவல் துளி, சுவைச்செய்திகள், கதைப்பகுதிகள் போன்றவற்றைப் படித்துப் புரிந்துகொள்ளுதல்.
- ❖ படச்சூழல்களைப் புரிந்துகொண்டு, உரையாடல், கதை, சூழல் உருவாக்க முயலுதல்.
- ❖ புதிய சொற்களின் பொருளுணர்ந்து தம் முன்னறிவோடு இணைத்தல்.
- ❖ அறக்கருத்துகள் உணர்த்தும் பாடல்களைப் படித்துப் பொருளுணர்தல்.
- ❖ இலக்கணக் கருத்துகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுதல். (பெயரெச்சம், வினையெச்சம், செயப்படுபொருள் குன்றிய/ குன்றா வினைகள், தன்வினை-பிறவினை, மூவகை மொழி, ஒலிவேறுபாடு உடைய சொற்களின் பொருள் அறிந்து, சரியாக ஒலித்துப் பழகுதல்).
- ❖ எளிய நடைமுறை இலக்கணக்கூறுகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுதல். (மரபுத்தொடர்கள், இணைமொழிகள். நிறுத்தக்குறியீடு, கருத்து மாறாத்தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலசொல் ஒருபொருள், உவமைத்தொடர்கள்)
- ❖ மூன்று, நான்கு, ஐந்து சொல்கொண்ட தொடர்களைப் படித்தல்.
- ❖ விளம்பரம்/ அறிவிப்பு முதலானவற்றைப் படித்துக் கருத்துணர்தல், விடை கூறும் திறன் பெறுதல்.
- ❖ கருத்து விளக்கப்படத்தின் கருத்தறிதல்.
- ❖ பாடநூலுக்கு அப்பாற்பட்டும் தமிழ் நாளிதழ்கள், வார, மாத இதழ்கள், கதை நூல்கள் ஆகியவற்றைப் படிப்பதற்கு ஆர்வம் கொள்ளுதல்.

## எழுதுதல்

- ❖ எளிய எழுத்துப் பயிற்சிகளை மேற்கொள்ளுதல். (சொல்வதனைக் கேட்டு எழுதுதல், சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுதல்.)
- ❖ சிறுசிறு உரைப்பகுதிகளைக் கேட்டும் படித்தும் புரிந்துகொண்டு விடை எழுதுதல்.
- ❖ படச்சூழல்களைப் புரிந்துகொள்ளுதல். படக்காட்சிகளைத் தொடர்புபடுத்தி உரையாடல், கதை, கட்டுரை, பாடல் எழுத முயலுதல்.
- ❖ பாடப்பொருண்மை சார்ந்த படக்காட்சிகளைப் புரிந்துகொண்டு, கருத்துகளைத் தம் சொந்த நடையில் எழுதுதல்.
- ❖ இலக்கணக் கருத்துகளைப் புரிந்துகொண்டு பொருத்தமாக எழுதிப் பழகுதல். (பெயரெச்சம், வினையெச்சம், செயப்படுபொருள் குன்றிய/ குன்றா வினைகள், தன்வினை-பிறவினை, மூவகை மொழி, ஒலிவேறுபாடு உடைய சொற்களின் பொருள் அறிந்து, சரியாக எழுதிப் பழகுதல்).
- ❖ எளிய மொழிப்பயிற்சிகளைப் புரிந்துகொண்டு விடையளித்தல். (ஒலி வேறுபாடுடைய சொற்கள்)
- ❖ மொழியின் நுட்பங்களைப் புரிந்துகொண்டு பொருத்தமாக எழுதுதல். (மரபுத்தொடர்கள், இணைமொழிகள். நிறுத்தக்குறியீடு, கருத்து மாறாத்தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலசொல் ஒருபொருள், உவமைத்தொடர்கள்)
- ❖ மூன்று, நான்கு, ஐந்து சொல்கொண்டு தொடர் உருவாக்குதல்.
- ❖ விடுகதை/ குறுக்கெழுத்துப் புதிர், மொழி விளையாட்டுகள் போன்றவற்றைப் படித்து விடை எழுதுதல்,
- ❖ உரைப்பகுதியைப் படித்துப் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.
- ❖ ஆங்கிலத்திற்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுதல்.
- ❖ சிந்தனைக்கு விருந்து அளிக்கும் படைப்பாற்றல் வளர்செயல்களில் ஆர்வத்துடன் ஈடுபடுதல்.
- ❖ சொற்கள், எளிய தொடர்கள், சிறு உரைப்பகுதி ஆகியவற்றை மொழிபெயர்த்து எழுதுதல்.
- ❖ எளிய செயல்திட்டங்களை மேற்கொள்ளுதல்.
- ❖ குறிப்புகளை விரித்து எழுதுதல், முறை மாறிய தொடர்களை முறைப்படுத்துதல், குறிப்புகளைக் கொண்டு கடிதம், கட்டுரை, உரைப்பகுதி நிறைவு செய்தல். எளிய சொற்களைக் கொண்டு பாடல் எழுதுதல்.

## மேலாய்வாளர் குழு

**முனைவர் மருதூர் அரங்கராசன்,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**முனைவர் மு. சுதந்திரமுத்து,**
பேராசிரியர் (ஓய்வு). சென்னை.

**திரு ச. தமிழ்ச்செல்வன்,**
எழுத்தாளர், சிவகாசி,

## பாடத்திட்ட வல்லுநர் குழு

**முனைவர் ந. நடராச பிள்ளை,**
மேனாள் இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூரு.

**முனைவர் ப. டேவிட் பிரபாகர்,**
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை.

**முனைவர் வ. தனலட்சுமி,**
இணைப்பேராசிரியர், சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி & இலக்கியப் புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி – 605014.

**திருமதி பா. மலர்விழி,**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவூர் - 602025, திருவள்ளூர் மாவட்டம்.

## பாட ஒருங்கிணைப்பாளர் குழு

**முனைவர். கி.வேல்முருகன்,**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை மாவட்டம்,

**முனைவர் க. ஜானகி,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**முனைவர் இரா. சிங்காரவேலன்,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**செல்வி த. திலகவதி**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## மெய்ப்புத் திருத்துநர்

**திரு ம. அமல்ராஜ்,**
பட்டதாரி ஆசிரியர், பல்லவபுரம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி, ஜமீன் இராயப்பேட்டை , செங்கல்பட்டு மாவட்டம்.

## புத்தக வடிவமைப்பு

**Pranvati Digital Services, Chennai**
No. 49, F1, 4th Street, Parvathy Nagar, Old Perungalathur, Chennai - 63

## பாட ஆசிரியர் குழு

**முனைவர் த. சாவித்ரி,**
முதுகலை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, முத்தூர், திருப்பூர்.

**திரு ந. பாலமுருகன்,**
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பெத்தநாயக்கனூர், கோவை

**திரு பி. இராஜேஷ் கண்ணன்,**
முதுகலை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, தும்பல், சேலம்.

**திரு இரா. இராஜசேகர்,**
முதுகலை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, ந.சுப்பையாபுரம், விருதுநகர் மாவட்டம்.

**திரு தே. சிவகணேஷ்,**
முதுகலை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, மிட்டூர், திருப்பத்தூர் மாவட்டம்.

**திருமதி ப. செந்தில் குமாரி,**
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, முதல்மைல், கூடலூர், நீலகிரி மாவட்டம்.

**திரு ரெ. மகேந்திரன்,**
முதுகலை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, ஈசநத்தம், கரூர்

**திரு அ. இரவிச்சந்திரன்,**
முதுகலை ஆசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மணப்பாறை, திருச்சி

**முனைவர் பீ. அந்தோணி லூயிஸ் மத்தியாஸ்,**
தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, சிறுகாம்பூர், திருச்சி.

## ஓவியங்கள்

**திரு கா. தனஸ் தீபக் ராஜன்,**
ஓவியர், நலன் தனஸ் ஸ்டுடியோஸ், சேலம்.

**திரு அச்சுதன் ரவி,**
ஓவிய ஆசிரியர், நாடார் கமிட்டி மேல்நிலைப்பள்ளி, தென்காசி

**திரு இரா . ராஜேஷ்**
42 /2 கண்ணகி தெரு, தூளைமேடு சென்னை - 94

## தட்டச்சுக் குழு

**திருமதி சோ. ஜோதி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திருமதி கோ. கல்விக்கரசி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600025.**

**www.tamilvu.org**

978-81-977380-8-1